பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்

Kalaikkathir

விழியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 வைகாசி 15, திங்கட்கிழமை 29.05.2017 கதிர் 204

Facial, Straightening, Bleaching, Face Massaging, Threading.

WELLA Hair Dressing

Ladies & Gents

வெலா சலூன்

இல.8, நவீன சந்தை, கல்வியங்காடு. யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 077 658 4453, 021 205 4116

## * 151 பேர் பலி * 133 பேர் காயம் * 120 பேர் மாயம்
## * வீடிழந்த நாலரை லட்சம் பேர் 339 முகாம்களில்

# வெள்ளம் வடிகின்றது ஆபத்து நீடிக்கின்றது

## மீண்டும் இன்று முதல் பேய் மழை பெய்யும்?

**கொழும்பு, மே 29**

**தென்னிலங்கையில் கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவுகளில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை நேற்றுப் பிற்பகல் நிலைவரப்படி 151 ஐ எட்டியது. 113 பேர் காணாமற்போயிருக்கின்றனர். அவர்களில் அனேகமானோர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப் படுகின்றது. இந்த அனர்த்தங்களில் சிக்கி 120 பேர் வரை காயமடைந்திருக்கின்றனர்.**

**பல மாவட்டங்களிலும் நேற்று மழையின் சீற்றம் குறைந்து வெள்ளம் வடியத் தொடங்கும் சூழல் நிலவியது. எனினும், இன்றும் நாளையும் இப்பிரதேசங்களில் பேய் மழை கொட்டும் சூழல் இருப்பதாக வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்திருக்கும் அறிவிப்பு ஆபத்து நீடிக்கும் என்பதை வெளிப்படுத்தியுள்ளது.**

நேற்று மாலை புள்ளிவிபரப் படி – இந்த மழையால் ஒரு லட்சத்து 12 ஆயிரத்து 265 குடும்பங்களைச் சேர்ந்த 4 லட்சத்து 38 ஆயிரத்து 295 பேர் இருப்பிடங்களை இழந்துள்ளனர். 250 வீடுகள் முழுமையாக அழிந்துள்ளன. சுமார் இரண்டாயிரம் வீடுகள் பகுதியாக அழிந்துள்ளன.

இடம்பெயர்ந்த மக்கள் 339 நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இடம்பெயர்ந்தோரின் உணவு, சுகாதாரம் மற்றும் தங்குமிடத் தேவைகளைக் கவனிப்பதற்காக

பக்கம் 18 >>>

## அமெ., சீனா, பாக்., இந்தியா ஆகியவற்றிடமிருந்து உதவிகள்

கொழும்பு, மே 29

வெள்ளத்தினால் பாதிக்கப் பட்ட இலங்கை மக்களுக்கு அவசர நிவாரண உதவியாக ஒன்றரைக் கோடி ரூபாவை வழங்குவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

வெள்ளம் மற்றும் நிலச்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர மீட்பு மற்றும் நிவாரண உதவிகளை வழங்குமாறு இலங்கை அரசாங்கம் உலக நாடுகளிடம் கோரியிருந்தது.

இதற்கமைய இந்தியா மூன்று கப்பல்களில் மீட்

பக்கம் 18 >>>



## விநாயகமூர்த்தி காலமானார்

### இன்று கொழும்பில் அஞ்சலி

### நாளை கொக்குவிலில் இறுதிக் கிரியை

யாழ்ப்பாணம், மே 29

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவரும் மூத்த தமிழ் அரசியல்வாதியுமான அப்பாத்துரை விநாயகமூர்த்தி (வயது 84) நேற்று நண்

பக்கம் 18 >>>

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விநாயகமூர்த்திக்கு அஞ்சலி

திருமலை, மே 29

மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயக மூர்த்திக்கு அஞ்சலிசெலுத்தும் அறிக்கை வெளியிட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, யாழ்ப்பாணத்தில் நாளை அவரது பூதவுடல் அவரது இல்லத்தில் வைக்கப்படும் போது நேரில் சென்று அஞ்சலி செலுத்தி, அந்தப் பெரு

பக்கம் 18 >>>

## மூன்றரை லட்சம் மின் இணைப்புகள் முன்னெச்சரிக்கையாகத் துண்டிப்பு

கொழும்பு, மே 29

மழை வெள்ளம் காரணமாக மாத்தறை, காலி, களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி மற்றும் கொழும்பின் பல பாகங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 3 லட்சத்து 36 ஆயிரத்துக்கும் அதிகமான மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன என மின்சக்தி மற்றும் சக்தி வலு அமைச்சு தெரிவித்துள்ளது.

பாதுகாப்புக் கருதியே பல இடங்களில்மின்சாரம்துண்டிக்கப்பட்டிருப்பதாகவும் –

பக்கம் 18 >>>

## கூட்டமைப்பு முன்னாள் எம்.பி. பியசேனா நேற்றுக் கைது!



கொழும்பு, மே 29

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப் பட்ட பின்னர் மஹிந்த அரசு பக்கம் தாவிய அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினர்கே.கே.பியசேன

பக்கம் 18 >>>

## புயல் உருவாகும் ஆபத்து!

வங்காள விரிகுடாவில் மையம் கொண்டுள்ள புயல்காற்று உயர் அமுக்கத்தின் விளைவாக வடக்குத்திசைநோக்கிபயணித்தால் மணிக்கு 80 வீதமாக காற்றின் வேகம் அதிகரித்து சூறாவளி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ள

பக்கம் 18 >>>

## 8 மாவட்டங்களில் மண்சரிவு அபாயம்!

கொழும்பு, மே 29

எதிர்வரும் நாள்களில் 8 மாவட் டங்களில் பெரும் மண்சரிவு ஏற்படலாம் எனத் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் பணிப்பாளர் ஆர்.எம்.எஸ். பண்டார எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இரத்தினபுரி, கேகாலை, காலி, களுத்துறை, மாத்

பக்கம் 18 >>>

## ஒரு மணித்தியாலத்தில் கலவரம்: தாம் நினைத்தால் ஏற்படுத்துவாராம்!

### மிரட்டுகிறார் ஞானசாரர்



கொழும்பு, மே 29

"நான் நினைத்தால் ஒரு மணித்தியாலத்தில் இந்தநாட்டில்கலவரத்தை ஏற்படுத்த முடியும். ஒன்றை நினைவில் வைத்துக்

பக்கம் 18 >>>

## கிணற்றுக்குள் குண்டுகளை வெடிக்கவைக்க முயற்சியா?

வலி.வடக்கு, மே 29


வலி.வடக்கில் தையிட்டியில் உள்ள கிணறு ஒன்றில்பெருமளவு வெடி பொருள்கள் காணப்பட்ட நிலையில், அந்தக்கிணற்றுக்குள்ளேயே குண்டு

பக்கம் 18 >>>



## வேலையில்லாப் பட்டதாரிகளை விடுவிக்க திருமலை நீதிமன்றில் சுமந்திரன் இன்று ஆஜர்

### அங்குள்ள சட்டத்தரணிகள் முன்னிலையாகாததால்தான் அவர்கள் மறியலில்



திருகோணமலை, மே 29

நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டின்பேரில்,திருகோணமலை நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப் பட்டிருக்கும் வேலையில்லாப் பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் வண. தன்னேஞானநந்த தேரர் உட்பட ஐந்து பட்டதாரிகளையும் விடுவிக்கக்கோரும் நகர்த்தல் மனு ஒன்றைத் திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் இன்று ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்வைத்து வாதாடுவார்.

நீதிமன்ற உத்தரவுப் பத்திரத்தைக் கிழித்து எறிந்ததன் மூலம் நீதிமன்றத்தை அவமதித்தனர் என்ற குற்றச் சாட்டிலேயே இவர்களுக்கு அழைப்பாணை

பக்கம் 18 >>>



# ...வரும் காலத்தில் மக்கள் குடிபெயர்வது தடுக்கப்பட வேண்டியது காலத்தின் தேவை!

## வடக்கு மாகாண முதலமைச்சர் வலைப்பாட்டில் தெரிவிப்பு



கிளிநொச்சி, மே 29

மக்கள் பெரியளவில் குடிபெயர்வது, இனியும் இடம்பெறாது தடுத்துநிறுத்தப்படவேண்டும். இது காலத்தின் கட்டாயம்.

- இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

பூநகரி, கிராஞ்சி, வலைப்பாடு கிராம மக்களுக்கான குடிதண்ணீர்த் திட்டத்தை நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றும்போதே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார்

பூநகரிப் பிரதேச சபையின் செயலாளர் மு.இராஜகோபால் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதலமைச்சர் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்துள்ளவை வருமாறு:-

உங்கள் பகுதியில் அதாவது கிராஞ்சி, வேரவில், வலைப்பாட்டுப் பகுதியின் ஒரு பகுதிக்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டம் இன்று நிறைவேறியிருக்கின்றது. இந்தப் பகுதி மக்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகள் பற்றி நாம் அறிந்து வைத்திருக்கின்றோம். அவர்களுடைய தேவைகள் விரைந்து நிறைவேற்றப்படுவதற்கான நிதி மூலோபாயங்கள் கிடைக்கப்பெறும் போது அவை முன்னுரிமை அடிப்படையில் கருத்தில் கொள்ளப்படும்.

உங்கள் பகுதிக்கு ஒரு மயானம் தேவையென கோரப்பட்டிருந்தது. பாடசாலைக்குச் செல்லும் வீதிப் புனரமைப்பு, வேரவில் நூல் நிலையம் போன்ற பல கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டன. அவை அனைத்தும் நிறைவேற்றப்பட்டு விட்டன. வீதி ஒன்று புனரமைக்கப்பட வேண்டும். அவ் வீதிப் புனரமைப்பு தொடர்பாக போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரனுடன் பேசப்பட்டது. தமது திட்டங்களில் இதனையும் சேர்த்துக் கொள்வதாக உறுதியளித்திருந்தார்.

உங்கள் பாடசாலைகளில் தமிழ்ப் பாடம் கற்பிப்பதற்கு ஆசிரியர் இல்லை என்ற ஒரு குறை அப்போது பெரிதாக பேசப்பட்டது. அக் குறைபாடும் நிறைவேற்றப்பட்டிருக்கும் என நம்புகின்றேன். எமது கல்வி அமைச்சர் த.குருகுலராஜா இங்கிருக்கின்றார். அது தொடர்பான மேலதிக விவரங்கள் தேவையெனில் அவரிடம் கேட்கலாம்.

இந்தப் பகுதியில் உள்ள மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்ட வேண்டும். வளம் குறைந்த இந்தப் பகுதியில் வாழும் மக்கள் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அவர்களின் பிள்ளைகளின் கல்வி மிகவும் அத்தியாவசியமானது. கல்வி தான் எமது அழியாச் சொத்து. கடந்த காலங்களில் ஏற்பட்ட யுத்தங்கள், குடிப்பெயர்வு, வீடு வாசல், சொத்துக்கள் இழப்பு என அனைத்தையும் இழந்த போதும் கல்விச் செல்வம் மட்டும் ஏனையவர்களால் கவர முடியாது எம்முடன் இருந்தது. அதனால்தான் எம்மவர் வெளிநாடுகள் சென்று வெற்றியுடன் வாழ்கிறார்கள். வருங்காலம் கல்வியை மையமாக வைத்தே அபிவிருத்தியடையப் போகின்றது.

கடல் நீர் விவசாய நிலங்களுக்குள் புகுவதை தடுப்பதற்காக தடுப்பு அணையொன்று அமைக்கப்பட வேண்டும் எனவும் கோரப்பட்டிருந்தது. அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டனவா என்பது பற்றி நான் அறிய முடியவில்லை. எனவே, இவ் விடயத்தையும் தேவையெனில் சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்கு ஒரு கோரிக்கையாக முன் வைக்கலாம் எனக் கருதுகின்றேன்.

உள்ளூராட்சி மன்றங்களால் முன்னெடுக்கப்படும் இவ்வாறான அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் கிராம மட்டங்களில் வாழக் கூடிய மக்களை அவர்களின் வாழ்வாதார நிலைகளை மேம்படுத்துவதற்கான திட்டங்களாகவே அமைந்திருக்கின்றன.

உள்ளூராட்சி மன்றங்கள் தமது நிர்வாக எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் வாழும் மக்களின் தேவைகள் குறித்தும் அவர்களின் வாழ்வாதார நிலைமைகளை முன்னேற்றுவதற்கு எந்த வகையில் உள்ளூராட்சி மன்றங்கள் உதவ முடியும் என்பதையும் ஆராய்ந்து முடியுமானவரை முன்னேற்றகரமான செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும்.

எம்முடைய மக்கள் கிராமங்களை விட்டு வெளியேறாமல் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும் என்பதே எமது விருப்பம். இயந்திரங்களால் உற்பத்திகளைப் பெருக்குவதிலும் பார்க்க பல மக்கள் சேர்ந்து உற்பத்திகளைப் பெருக்க நடவடிக்கை எடுப்பதையே நாம் விரும்புகின்றோம்.

உங்கள் கிராமங்கள் வளர்ச்சியடைய வேண்டும். அதே நேரம் மக்களின் பெரிய குடிப்பெயர்வு இனியாவது நடைபெறாமல் பார்த்துக்கொள்ளுங்கள். உங்கள் களங்கமற்ற தன்மையைப் பறிகொடுத்து விடாதீர்கள். இறைவன் உங்களை என்றென்றும் காப்பாராக என்று பிரார்த்தித்து அன்புடன் விடைபெறுகின்றேன். - என்றார்.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை மற்றும் பூநகரிப் பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள், வடக்கு மாகாண சபையின் துறைசார் உத்தியோகத்தர்கள், கிராஞ்சி, வலைப்பாடு பகுதி மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

# சர்வதேச போர்க் குற்ற விசாரணை நீதிமன்றின் முன்னாள் நீதிபதி ஒருவர் இலங்கைக்கு விஜயம்



சர்வதேச நீதிமன்றம் மற்றும் கம்போடியாவின் சர்வதேச போர்க் குற்ற விசாரணை நீதிமன்றின் நீதிபதியாகக் கடமையாற்றிய மொடோ னுகூச் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

எதிர்வரும் ஜூன் மாத நடுப் பகுதியில் கூச் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய உள்ள விசாரணைப் பொறிமுறைமை உருவாக்கப்படுவதற்கு ஆலோசனை வழங்குவதே ஜப்பானியரான கூச்சின் இலங்கை விஜயத்துக்கான பிரதான நோக்கம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் நல்லிணக்க முனைப்புக்களுக்கு உதவிகளை வழங்கும் வகையில் இந்த விஜயம் அமையும் என்று கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த சர்வதேச நீதிபதி, பரணகம ஆணைக் குழுவின் ஆலோசனை குழுவிலும் அங்கம் வகித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க உள்ளிட்ட பல்வேறு முக்கியஸ்தர்களை கூச் சந்திக்கவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர், இதற்கு முன்னரும் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார். கூச்சின் இலங்கை விஜயத்தை, ஜப்பானிய தூதரகம் உறுதி செய்துள்ளது. (ஐ)

# இலங்கை கடற்படைத் தளபதிக்கு இந்தியக் கடற்படை கௌரவம்



கொழும்பு, மே 29

இந்தியக் கடற்படை அகடமியில் 338 கடற் படையினர் மற்றும் அதிகாரிகள் பயிற்சி முடித்து வெளியேறும் நிகழ்வில் இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜே குணரத்ன பிரதம அதிதியாகப் பங்கேற்றார்.

இந்த நிகழ்வில் பங்கேற்ற இலங்கைக் கடற் படைத் தளபதி, பயிற்சியை முடித்த கடற்படை யினரின் அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். அதன் பின்னர், பயிற்சி முடித்த அதிகாரிகளுக்கான சின்னங்களையும் சூட்டினார்.

இந்தியக் கடற்படை அகடமியில் பயிற்சி முடித்து வெளியேறும் படையினரின் அணி வகுப்பு நிகழ்வில், வேற்று நாட்டுக் கடற்படை தளபதி ஒருவர் அதிதியாகப் பங்கேற்றிருக்கின்றமை இதுவே முதல்முறையாகும்.

இது இரண்டு நாடுகளுக்கும் இடையில் உள்ள உயர்ந்த பட்ச பாதுகாப்பு ஒத்துழைப்பை வெளிப் படுத்துகிறது என்று இந்திய ஊடகங்கள் செய்தியை வெளியிட்டுள்ளன.

இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட் மிரல் ரவீந்திர விஜே குணரத்ன, இந்தியாவிலேயே உதவி லெப்டினன்ட் தொழிற்நுட்பப் பயிற்சியையும், நீர்மூழ்கி எதிர்ப்பு சிறப்புப் பயிற்சியையும், புதுடெல்லியில் தேசிய பாதுகாப்பு கல்லூரி கற்கைநெறியையும் பயின்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கெங்காதரன் குடியிருப்பு மக்கள் வாழ்வாதார உதவி வழங்கக் கோரிக்கை

கிளிநொச்சி, மே 29

கிளிநொச்சி கெங்காதரன் குடியிருப்பு பகுதியில் உள்ள குடும்பங்களின் வாழ்வாதார நடவடிக்கைகளுக்கு உதவ வேண்டும் என்று பல்வேறு தரப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள அக்கராயன் கெங்காதரன் குடியிருப்பு பகுதியில் தற்போது 150 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இந்தப் பகுதியில் தலா அரை ஏக்கர் காணிகளில் இந்த மக்கள் வாழ்ந்து வருவதால் அந்த காணிகளில் எந்தவித வாழ்வாதார பயிர்ச் செய்கைகளையோ அல்லது ஏனைய வாழ்வாதார செயற்பாடுகளையோ முன்னெடுக்க முடியாதுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். மேலும் அந்தப் பகுதி மக்கள் அன்றாட உணவுக்கே பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கும் நிலை காணப்படுகின்றது.

இந்த நிலையில், இந்த மக்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு தொழில் வாய்ப்புக்களையோ, அல்லது வேறு பயிர்ச்செய்கை காணிகளையோ பெற்றுத் தருமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

# பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட்டாலே வன்முறை ஒழியும்

## பெண்களை வெளியே வர அழைக்கிறார் விஜயகலா



யாழ்ப்பாணம், மே 29

பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டும். பெண்கள் தமது ஆளுமைகளையும் திறமைகளையும் வெளிப்படுத்த முன்வர வேண்டியது அவசியமாகும். கடந்த ஆட்சிக்காலத்தில் வடக்கு, கிழக்கில் திட்டமிட்டவகையில் பெண்கள் மீதான வன்முறைகள் அரங்கேற்றப்பட்டன. ஆனால், தற்போது நல்லாட்சி அரசாங்கத்தில் அந்த நிலைமை மாற்றியமைக்கப்பட்டுள்ளது என்று சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த ஆட்சிக்காலத்தில் முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலை நடத்தப்பட்டது. ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இவ்வாறு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கு நாம் பாடுபட வேண்டும். பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் அதிகரித்தால்தான் பெண்கள் மீதான வன்முறைகளை கட்டுப்படுத்துவதற்கான அழுத்தங்களை நாம் மேற்கொள்ள முடியும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

ஜனநாயக ஆளுகையையும் பொறுப்புக்கூறலையும் பலப்படுத்தல் கருத்திட்டத்தின் உதவியுடன் இலங்கை நாடாளுமன்ற பெண் உறுப்பினர்கள் சபை ஒழுங்கு செய்த பெண்கள் வலுவூட்டல் கருத்தரங்கு நேற்று யாழ்ப்பாணத்திலுள்ள விடுதி ஒன்றில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேய இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். மகளிர் விவகார அமைச்சர் சந்திராணி பண்டார கலந்து கொண்ட இந்த நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் மேலும் கூறியதாவது –

பெண்கள் பிரதிநிதித்துவத்தை அரசியலில் அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கில் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் நடத்தப்படும் இந்தக் கருத்தரங்கிற்கு யூ.எஸ். எய்ட் நிறுவனம் உதவுகின்றமைக்காக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். யுத்தத்தில் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கில் இந்தக் கருத்தரங்கு நடத்தப்படுகின்றமை வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

எமது நாட்டில் 52 வீதமானோர் பெண்களாக இருக்கின்ற போதிலும், அரசியல் பிரதிநிதித்துவம் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிலேயே உள்ளது. நாடாளுமன்றம், மாகாண சபைகள், பிரதேச சபைகள் என்பவற்றை எடுத்துக் கொண்டால் ஒருசில பெண்களே அவற்றில் அங்கம் வகிக்கின்றனர். வட மாகாண சபையை எடுத்துக் கொண்டால் ஒரேயொரு பெண் மட்டுமே இருக்கின்றார். நாடாளுமன்றத்தை எடுத்துக் கொண்டாலும் யாழ்.மாவட்டத்தில் சார்பில் ஒரு பிரதிநிதித்துவமே காணப்படுகிறது.

எனவே, இத்தகைய அரசியல் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க பெண்கள் முன்வர வேண்டும். பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் அதிகரிக்க வேண்டுமானால் அதற்கு ஊடகங்களும் உதவ வேண்டும். நிதிப் பிரச்சினை உட்படப் பல்வேறு பிரச்சினைகளையும் பெண்கள் சந்திக்க வேண்டியுள்ளது. நாம் துணிந்து செயற்பட முன்வரவேண்டும். யுத்தத்தால் நாம் கடும் பாதிப்புக்களை சந்தித்திருந்தோம். வடக்கு, கிழக்கில் சுதந்திரமற்ற நிலையில் நாம் வாழ்ந்து வந்தோம். தற்போது நல்லாட்சியில் கருத்து சுதந்திரம் பிறந்துள்ளது. கடந்த ஆட்சிக் காலத்தில் அரசாங்கத்தில் அங்கம் வகித்தவர்கள் மட்டுமே கூட்டங்களை நடத்தினர். எதிரணியில் உள்ளவர்கள் எதற்கும் அழைக்கப்படுவதில்லை. ஆனால், தற்போது அந்த நிலையை நாம் மாற்றி அமைத் துள்ளோம்.

யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரையில் 7 எம்.பிக்கள் இருந்த போதிலும், அவர்கள் இந்தக் கருத்தரங்கில் பங்கேற்கவில்லை. அவர்களின் சார்பில் பிரதிநிதிகள் கலந்து கொண்டதாகவும் தெரியவில்லை.

ஆனாலும், நல்லாட்சி அரசாங்கமானது மாவட்ட மற்றும் பிரதேச இணைப்புக் குழுக்களுக்குத் தலைவர்களாக கூட்டமைப்பைச் சேர்ந்தவர்களை நியமித்துள்ளது. பாரபட்சமின்றி ஜனாதிபதியும், பிரதமரும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றனர்.

யுத்தத்தால் பெரும் பாதிப்புக்குள்ளான தமிழ் மக்களுக்கு தீர்வு வழங்கப்படுவது அவசியமானதாகும். தீர்வுக்கான முயற்சிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. அதற்காக ஒரு தரப்பினர் குரல் கொடுத்து வருகின்றனர். தீர்வுக்கான முயற்சி இடம்பெறும் அதேவேளை, அபிவிருத்தியிலும் நாம் கவனம் செலுத்த வேண்டும். 30 வருடகால யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு 7 வருடங்கள் ஆகிவிட்டது. ஆனாலும், யுத்தம் முடிந்து ஐந்து வருட காலம் எதுவுமே செய்யப்படவில்லை. கடந்த ஆட்சிக்காலத்தில் திட்டமிட்ட வகையில் போதைவஸ்து பயன்பாடு வடக்கு, கிழக்கில் உருவாக்கப்பட்டது. பாலியல் வல்லுறவுச் செயற்பாடுகளும் அதிகரித்திருந்தன. கொலை, கப்பம் பெறப்பட்டதுடன் அடக்குமுறை பிரயோகிக்கப்பட்டது. கல்விமான்கள் ஊடகவியலாளர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். பெண்கள் மீதும் வன்முறை பிரயோகிக்கப்பட்டது. ஆயுதக் குழுக்கள் கப்பம் மற்றும் கொலைகளில் ஈடுபட்டனர்.

நல்லாட்சி அரசாங்கத்தில் அந்த நிலை மாற்றியமைக்கப்பட்டுள்ளது. முல்லைத் தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களை எடுத்துக் கொண்டால் யுத்தத்தினால் ஒவ்வொரு குடும்பமும் பாதிக்கப்பட்டுள்ளது.

பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அநீதிகளை வெளியில் செல்ல முடியாத நிலைமையும் காணப்படுகிறது. யாழ். குடாநாட்டில் ஊடகத்துறையைச் சேர்ந்த சில ஊடகங்கள் பெண்களை விமர்சிக்கின்றனர். இணையத்தளங்களில் விமர்சன செய்திகளை போட்டுவிட்டு அதனை மீள எடுப்பதற்கு நிதி வழங்க வேண்டிய நிலைமையும் இங்கே காணப்படுகின்றது. கடந்த ஆட்சிக்காலத்தில் ஆயுதக்குழுக்கள் கடத்தல், கப்பம் பெறும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தன. அப்பாவி மக்கள் கும்பிடக் கும்பிட கொலை செய்யப்பட்டனர். ஐக்கிய தேசியக் கட்சியின் இரு உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர். எனது கணவர் மகேஸ்வரனும் படுகொலை செய்யப்பட்டார். மாவட்டத்திலிருந்த ஆயுதக்குழுக்கள் தான் இத்தகைய செயற்பாடுகளை மேற்கொண்டன.

பெண்கள் தொடர்ந்தும் அரசியலில் வெற்றி பெறுவது என்பது கஷ்டமான காரியமாக இருக்கின்றது. பேரியல் அஷ்ரப், ராஜமனோகரி குலேந்திரன் மற்றும் யாழ் . மாவட்டத்தில் வெற்றி பெற்றிருந்த பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரண்டாம் தடவை வெற்றி பெற முடியவில்லை. ஆனால் நான் இரண்டு தடவைகளும் நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டேன். இதற்காக யாழ்., கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு நன்றியை தெரிவிக்கின்றேன்.

இயற்கை அனர்த்தங்களினால் தற்போது பெரும் பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து உதவி செய்ய வேண்டும். யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகப் பெண்ணொருவர் பதவி வகித்திருந்தார். தற்போது யாழ். பல்கலைக்கழகத்திற்கு புதிய துணைவேந்தர் ஒருவரை தெரிவு செய்வதற்கான முயற்சியின்போது அரசியல் தலையீடுகள் இடம்பெற்றுள்ளன. இத்தகைய நிலைமை தொடரக்கூடாது என்றார். (ம-07)

# அரிசியைப் பதுக்கும் வர்த்தகர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுங்கள்

## அமைச்சர் ரிஷாத் அதிகாரிகளுக்கு உத்தரவு



கொழும்பு, மே 29

அரிசியைப் பதுக்கிவைத்துச் செயற்கைத் தட்டுப்பாட்டை உருவாக்கும் வர்த்தகர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் ரிஷாத் பதியுதீன் அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

அரிசி ஆலை உரிமையாளர்களும் அரிசி மொத்த வியாபாரிகளும் அரிசியை பதுக்கி வைத்து செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தியுள்ளனர் எனப் பொது மக்கள், நுகர்வோர் அதிகார சபையிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

அவ்வாறான வர்த்தகர்கள் மற்றும் அரிசி ஆலையின் உற்பத்தியாளர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்குமாறு நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகளுக்கு அமைச்சர் ரிஷாத் பதியுதீன் பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசியை உள்நாட்டு அரிசி வகைகளுடன் கலப்படம் செய்து விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்குமாறு அவர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் இவ்வாறான 2000 வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது (மே மாதத்தில் மட்டும்), 500 பேருக்கும் மேலான பதுக்கல் மற்றும் கலப்பட அரிசி வியாபாரிகள் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம)

# பரு. துறைமுகத்தை விஸ்தரிப்பதற்கு இரு கிராமங்களை சுவீகரிக்கத் திட்டம்

## மக்கள் போர்க்கொடி, இன்று மகஜர் கையளிப்பர்

பருத்தித்துறைத் துறைமுகத்தை விஸ்தரிப்பது என்ற போர்வையில் துறைமுகத்திற்கு அருகே உள்ள இரு கிராமங்களைச் சுவீகரிப்பதற்கு அரசு முயற்சிகளை மேள்கொண்டுள்ளது எனத் தெரியவந்துள்ள நிலையில், அதற்கு எதிராக மக்கள் களத்தில் குதித்துள்ளனர்.

அப்பிரதேச மக்கள் இன்று காலை 9 மணிக்கு பிரதேச செயலாளரிடம் மகஜர் கையளிக்கவுள்ளனர் எனத் தெரிய வருகின்றது.

உலக வங்கியின் சுமார் 700 கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டில் பருத்தித்துறை துறைமுகம் புனரமைக்கப்படவுள்ளது என அரசு தரப்பு தெரிவித்து வருகின்றது.

இந்த நிலையில், அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரனுடன் இணைந்து பருத்தித்துறைத் துறைமுகப் பகுதியைப் பார்வையிட்டிருந்தார்.

இந்நிலையில் மேற்படி துறைமுக விஸ்தரிப்பிற்காக துறைமுகத்தை அண்மித்துள்ள கொட்டடி கிராமத்தை முழுமையாகவும் அதற்கு அருகே உள்ள முனைப் பகுதியில் அரைவாசியையும் சுவீகரிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது.

இதற்கு எதிராகவே பாதிக்கப்பட்ட மக்கள் இன்று மகஜர் கையளிக்கவுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

கடந்த 1996 ஆம் ஆண்டு யாழ்.குடாநாடு படையினரால் கைப்பற்றப்பட்ட பின்னர் பருத்தித்துறை துறைமுகமும் இராணுவ பாதுகாப்பு வலயமாக்கப்பட்டது. அப்போது மேற்படி கொட்டடி மற்றும் முனைப் பகுதி என்பனவும் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டன. அதனால் அங்கிருந்து மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

பல வருடங்களுக்கு பின்னர் தற்போது அந்தப் பகுதி விடுவிக்கப்பட்டு மக்கள் மீளக் குடியமர்ந்துள்ள நிலையில், அந்தப் பகுதியை நிரந்தரமாக சுவீகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றமை அப்பகுதி மக்களிடையே விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (ம)

# 3 சிறுமிகள் மீது துஷ்பிரயோகம்: இரு இளைஞர்கள் மீது தாக்குதல்

## திருகோணமலை மூதூரில் நேற்று பதற்றம்

திருகோணமலை, மே 29

திருகோணமலை மூதூரில் தமிழ்ச் சிறுமிகளைப் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கினர் எனக் கூறப்படும் இரண்டு இளைஞர்கள், அப்பகுதி மக்களால் கட்டிவைத்துத் தாக்கப்பட்டுள்ளனர்.

மூதூர் மல்லிகைத்தீவு பகுதியிலேயே நேற்று இச்சம்பவம் இடம்பெற்றது. இளைஞர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து அந்த இடத்திற்கு பொலிஸார் சென்றனர் எனவும் ஆனால், பிரதேச மக்கள் பொலிஸாரை பிரதேசத்திற்குள் செல்ல அனுமதிக்கவில்லை எனவும் கூறப்படுகின்றது.

இதனால் அப்பகுதியில் நேற்று பதற்றம் நிலவியதாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

கட்டட நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டுள்ள இளைஞர்களே அந்தச் சிறுமிகளை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தினர் எனக் கூறப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட சிறுமிகள் மூவரும் வைத்திய பரிசோதனைகளுக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## மணலும் இனி இறக்குமதி!

நெருக்கடிகள்தாம் தீர்வுக்கான புதிய புதிய வழிகளை - பாதைகளை - தேட வைக்கும் என்பர்.

தமிழர் தாயகத்தில் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுள் ஒன்று கட்டுமானங்களுக்குரிய கட்டு மண் மற்றும் பூச்சு மண் பற்றாக்குறையாகும்.

மண் விற்பனை ஊழல்கள், சூழலியல் பிரச்சினைகள் போன்ற இன்னோரன்ன சிக்கல்களைக் காட்டி, மண் விநியோகம் மற்றும் விற்பனைக்கு அதிக கட்டுப்பாடுகள், ஏக கெடுபிடிகள். அதனால், மண்ணுக்குப் பெரும் கிராக்கி. விளைவு - கட்டுமானங்களுக்கு மண் இல்லை என்ற நிலைமை. சாதாரண தேவைகளுக்கு ஓரிரு கடகங்கள் கூட மண் பெறமுடியாத நிலைமை.

யுத்தத்தின் அழிவுகளிலிருந்து மீண்டெழத் துடிக்கும் தமிழர் தாயகத்தின் உடனடிப் பிரச்சினைகளுள் ஒன்று அழிந்துபோன உட்கட்டுமானங்களை மேம்படும் வகையில் அமைத்தலாகும். அந்த விவகாரம் மணல் தட்டுப்பாட்டால் முடங்கிக் கிடக்கின்றது. சிமெந்து, இரும்புக்கம்பி போன்ற மற்ற விலைகூடிய உள்ளீடுகளை வாங்கிப் பெற்றுக் கொண்டாலும் மணல் மட்டும் முயல் கொம்பாக இடிக்கின்றது.

வீடு, வாசல்களை இழந்து இடம்பெயர்ந்த மக்கள் யுத்தம் முடிந்தது என்று கருதித் தங்கள் பூர்வீக மண்ணுக்குத் திரும்பினால் அங்கு அவர்களது உறைவிடங்கள் அழிந்து போய்க்கிடக்கின்றன. கடன்பட்டோ அல்லது உதவித்திட்டங்களின் கீழ் உரிய நிதி பெற்றோ வீடு, வாசல்களை மீள அமைப்போம் என்றால், மணல் தட்டுப்பாடு அதற்கு முட்டுக்கட்டையாக வந்து நிற்கின்றது.

இதனால் - மணல் பற்றாக்குறையைக் காரணம் காட்டி - மக்கள் ஏற்றுக்கொள்ளாத பொருத்து வீடுகளை நியாயப்படுத்தி - மக்கள் மீது கட்டியடிக்கும் எத்தனமும் முழு வீச்சாக நடக்கின்றது.

கட்டுமானத்துக்கு மணல் பெறுவது என்பது மணலைக் கயிறாகத் திரிக்கும் வேலை என்ற மாதிரியாகிவிட்டது.

இது இங்கு வடக்கு, கிழக்கில்தான் என்றில்லை. இலங்கை முழுவதும் இதுதான் நிலைமை.

குறிப்பாகக் கட்டட நிர்மாண நடவடிக்கைகள் உச்சம் பெற்றிருக்கும் மேல் மாகாணத்தில்தான் மணல் தட்டுப்பாடு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

வெள்ளை மணல் தங்கப் பவுண் போல விலை போகும் அவல நிலைமை இப்போது.

இலங்கையின் கட்டட நிர்மாணத்துறை மணல் பற்றாக்குறை என்ற மோசமான பாதிப்பால் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டிருப்பது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அண்மையில் நடைபெற்ற பொருளாதார நிர்வாகத்துக்கான அமைச்சர் குழுக்கூட்டத்திலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனையடுத்து, கட்டட நிர்மாணத் தொழில் துறையினர் தங்களுக்குத் தேவையான அளவுக்கு மணலை பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதற்கு அனுமதிக்கலாம் என்று மேற்படி அமைச்சரவைக் குழு தீர்மானித்திருப்பதாக அறியப்படுகின்றது.

எனினும், இந்த விடயத்தில் முறைதலையான - பொருத்தமான - வரி விதிப்பு முறைமையைக் கையாளும்படி திறைசேரி கேட்கப்பட்டிருப்பதாகவும் தகவல்.

உள்ளூரில் மணல் அள்ளுவதற்கு அனுமதித்தால் அதில் பெரும் ஊழல்கள், முறைகேடுகள் இடம்பெறுகின்றன என்ற குற்றச்சாட்டுகள், குரல் ஒலிப்புகள் எழுகின்றன.

இனி மணல் இறக்குமதியிலும் அந்த ஊழல்கள், முறைகேடுகள் என்ற குற்றச்சாட்டுகள் எழும்.

நாட்டில் இடம்பெறும் பல வீதி விபத்துகளில் கணிசமானவை மண் ஏற்றி வரும் ரிப்பர்கள் சம்பந்தப்பட்டவை என்று கூறப்படுகின்றது. இனிமேல் கப்பலில் துறைமுகத்துக்கு வந்துசேரும் - இறக்குமதியாகும் - மணலே கட்டுமானங்களுக்கு விநியோகிக்கப்படும் என்று தீர்மானமானால் துறைமுகங்களிலிருந்து நாலாபக்கமும் வாகனங்கள் ஓடித்திரியும் நிலைவரம் உருவாகும்.

அதனால், விபத்துக்களும் அதிகமாகும். மணல் ஏற்றிச் செல்லும் பெரிய - கனரக - வாகனங்களால் வீதிகளும் பாதிக்கப்படும் அபாயம் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

கட்டடத்துக்கான மணலும் இனிமேல் இறக்குமதியாவதைத் தவிர வேறு மார்க்கமில்லை என்பது வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனுக்கு முற்கூட்டியே நன்கு தெரியும் போல.

கடந்த 17 ஆம் திகதி கொழும்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைத் தாம் சந்தித்துப் பேசிய போது இவ்விடயம் குறித்து அவர் பிரஸ்தாபித்திருந்தார்.


வடக்கில் மணல் தட்டுப்பாட்டால் கட்டட நிர்மாணப் பணிகள் உட்பட பல விடயங்கள் ஸ்தம்பித்திருக்கின்றமையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குச் சுட்டிக் காட்டினார் அவர். மணலை விற்பதற்கும், இடமாற்றத்துக்கும் வசதியாக உரப்பை போன்ற சாக்குகளில் அதனைப் பொதி செய்து வழங்க வேண்டும் என்ற யோசனையை அவர் முன்வைத்துள்ளார்.

அப்படிச் செய்வதால் பொதியிடல் கட்டணம் மேலதிகமாகும். அதனால் வேலைவாய்ப்புகள் பெருகும். தரமான மணல், உரிய அளவில், அதற்குரிய விலையில் கிடைக்கின்றமையை உறுதி செய்ய முடியும்.

எது, எப்படியோ மணலைக்கூட இறக்குமதி செய்யும் நிலைமைக்கு நாம் வந்து விட்டோம் என்பது உவப்பான செய்தி அல்ல.

# இயற்கையின் கோரத்தாண்டவம் இனவாதிகளுக்கு படிப்பினையே!

## கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு



நாட்டில் இனவாதம் பேசியவர்களுக்கு இயற்கையின் கோரத் தாண்டவம் ஒரு படிப்பினையாக அமைந்துள்ளது எனக் கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கண்டி சிடி மிஷன் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கடந்த காலங்களில் நாட்டில் சிலர் இனத்துவமாகச் செயற்பட்டு நாட்டில் அசாதாரண சூழ்நிலைகளை ஏற்படுத்த முயற்சிகளை மேற்கொண்டு வந்தனர். இதனால், மூவினமக்களிடையே அசாதாரண நிலை ஏற்பட்டது.

தற்போதும் அந்த நிலை தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. அவர்களின் பின்னணியில் பலர் செயற்பட்டு வருகின்றனர் எனத் தெரிய வருகின்றது.

இவ்வாறானநிலையில் இயற்கையின் கோரத்தாண்டவம் நாட்டை உலுக்கியுள்ள நிலையில், இனவாதம் பேசியவர்களுக்கு இது ஒரு படிப்பினையாக அமைந்துள்ளது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்தம் காரணமாகலட்சக்கணக்கானோர் இடம்பெயர்ந்துள்ள நிலையில், 100 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், நாடளாவிய ரீதியில் நிவாரணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்தச் செயற்பாடுகள் அனைத்தும் இன, மத, மொழிக்கு அப்பால் மனித நேயத்துடன் முன்னெடுக்கப்படுகின்றன.

இதில் தமிழ், முஸ்லிம், சிங்களவர் என வேறுபாடுகள் இல்லை. முகாம்களில் அனைத்து இன மக்களும் ஒரே கூரையின் கீழ் எந்தவிதமான வேறுபாடுகளும் இன்றி இருக்கின்றனர்.

மீட்புப் பணிகளும் இனவாதத்துடன் நடைபெறவில்லை. எல்லோரும் மனிதர்கள் என்றே செயற்பட்டு வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் இனவாதம் பேசிய அனைவருக்கும் இந்த இயற்கையின் கோரத் தாண்டவம் ஒரு படிப்பினையாக இருக்கும் என நினைக்கின்றேன். - என்றார். (எ)

# 2016 ஆம் ஆண்டு பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்பட்ட மாணவர் தொகை அதிகரிப்பு

## மத்திய வங்கி அறிக்கையில் தெரிவிப்பு

இலங்கையில் 2016 ஆம் ஆண்டு புதிதாக உருவாக்கப்பட்ட பீடங்கள் மற்றும் திணைக்களங்களின் மூலம், பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 28 ஆயிரத்து 952 ஆக அதிகரித்துள்ளதாக மத்திய வங்கியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகங்களுக்கு 25 ஆயிரத்து 676 மாணவர்கள் உள்வாங்கப்பட்டனர். இந்த எண்ணிக்கை கடந்த ஆண்டு 28 ஆயிரத்து 952 ஆக அதிகரித்தது.

அதேவேளை, பல்கலைக்கழகங்களில் கற்றுக் கொண்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை 2015 இல் 83 ஆயிரத்து 778 ஆக இருந்தது. இது 2016 இல், 86,061 ஆக அதிகரித்துள்ளது.

அரச பல்கலைக்கழகங்களில் கடந்த ஆண்டில் புதிதாக 9 பீடங்களும், 34 புதிய திணைக்களங்களும், 3 நிலையங்களும் உருவாக்கப்பட்டன.

இந்தக் காலகட்டத்தில் 38 பட்டக்கற்கை நெறிகள் மற்றும் 15 பட்டப் பின் படிப்புக் கற்கை நெறிகளுக்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதி அளித்துள்ளது. (எ)

# முஸ்லிம்களுக்கு தற்போதுள்ள வழிமுறை சர்வதேச உதவியை நாடுவது மாத்திரமே!

## கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பாறுக் கூறுகிறார்

முஸ்லிம்களுக்கு தற்போது உள்ள ஒரேயொரு வழிமுறை சர்வதேச சமூகத்தின் உதவியை நாடுவது மாத்திரமே என்று கிழக்கு மாகாணசபை உறுப்பினர் சிப்லி பாறூக் தெரிவித்தார்.

இலங்கையிலுள்ள அனைத்து சர்வதேச தூதுவராலய உயர்ஸ்தானிகர்கள் ஊடாகவும் தமது பிரச்சினைகளை முஸ்லிம்கள் முன்வைக்க முடியும் என்று அவர் மேலும் கூறினார்.

காத்தான்குடியிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.


இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெறும் செயற்பாடுகள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய நாடுகள் சபை, மனிதஉரிமைகள் ஆணைக்குழு, அரபுலீக் ஆகியவற்றின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட வேண்டும்.

இலங்கையில் தற்போது முஸ்லிம்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்படும் இனவாதச் செயற்பாடுகள், அரசின் மேற்பார்வையின் கீழ் இடம்பெறுகின்றனவா என்ற சந்தேகம் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆட்சிக்காலத்தில் பொதுபலசேனா அமைப்பு முஸ்லிம்களுக்கு எதிராகப் பெரிய அழிவுகளை ஏற்படுத்தியிருந்தது. ஆனால், அந்தக் காலகட்டத்தில் அவர்களின் இத்தகைய அடாவடித்தனமான செயற்பாடுகளை நிறுத்துவதற்கோ அல்லது தட்டிக்கேட்பதற்கோ அந்த அரசு முன்வரவில்லை என்பது அனைவரும் அறிந்ததே.

இவ்வாறான நிலையில், ஆட்சிமாற்றம் ஏற்பட வேண்டும் என்று சிறுபான்மையின மக்கள் ஒன்றிணைந்து செயற்பட்டதன் காரணமாக நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. மிகவும் நம்பிக்கையுடன் எம்மால் உருவாக்கப்பட்ட இந்த ஆட்சி மாற்றத்தில், முஸ்லிம்கள் நம்பிக்கை இழக்கும் நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளது. - என்றார். (எ)

ஒன்றிணைந்து செயற்படுவோம்! விலங்கு விசர்நோய் தவிர்ப்போம்!!
றேவிஸ் தடை ஊசி (ARV) முழுமையாக வழங்கிய பின்பு, மீண்டும் ஆறு மாதத்துக்குள் நாய்க்கடிக்கு உள்ளாகின், மீளவும் ARV ஊசி போட்டுக் கொள்ளத் தேவையில்லை.

வருமுன் காப்போம்! மரணம் தவிர்ப்போம்!!
தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகரசபை.

### நாளை

30.05.2017
செவ்வாய்க்கிழமை

நட்சத்திரம்: பூசம் பி.ப. 5.53 வரை
திதி: பஞ்சமி பி.ப. 3.02 வரை

சுபநேரம் : 10.22 - 11.52 வரை
இராகுகாலம் : 2.52 - 4.22 வரை

# நெகிழ்வுமுறை வேலை நேரத் திட்டம் இலங்கையில் ஜூலை அறிமுகமாகிறது

கொழும்பு, மே 29

அரசபணியாளர்களுக்கான நெகிழ்வு முறை வேலை நேரத் திட்டத்தை இலங்கை அரசு எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தவுள்ளது.

கொழும்பு- பத்தரமுல்ல பிரிவில் முதற்கட்டமாக இந்த நெகிழ்வுமுறை வேலை நேரத் திட்டம் முதன்முறையாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று பெருநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் செயலர் நிகால் ரூபசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த நடைமுறையின் கீழ் பத்தரமுல்ல பிரிவில் உள்ள அரச பணியாளர்கள் காலை 7.30 மணி தொடக்கம் 9.30 மணிவரையானநேரத்துக்குள், எந்த நேரத்திலும் தமது பணிகளைஆரம்பிக்கமுடியும்.

அத்துடன், வேலையை ஆரம்பித்த நேரத்துக்கு ஏற்ப, எட்டு மணிநேரத்தின் பின்னர், பிற்பகல் 3.30 மணி தொடக்கம், 5.30 மணிக்கும் பணிகளை முடித்துக் கொள்ளலாம்.

இதற்கான அமைச்சரவை அனுமதி பெறப்பட்டுள்ளது. போக்குவரத்து நெருக்கடிகளை குறைப்பதற்கே இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று மாதங்களுக்கு இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு, அதன் சாதக பாதகங்கள் ஆராயப்பட்டு ஏனைய இடங்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த திட்டம் தொடர்பாக சுற்றறிக்கை விரைவில் அரச பணியாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று பொது நிர்வாக அமைச்சின் செயலர் ரத்னசிறி தெரிவித்துள்ளார்.

பொதுமக்களைப் பாதிக்காத வரையில் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் தமது வேலை நேர முறைமையை வகுத்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நெகிழ்வு முறை வேலைநேரத் திட்டத்தைத் தனியார்துறையிலும் நடைமுறைப்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஐ)

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை அலுவலகம் திறந்து வைப்பு






கிளிநொச்சி, மே 29

பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைக்குட்பட்ட இயக்கச்சி பொதுச் சந்தைக் கட்டடம் மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தலைமை அலுவலகம் என்பன திறந்து வைக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் ஆகியோரால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண சபையின் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், உலக வங்கி மற்றும் ஆஸ்திரேலிய அரசின் வெளிவிவகார மற்றும் வர்த்தக திணைக்கள நிதி உதவியுடன் வடக்கு கிழக்கு உள்ளூராட்சி சேவைகள் மேம்படுத்தல் திட்டத்தின் கீழ் ஒரு கோடி 47 லட்சம் ரூபா செலவில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைமை அலுவலக கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான சு.பசுபதிப்பிள்ளை, ப.அரியரத்தினம் மற்றும் மாகாண துறைசார் அமைச்சுகளின் செயலாளர்கள், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் ப.ஜெயராணி மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

(ஐ)

# ஆலய உற்சவங்கள்

கோண்டாவில், மே 29

கோண்டாவில் ஈழத்து தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

எதிர்வரும் 8 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இரதோற்சவமும், மறுநாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 4 மணிக்கு வைகாசிப் பொங்கல் விழாவும் இடம்பெறும். (ச)

***

வட்டுக்கோட்டை, மே 29

வட்டுக்கோட்டை, துணவி தெவிண்டப்பிராய் முருகமூர்த்தி தேவஸ்தான மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை பகல் 12.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

எதிர்வரும் 6 ஆம் திகதி சப்பறத்திருவிழாவும், 7 ஆம் திகதி இரதோற்சவமும், மறுநாள் புதன்கிழமை காலை தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (இ)

***

கொடிகாமம், மே 29

மந்துவில் வடக்கு இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளைமறுதினம் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறும்.

எதிர்வரும் 7 ஆம் திகதி புதன்கிழமை சப்பறத்திருவிழாவும், 8 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த் திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (இ)

***

காரைநகர், மே 29

காரைநகர் பாலாவோடை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் வருடாந்த பிரமோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து 11 தினங்கள் இடம்பெறும் இந்த உற்சவத்தில் 5 ஆம் திகதி திங்கட்கிழமை வேட்டைத்திருவிழாவும், மறுநாள் சப்பறத்திருவிழாவும், 7 ஆம் திகதி புதன்கிழமை காலை தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (இ)

***

கிளிநொச்சி, மே 29

கிளிநொச்சி இராநாதபுரம் மாவடி மாரியம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளைமறுதினம் புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

பத்து தினங்கள் இடம்பெறும் உற்சவத்தில் எதிர்வரும் 7 ஆம் திகதி புதன்கிழமை மாலை 4 மணிக்கு வேட்டைத் திருவிழாவும், இரவு 8 மணிக்கு சப்பறத்திருவிழாவும், 8 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (இ)

***

வட அல்வை குருக்கட்டு அரசடி விநாயகர் ஆலய வருடாந்த திருவிழா நாளைமறுதினம் புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். தொடர்ந்து 11 தினங்கள் உற்சவம் நடைபெறும்.

அடுத்த மாதம் 8 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெற உள்ளன. (இ)

## குடிதண்ணீர் பெறுவதில் தெற்கு மக்கள் சிரமத்தில்

தென்னிலங்கையின் ஏராளமான பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியிருக்கும் நிலையில், அங்குள்ள மக்கள் குடி தண்ணீர் இன்றித் தவித்து வருகின்றனர் என்று மீட்புப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய நிலையில் காலி மற்றும் மாத்தறை பிரதேசங்களில் 90 வீதத்துக்கு கூடுதலான பிரதேசங்கள் வெள்ளத்தால் மூழ்கடிக்கப்பட்டுள்ளன.

அங்கு வசித்த பொது மக்கள்வீடுகளின்கூரைகள் மற்றும் மரங்களின் கிளைகளில் தொங்கிக் கொண்டு உயிரைப் பாதுகாக்க பெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை, காலியின் நெளுவை மற்றும் தெனியாய பிரதேசங்களில் சிக்கியிருக்கும் பொது மக்களை மீட்பதில் ராணுவம் மற்றும் கடற்படையினரின் முயற்சிகள் பலனளிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. அந்தப் பிரதேசங்களை சென்றடைவதில் கடற்படையினரின் அதி சக்தி வாய்ந்த படகுகள் இடர்களை எதிர் நோக்கியுள்ளன.

வெள்ளநீரின் வேகம், அதனுடன் இணைந்த பேரலைகள், வேகமான காற்று, என்பன மீட்புப் பணிகளில் தாமதத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. இதன் காரணமாக ராணுவத்தின் கமாண்டோ படைப்பிரிவினரின் மீட்புப் பணிகளை விட விமானப் படை மூலமான மீட்புப் பணிகள் மாத்திரமே இந்தப் பிரதேசங்களில் ஓரளவுக்கு பலனளித்தன என்று கூறப்பட்டது.

காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களுக்கு நாளாந்தம் 20 ஆயிரம் லீற்றர் வரையான குடி தண்ணீர் குறைந்தபட்சமாக தேவைப்படும் நிலை உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

## ரமழான் நற்சிந்தனை

எல்லாப் புகழும் அல்லாஹ்விற்கே...

பேரன்புமிக்க இஸ்லாமிய சகோதரர்களே... இந்த ரமழானுடைய மாதம் பொறுமைக்கும் பாவங்களை விட்டும் தவிர்ந்து இருப்பதற்குரிய மாத மாகும்.

ஒரு மனிதன் நோன்பு நோற்று பொறுமையுடன் பசித்து இருப்பவனாகவும், தாகித்து இருப்பவனாகவும் இருக்கின்றானோ அவனுக்கு அல்லாஹுத்த ஆலா மாபெரும் நற்கூலியை வழங்க காத்துக் கொண்டிருக்கின்றான்.

கண்மணி நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் நோன்பு நோற்ற ஒரு மனிதனின் வாயில் இருந்து வரக்கூடிய வாடையானது அல்லாஹ்விடத்தில் சுவர்க்கத்திலே இருக்கும் கஸ்தூரியை விட நறுமணமிக்கதாக இருக்கின்றது. ஆகவே, சகோதரர்களே நாம் பொறுமையுடன் நல் அமல்கள் செய்து சுவர்க்கத்தை அடைய எம் மனைவருக்கும் அல்லாஹுத்த ஆலா கிருபை செய்வானாக!

29.05.2017
தொழுகை நேரம்
சுபஹ் - 4.28 மு.ப
சன்றைஷ் - 5.50 மு.ப
லுஹர் - 12.08 பி.ப
அஸர் - 3.37 பி.ப
மஃரிப் - 6.25 பி.ப
இஷா - 7.41 பி.ப

# கருவாடு என்ற போர்வையில் கஞ்சா விற்ற தம்பதியர் சிக்கினர்



திருகோணமலை, மே 29

திருகோணமலை - சுமேத்தி ராகம பகுதியில் கருவாடு விற்பனை என்ற போர்வையில் கஞ்சா விற்பனை செய்த தம்பதியர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது, 52 வயதான கணவனும் 48 வயதான மனைவியுமே இவ்வாறு கைதாகியுள்ளனர்.

அவர்கள் வசமிருந்த ஆயிரத்து 500 கிராம் கேரளா கஞ்சாவும் இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளது.

அதனையடுத்து, சந்தேக நபர்கள் வழங்கிய தகவலின் பிரகாரம், திருகோணமலை மரத்தடிச் சந்தியில் 6 கிராம் கேரளா கஞ்சாவுடன் 27 வயதான நபரையும் கைதுசெய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை திருகோணமலை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (எ)

# மூதூர் கிழக்கு பழங்குடியினர் நேற்று ஆர்ப்பாட்டம்

## பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து



திருகோணமலை, மே 29

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் கிழக்கு பழங்குடி மக்கள் தமது பல்வேறு பிரச்சினைகளை நிறைவேற்று மாறு கோரி நேற்று ஆர்ப்பாட்டத்தில ஈடுபட்டனர்.

மூதூர் கிழக்கு பழங்குடி மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் நேற்றுக்காலை மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட வீரமா நகரில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது.

பாட்டாளிபுரத்தில் படையினர் வசமுள்ள காணிகளை விடுவிக்கக் கோரியும், பாட்டாளிபுரம் வீரமா நகர், நல்லூர், சந்தோசபுரம் போன்ற தமது மக்கள் வாழும் கிராமங்களில் உள்ள மக்களுக்கு சமுர்த்தி மறுக்கப்பட்டு வருவதைக் கண்டித்தும், அவற்றை வழங்கக் கோரியும் நல்லூர் கிராமத்தில் தமது மக்களின் வயல் மற்றும் குடியிருப்புக் காணிகளை விடுவிக்கக் கோரியும் இந்த ஆர்ப் பாட்டம் முன்னெடுக்கப் பட்டிருந்தது. (எ)

# கூட்டமைப்பின் ஆட்சிக் காலத்தில் அரசியல் பழிவாங்கல்கள் இடம்பெறா!

## நம்பிக்கை வெளியிட்டார் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கருணாகரம்



மட்டக்களப்பு, மே 29

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆட்சிக்காலத்தில் கிழக்கு மாகாணசபையில் எந்த அரசியல் பழிவாங்கலும் இடம்பெறா என்பதை உறுதியாகக் கூறுகின்றேன் என்று அந்த மாகாணசபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

பெரியகல்லாறு மத்திய கல்லூரிக்கும் மட்டக்களப்பு இந்துக் கல்லூரிக்கும் இடையிலான சிகரங்களின் சமர் கிரிக்கெட் போட்டி நிகழ்வு, பெரியகல்லாறு பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கிழக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கல்வி அமைச்சைப் பொறுப்பேற்றுள்ளது. கிழக்குமாகாணக் கல்வி அமைச்சர், அமைச்சராக வருவதற்கு முன்பாக கல்வித் திணைக்களம் உட்பட கல்வி தொடர்பான சகல பதவிகளையும் வகித்தவர். அவர் காலத்தில் அரசியல் பழிவாங்கல்கள் இடம்பெறக்கூடா என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆட்சிக்காலத்தில் கிழக்கு மாகாணசபையில் எந்தவித அரசியல் பழிவாங்கலும் இடம்பெறா என்பதை உறுதியாகக் கூறுகின்றேன்.

மேலும், அரசியல்வாதிகள் பாடசாலை நிர்வாகத்தில் தலையிடக்கூடாது என்பதை நான் வரவேற்கின்றேன். அரசியல்வாதிகளாக அல்லாமல், மக்கள் பிரதிநிதிகள் பாடசாலை சமூகத்துடன் இணைந்து செல்வதன்மூலமே பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய முடியும்.

அரசியல்வாதிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுக்கு அதிபர்களும் ஆசிரியர்களும் அச்சமடைவதை விட, அதிகாரிகளுக்கு அச்சப்படும் நிலைமை இருக்கின்றது. அந்த நிலைமை மாற வேண்டும்.

அரசியல்வாதிகளுக்கு தேர்தலில் ஆசனம் வழங்குமாறு கோரியும் அமைச்சுப் பதவி வழங்குமாறு கோரியும் கூட்டம் கூட்டமாக அரசியல் தலைமையகத்துக்கு அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்கள் செல்கின்றமையே இதுவரையில் நான் கண்டுள்ளேன். ஆனால், அதிகாரிகளின் இடமாற்றத்துக்காகப் பஸ் பிடித்து அமைச்சர்களிடம் செல்லும் நிலைமை இந்த மாவட்டத்தில் இருக்கின்றது. இந்த நிலைமையும் மாற வேண்டும்.- என்றார். (எ)

# கிழக்கு மாகாண சபைக்கு குறைந்தளவு நிதியே ஒதுக்கீடு

## அவைத் தலைவர் கலபதி சாடல்



திருகோணமலை, மே 29

ஏனைய மாகாண சபைகளுடன் ஒப்பிடுகையில், கிழக்கு மாகாண சபைக்கு மாத்திரம் மத்திய அரசால் மிகக் குறைந்தளவான நிதியே ஒதுக்கப்பட்டுள்ளது என்று கிழக்கு மாகாண சபையின் தவிசாளர் சந்திரதாச கலபதி சாடியுள்ளார்.

மாகாணசபை தவிசாளர்கள் சங்கத்தின் 7ஆவது தவிசாளர்கள் மாநாடு நேற்றுமுன்தினம் திருகோணமலையில் இடம்பெற்றது. அந்த மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டின் அனைத்து மாகாண சபைகளுக்கும் மத்திய அரசால் கூடியளவு நிதி வழங்கப்படுகின்றது. ஆனால், கிழக்கு மாகாண சபைக்கு மாத்திரம் குறைந்தளவு நிதியே ஒதுக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் நாங்கள் கிடைக்கின்ற தொகையை வைத்து வெற்றிகரமாக எமது மாகாண சபையை நடத்திக் கொண்டிருக்கின்றோம்.- என்றார்.

கிழக்கு மாகாணசபை பேரவைச் செயலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாகாண சபைகளின் தவிசாளர்கள் மற்றும் செயலாளர்கள் உட்பட அரச அதிகாரிகள் பலர் பங்கேற்றிருந்தனர். (எ)

# மட்டக்களப்பில் கைபேசிப் பாவனையால் கல்வி, கலாசாரத்தில் மாணவர் சீரழிவு

## மாவட்ட சிறுவர் நன்னடத்தைப் பொறுப்பு அதிகாரி ஆதங்கம்

மட்டக்களப்பு, மே 29

மட்டக்களப்பில் மாணவர்கள் கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்துவதால் கல்வி மாத்திரமன்றி கலாசாரத்திலும் சீரழிவுகள் ஏற்படுகின்றன. இதற்குக் காரணம் பெற்றோரே என்று மட்டக்களப்பு மாவட்ட சிறுவர், பெண்கள் பிரிவு நன்னடத்தைப் பொறுப்பதிகாரி என்.சுசீலா தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் பொலிஸாரால் நடத்தப்பட்ட விழிப்புணர்வுக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு;-

பிள்ளைகளிடம் உள்ள கையடக்கத் தொலைபேசிகளை நீங்கள் பெற்றுக் கொள்ளுங்கள். இல்லாவிட்டால் நீதிமன்ற அனுமதியுடன் பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்களுக்குச் சென்று நாம் கையடக்கத் தொலைபேசிகளைப் பறிமுதல் செய்வோம்.

மட்டக்களப்பு தலைமை பொலிஸ் நிலையத்தால் பாடசாலை மாணவர்களுக்கு 'கைத் தொலைபேசியின் பாதிப்புக்களும், மாவட்டத்தின் கலாசாரச் சீரழிவுகளும்' எனும் தலைப்பில் ஒவ்வொரு பாடசாலைகளிலும் மாணவர்களுக்கு விழிப்புணர்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.


இன்றைய தமிழ் சமூகம் பிள்ளைகள் மீதும், மாணவர்கள் மீதும் கவனக் குறைவால் நடந்து கொள்கின்றது. வயது வந்த பிள்ளைகளையும், பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களையும் ஒவ்வொரு பெற்றோரும் பாடசாலைக்கு முறையாகச் செல்கின்றனரா என்பதைக் கவனிக்க வேண்டும்.

அதேபோன்று உங்கள் பிள்ளைகளாகிய மாணவர்கள் பாடசாலைக்குப் போகின்றேன் என்ற போர்வையில் திரைப்படமாளிகைக்குப் போகின்றார்கள். அவர்களுக்கு படம் பார்ப்பதற்கு பணம் கொடுப்பது பெற்றோரே. இவையெல்லாவற்றையும் பெற்றோர்கள் நிறுத்த வேண்டும். அவ்வாறு நிறுத்தாவிட்டால் மாணவர்களின் கல்வி பாதிப்படைகின்றது.

அத்துடன், மாணவர்களின் எதிர்காலம் முழுமையாகப் பாதிப்படைகின்றது. சில மாணவர்களின் பெற்றோர் மட்டும் தான் தமது பிள்ளைகள் எங்கே மேலதிக வகுப்புக்குச் சென்று வருகின்றார்கள் என்று பூரண கவனம் செலுத்துகின்றார்கள். ஏனைய பெற்றோர்கள் பிள்ளைகள் மீதான கவனம் குறைவடைந்து காணப்படுகின்றது.

எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் கையடக்கத் தொலைபேசிகளை பிள்ளைகளிடமிருந்து வாங்கிக் கொள்ளுங்கள்.- என்றார். (எ)


# பல்கலை மாணவரை விடுவிக்கக் கோரி சுவரொட்டிகள்!



திருகோணமலையில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள பல்கலைக்கழக மாணவர் தலைவர்களை, விடுதலை செய்யுமாறும் உடனடியாக தமக்கானவேலைவாய்ப்பை வழங்குமாறும் கோரி சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

திருகோணமலையில் பல பாகங்களிலும் ஒட்டப்பட்டுள்ள இந்தச் சுவரொட்டிகள், எவரும் உரிமை கோராத வகையில் ஒட்டப்பட்டுள்ளன. (எ)

# தென்னிலங்கை அனர்த்தம் காரணமாக பெரும் சேதங்கள்; 789 வீடுகள் அழிவு







கொழும்பு, மே 29

தென்னிலங்கையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 146 ஆக உயர்ந்துள்ளது. உயிரிழப்புக்களில் இன்னும் அதிகரிப்பு ஏற்பட வாய்ப்புகள் உள்ளன என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

அனர்த்தம் காரணமாக இதுவரை 112 பேர் காணாமல் போயுள்ளனர். மாவட்ட செயலாளர்களின் தகவல்களுக்கு அமைய இந்தத் தகவல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் வெளியிட்டுள்ள புதிய அறிக்கைக்கமைய 49 பேர் காணாமற் போயுள்ளனர் என்று குறிப்பிடப்படுகின்றது.

இந்த அனர்த்தம் காரணமாக ஒரு லட்சத்து 5 ஆயிரத்து 956 குடும்பங்களைச் சேர்ந்த 4லட்சத்து 15 ஆயிரத்து 618 பேர் இடம்பெயர்ந்துள்ளனர் என்று குறிப்பிடப்படுகின்றது. அத்துடன், ஆயிரத்து 602 வீடுகள் பகுதியாகவும் 187 வீடுகள் முழுமையாகவும் சேதமடைந்துள்ளன என்று குறிப்பிடப்படுகின்றது.

14 மாவட்டங்களில் மக்கள் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், களுத்துறை, இரத்தினபுரி, காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாயிரத்து 937 குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆயிரத்துக்கும் அதிகமானோர் 69 முகாம்களில் தங்க வைக்கப்பட் டுள்ளனர் என்று மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தில் வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக இதுவரை 47 பேர் பலியானமையுடன், 4 ஆயிரத்து 815 குடும்பங்களைச் சேர்ந்த 18 ஆயிரத்து 31 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

இந்த மாவட்டத்தில் 44 மத்திய நிலையங்களில் பாதிக்கப்பட்ட 1194 குடும்பங்களை சேர்ந்த 4 ஆயிரத்து 844 பேர் தங்க வைக்கப்பட் டுள்ளனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் இரத்தினபுரி, காவத்தை, பெல்மதுளை, பதுல்பான, கிரியெல்ல, இறக்குவானை, எஹலியகொட, குருவிட்ட, நிவித்திகல, எலபாத்த, கலவான, அயகம, ஆகிய பிரதேசங்களில் வெள்ளம் மற்றும் மண் சரிவுகளில் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது மழை குறைவடைந்துள்ள போதிலும் வெள்ளநீரின் அளவு குறைவடையவில்லை என வடிகாலமைப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, வெள்ள நீரின் அதிகரிப்புக் காரணமாகப் பல கங்கைகள் உடைப்பெடுத்துள்ளன. இதன் காரணமாக பல கிராமங்கள் நீரில் மூழ்கி மயான தேசமாகக் காட்சியளிக்கின்றன.

(ஐ)

## நிவாரணம் சேகரிக்கும் விமானப் படையினர்

இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள தென்னிலங்கை மக்களுக்கான நிவாரணப் பொருள்களைச் சேகரிக்கும் நடவடிக்கையில் விமானப்படையினரும் ஈடுபட்டு வருகின்றனர்.

தென்னிலங்கையின் பல்வேறு பகுதிகளில் சூழ்ந்துள்ள வெள்ளம் மற்றும் கடும் வேகத்தில் வீசும் காற்று காரணமாக இராணுவ, கடற்படை மீட்புக் குழுக்கள் ஓரளவுக்கு மட்டுமே செயற்பட முடிந்துள்ளது என்றும் இந்த நிலையில் விமானப் படை மீட்புப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்றன.

இந்த நிலையில் அவ்வாறு மீட்கப்படும் பொது மக்களுக்கான நிவாரணப் பொருள்களை சேகரிக்கும் பணிகளையும் விமானப் படையினர் முன்னெடுத்துள்ளனர்.

இரத்மலானை விமானப்படை தளத்தில் நிவாரணப் பொருள்களைச் சேகரிப்பதற்கான ஒருங்கிணைப்பு மையம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

உலர் உணவுப் பொருள்கள், குடிதண்ணீர், பெண்களுக்கான சுகாதார வசதிகள் உள்ளிட்ட பொருள்களை இங்கு பொதுமக்கள் கையளிக்க முடியும்.

## தொற்று நோய்களில் இருந்து தடுக்க நடவடிக்கை எடுங்கள்!

### அறிவுறுத்தல் விடுத்தார் பிரதமர்



கொழும்பு, மே 29

சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக நோய்கள் தொற்றுவதில் இருந்து தடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

மத்திய சுகாதார அமைச்சு மற்றும் மாகாண சுகாதார அமைச்சுக்கள் இந்த விடயத்தில் கவனம் எடுக்க வேண்டும்.

இரத்தினபுரி போன்ற சில பிரதேசங்களில் இவ்வாறு அனர்த்தம் ஏற்படும் என்பது குறித்த முன்னறிவித்தல் எதுவும் விடுக்கப்படவில்லை. முன்னறிவித்தல் விடுத்திருந்தால் சில பிரதேசங்களில் ஏற்பட்ட பாதிப்புக்களை தடுத்திருக்க முடியும்.

அத்துடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவது, ஏற்பட்டுள்ள சேதங்கள் குறித்து மதிப்பிடுதல் போன்ற குறுகிய காலத்தில் செய்ய வேண்டிய தேவைகள் உள்ளன.

அரசு முடிந்தளவு அவசரமாக இந்த நிலைமைக்கு முகங்கொடுத்து இந்த சவாலில் இருந்து வெற்றியடையும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

## குடிதண்ணீர், உணவு மூலம் நோய்கள் பரவும் ஆபத்து!

தென்னிலங்கையில் பெய்த அடை மழை காரணமாக மற்றுமொரு பெரிய ஆபத்து ஏற்பட்டுள்ளது என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களாக நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தில் நீர் மற்றும் உணவு மூலம் நோய் பரவும் ஆபத்துக்கள் அதிகமாக காணப்படுகின்றன என்று வைத்தியர்கள் எச்சரித்துள்ளனர்.

இதனால், பொது மக்கள் குடி தண்ணீர் தொடர்பில் இந்த நாள்களில் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தற்போது குடிப்பதற்கு பயன் படுத்தும் நீரை சூடாக்கிய பின்னரே அருந்த வேண்டும் என்று கொழும்பு தேசிய வைத்தியசாலையின் விசேட வைத்தியர் வருண குணதிலக்க தெரிவித்துள்ளார். அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு போத்தலில் அடைக்கப்பட்ட நீரை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)



## மீட்புப் பணியின்போது உயிரிழந்த சிப்பாய்க்கு பதவி உயர்வு கௌரவம்

இயற்கையின் கோரத் தாண்டவம் காரணமாக, மீட்பு பணியில் ஈடுபட்டிருந்த போது காயமடைந்து உயிரிழந்த விமானப்படை சிப்பாய், பதவி உயர்வு வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இந்த விமானப்படை அதிகாரிக்கு நேற்று பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது என்று இலங்கை விமானப் படை தெரிவித்துள்ளது.

இலங்கை விமானப் படையின் 'வாரண்ட்' அதிகாரியாக அவருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

காலியில் வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டவர்களைக் காப்பாற்றும் நடவடிக்கையில் ஈடுபட்ட போது, ஹெலிகொப்டரில் இருந்து கீழே வீழ்ந்த நிலையில் காயமடைந்த விமானப் படை சிப்பாய் பின்னர் உயிரிழந்தார்.

இலங்கை விமானப் படையில் பணியாற்றும் வை.எம்.எஸ்.யாப்பாரத்ன என்ற 38 வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

காலைக்கதிர்



# முதலீடு மற்றும் வர்த்தக மாநாடு கொழும்பில் நாளை ஆரம்பம்!

கொழும்பு, மே 29

முதலீடு மற்றும் வர்த்தக மாநாடு நாளை செவ்வாய்க் கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இலங்கை வர்த்தக சபை ஏற்பாடு செய்துள்ள இந்த மாநாடு கொழும்பு சினமன் க்ராண்ட் ஹோட்டலில் மூன்று நாள்கள் நடைபெறவுள்ளது.

இலங்கையின் பொருளாதார வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்துவது இந்த மாநாட்டின் நோக்கம் என்று இலங்கை வர்த்தக சபை தெரிவித்துள்ளது.

15 நாடுகளைச் சேர்ந்த முன்னணி வர்த்தக நிறுவனங்கள் மற்றும் 50 இற்கு மேற்பட்ட பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்துகொள்ள உள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# தேர்தலில் வெற்றிபெற முடியாதோரே தூண்டிவிடுகின்றனர் இனமுறுகலை!

## பிரதி அமைச்சர் எரான் விக்கிரமரட்ண தெரிவிப்பு



கொழும்பு, மே 29

நேர்மையான தேர்தல் ஒன்றின் மூலம் ஆட்சியைப் பிடிக்க முடியாத நிலையிலுள்ள ஒரு சில அரசியல் வாதிகளே இன முறுகலைத் தூண்டிவிடுகின்றனர். எனவே, அவர்களின் செயற்பாடுகளில் மக்கள் பலியாகி விடக்கூடாது என்று பிரதி அமைச்சர் எரான் விக்கிரமரட்ண தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இனக்கலவரங்களைத் தூண்டிவிடுவதன் மூலம் நாட்டில் அமைதியின்மையைத் தோற்றுவிக்க முயலும் இவர்கள் அதன்மூலம வெளிநாட்டு முதலீடுகள் இலங்கைக்கு வருவதைத் தடுப்பதற்காகச் செயற்பட்டு வருகின்றனர்.

நாடு துரிதமாக அபிவிருத்தி அடைந்து வருவதால் இத்தகைய விஷமிகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. மக்களின் செல்வாக்கை முற்றாக இழந்திருக்கும் அவர்கள் இனங்களுக்கிடையே முறுகலை ஏற்படுத்தி நாட்டின் அமைதியைக் குலைக்க முயல்கிறார்கள்.

அவர்களின் இந்த சதித்திட்டத்தை மக்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.-என்றார். (எ)

# தினசரி ராசி பலன் 29.05.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் வைகாசித் திங்கள் 15 ஆம் நாள். சதுத்தித்திதி பகல் 11.07 மணி பின்னர் பஞ்சமி, நட்சத்திரம் புனர்பூசம் பகல் 1.24 மணி வரை. பின்னர் பூசம். அமிர்தசித்தயோகம் முழுவதும். ராகுகாலம் காலை 7.24 மணி முதல் 8.58 மணி வரை. சுபநேரம் பகல் 11.52 மணி முதல் 1.22 மணி வரை. திவசம் செய்யவேண்டிய திதி. வைகாசி மாத வளர்பிறை பஞ்சமி. பிறந்த நட்சத்திர வழிபாடு: புனர்பூசம் வைகாசி மாத வளர்பிறை பஞ்சமி. பிறந்த நட்சத்திர வழிபாடு: புனர்பூசம்.

## 'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. வருமானக் குறைவுகளைச் சமாளிக்க வேண்டிநேரிடும். வியாபாரிகளுக்கு நஷ்டமடைய நேரிடலாம். மாணவர்களுக்கு கல்வித் தடை உண்டாகும்.

**ரிஷபம்:** இணக்கமான நாள். தொழிலில் இருந்து வந்த தொய்வு நிலை மாறி, மேம்பாடடையும். குடும்பத்தினர், உறவினரின் ஒத்துழைப்புக் கிடைக்கும். சுயதொழிலில் முன்னேற்றமடைவார்கள்.

**மிதுனம்:** அதிர்ஷ்டமான நாள். தனலாபம் பெருகும். உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு சம்பள உயர்வு போன்றவை கிட்டும். கலைஞர்களுக்கு படவாய்ப்புகள் வந்து குவியும்.

**கடகம் :** கவலையான நாள். தனவரவு குறையும் தொழிலில் அலைச்சல்களும், சிரமங்களும் உண்டாகும். குடும்பத்தில் உட்பூசல்கள் காணப்படும்.

**சிம்மம் :** மேன்மையான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். தொழில் வளர்ச்சியில் அதி உச்சநிலையை எட்டுவார்கள்.

**கன்னி:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. வீணான அலைச்சல்கள் உண்டாகும். எதிரிகளால் தொந்தரவுகள் உண்டாகும். பயணத்தின்போது உடைமைகளில் கவனம் தேவை.

**துலாம்:** மேன்மையான நாள் பொருளாதாரம் வளமாக இருக்கும். சொந்த பந்தங்கள் எல்லாம் ஓரிடத்தில் குழுமி உற்சாகம் கொள்கின்ற வாய்ப்பு வரும்.

**விருச்சிகம்:** தீமையான நாள். குடும்பத்தில் பிரச்சினைகள் உண்டாகும். தொழிலில் பல இடையூறுகள் உண்டாகும். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளுக்கு கெடுபிடிகள் அதிகரிக்கும்.

**தனுசு:** மத்திமமான நாள். செலவுகள் அதிகரிக்கும். குடும்பத்தில் அமைதி குன்றும். புது முதலீடுகள் செய்வதால் உள்ள பொருளையும் இழப்பதுடன் எடுக்கும் முயற்சிகளில் தடைகளும் உண்டாகும்.

**மகரம்:** நன்மையான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். வியாபாரிகளுக்கு வெளிநாட்டு வர்த்தகத்தொடர்பு கிட்டும். உத்தியோகத்தர்களுக்கு வேலைத் திறன் மேம்படும்.

**கும்பம்:** ஆக்கபூர்வ பலன்கள் காணப்படுகின்றன. நிதிநிலைமை வளமாக இருக்கும். விட்டுப்போன சொந்தம் எல்லாம் விரும்பி வந்து சேர்ந்துவிடும்.

**மீனம்:** அலைச்சல் மிகுந்த நாள். தொழில் ரீதியான அலைச்சல்கள் அதிகரிக்கும். சிலர் கொடுத்த பணத்தை மீளப்பெறுவதற்கு அலைந்து திரிவார்கள். தொழிலாளர்கள் வேலைவாய்ப்புக்களைத் தேடி அலைவார்கள்.

சந்திராட்டம நாள்: அவிட்டம் 3, 4 சதயம், பூரட்டாதி, 1, 2, 3ஆம் பாதங்கள் ஆகிய நட்சத்திரங்களில் உதயமானோர் அவசியம்நற்கருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும்.

# சிறைகளில் தற்போது அதிகம் இளைஞர்களே இந்நிலை நாட்டின் எதிர்காலத்துக்கு அச்சுறுத்தல்

## இவ்வாறு கூறுகிறார் நீதி அமைச்சர்



கொழும்பு, மே 29

இலங்கைச்சிறைகளிலுள்ள கைதிகளில் பெரும்பாலானோர் இளைஞர்களே என்பது வேதனைக்குரிய விடயம். இந்த நிலை நாட்டின் எதிர்காலத்துக்குப் பெரும் அச்சுறுத்தலாகி விடும் என்று நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நீதிமன்றங்களில் வழக்கு விசாரணைகள் தாமதிக்கப்படுகின்றமையால் நிரபராதிகளான பலர் சிறைகளில் நீண்ட காலமாக அடைக்கப்பட்டுள்ளார்கள். அவ்வாறான நீண்ட சிறைவாசத்தின் பின் அவர்கள் குற்றமற்றவர்கள் என விடுவிக்கப்பட்டாலும் சமுதாயத்தின் பார்வையில் அவர்கள் குற்றவாளிகளாகவே தென்படுகிறார்கள்.

வழக்குகளைத் துரிதப்படுத்துவதற்கான தீவிர முயற்சிகளை அரசு மேற்கொண்டு வருகின்றது. நீண்ட காலமாக இழுபறியில் இருக்கும் சிவில் வழக்குகளில் சம்பந்தப்பட்ட இருசாராரும் சமாதானமாகப் போவதற்கான வழி வகைகள் செய்யப்பட வேண்டும்.

குற்றம்செய்த ஒருவர் பாதிக்கப்பட்டவருக்கு உரிய நட்ட ஈட்டை வழங்குவதற்கும் வழக்கின் சாட்சிகளுக்கான உச்ச பட்ச பாதுகாப்பை வழங்கவும் சட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

நாட்டில் நடக்கும் குற்றச் செயல்களைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிறைச்சாலைகளில் ஏற்படும் நெரிசல்களைத் தவிர்ப்பதற்கு வழக்குகள் துரிதமாக விசாரித்து முடிக்கப்படவேண்டியமை முக்கியம். குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தப்படாவிட்டால் நாட்டின் எதிர்காலம் பாழாகிப் போய்விடும்.-என்றார். (எ)

# இலங்கை-இந்திய மீனவர் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி

## 'டோனா' தொழில்நுட்ப படகுகள் விரைவில் அறிமுகம்



இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறுவதை தடுப்பதற்காக நீண்ட 'டோனா' தொழில் நுட்பப் படகுகளை இந்தியா அறிமுகப்படுத்தவுள்ளது.

இதன்மூலம் இரண்டு நாடுகளுக்கும் இடையில் இருந்து வந்த மீனவர் பிரச்சினை முடிவுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2000 படகுகளுடனான இந்த தொழில்நுட்பத்துக்காக 162 கோடி 10 லட்சம் ரூபா செலவிடப்படவுள்ளது.

மூன்று வருடங்களுக்கு மேற்கொள்ளப்படவுள்ள இந்த டோனா தொழில்நுட்ப படகுகள் மூலம் இலங்கையின் கடல் எல்லைக்கு இந்திய மீனவர்கள் செல்லும் போது அவர்களுக்கு அது எச்சரிக்கையாக உணர்த்தப்படும்.

இதன்மூலம் இந்திய மீனவர்களை ஆழ்கடல் மீன் பிடிக்குச் செல்வதற்கும் அது வழி வகுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தின்படி 2017- 2018 ஆம் ஆண்டு முதல் கட்டத்துக்காக 500 டோனா தொழில்நுட்ப படகுகள் வழங்கப்படவுள்ளன.

இதற்குரிய செலவான 40 கோடி 50 லட்சம் ரூபாவை இந்திய மத்திய அரசும் தமிழக அரசும் பகிர்ந்து கொள்ளவுள்ளன.

2018 - 2019ஆம் ஆண்டின் இரண்டாம் கட்டத்தில் 500 டோனா தொழில் நுட்பப் படகுகளும் வழங்கப்படவுள்ளதுடன் மூன்றாம் கட்டத்தில் ஆயிரம் படகுகளும் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை, ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடவுள்ள மீனவக் குடும்பங்களுக்குத் தமிழக அரசு ஊக்குவிப்பு நிதிகளை வழங்கவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், இந்திய அரசின் இந்தச் செயற்பாடு இலங்கை மீனவர்களுக்கு சிறந்த நிவாரணத்தை அளிக்கும் என்று இலங்கையின் மீன்பிடித்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். இதனால் வருடம் ஒன்றுக்கு 90லட்சம் ரூபாவை சேமிக்கக் கூடியதாக இருக்கும் என்று அமைச்சர் இதன்போது சுட்டிக் காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

பொன்.வேணு கிருஷ்ணா




### மன்செஸ்டர் தாக்குதல்: அமெரிக்க - பிரிட்டன் தகவல் பரிமாற்றம்

மன்செஸ்டர் அரங்க தாக்குதல் குறித்து பிரிட்டன் காவல்துறை பகிர்ந்து கொண்ட புலன் விசாரணை தகவல்களை ஊடகங்களில் கசிய விட்ட அமெரிக்காவிடம் இனிமேல் தகவல்களை பகிர்வதை பிரிட்டன் காவல்துறை நிறுத்திவிட்டது.

நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகையில் குண்டுவெடிப்பு இடிபாடுகள் தொடர்பான புகைப்படங்கள் வெளியானமையால் பிரிட்டன் அதிகாரிகள் கோபமடைந்துள்ளனர்.

குழந்தைகள் உட்பட 22 பேர் கொல்லப்பட்டு, 64 பேர் காயமடைந்த மன்செஸ்டர் தாக்குதல் நடந்த சில மணி நேரத்தில் வெடிகுண்டு தாக்குதலுக்கு காரணம் சல்மான் அபேடி என்று அமெரிக்க ஊடகங்களில் செய்தி வெளியானது.

நேட்டோ நாடுகளின் கூட்டமைப்பு கூட்டத்தில், இதுகுறித்த கவலைகளை பிரிட்டன் பிரதமர் தெரேசா மே, அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பிடம் பகிர்ந்து கொண்டார்.

கிரேட்டர் மன்செஸ்டர் காவல்துறையினர் சாதாரண இருதரப்பு புலனாய்வு உறவுகளை தொடரலாம் என்று நம்பிக்கை வெளியிட்டாலும், தற்போது அமெரிக்கா மீது அதிருப்தியில் இருப்பதாக பி.பி.சி. புரிந்து கொண்டுள்ளது.

களத்தில் விசாரணையை முன்னெடுத்துச் செல்லும் புலனாய்வு அமைப்பு, தேசிய பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை அமைப்புக்கு அந்தத் தகவல்களை அளிக்கிறது. அது பின்னர் அரசின் அனைத்து துறைகளுக்கும் பகிரப்படுகிறது. அத்துடன், பிரிட்டன், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா, நியூசிலாந்து இடையிலான ஐந்து நாடுகள் புலனாய்வு ஒப்பந்தத்தின்படி, (Five Eyes intelligence sharing agreement ) மீதமுள்ள நான்கு நாடுகளுக்கும் புலனாய்வு தகவல்களை பகிர்ந்து கொள்வது வழக்கம்.

லிபிய வம்சாவளியைச் சேர்ந்த 22 வயது அபேடி என்பவரால் நடத்தப்பட்ட மன்செஸ்டர் தீவிரவாதத் தாக்குதல் தொடர்பாக மொத்தம் எட்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்லூரியில் அபேடியை அறிந்த இரண்டு பேர், அவரது தீவிரவாத கருத்துகள் குறித்து அவசரத் தொலைத் தொடர்பு எண்ணுக்கு அழைத்து காவல் துறையினரிடம் பேசினர் என்றும் கூறப்படுகிறது.

சிதறிக்கிடந்த பொருள்களின் (இடிபாடுகளின்) புகைப்படங்கள் இங்கிலாந்தின் விருப்பத்திற்கு எதிராக அபேடியின் அடையாளத்தை, அமெரிக்கா வெளிப்படுத்தியதால் உள்துறை செயலாளர் அம்பர் ரூட் ''எரிச்சலடைந்தார்'' என்றும், இதுபோன்ற செயல்கள் ''மீண்டும் நடக்கக்கூடாது'' என்று எச்சரித்ததாகவும் கூறப்படுகிறது.

எனினும், குண்டு வெடிப்பு நிகழ்ந்த இடத்தில் இருந்து சிதறியுள்ள பொருள்கள் கொண்ட புகைப்படங்களை நியூயோர்க் டைம்ஸ் வெளியிட்டதற்கு, பிரிட்டன் சிவில் நிர்வாக அதிகாரிகள் (வொயிட் ஹால்) மற்றும் பிரிட்டன் காவல்துறை உயரதிகாரிகள் கோபமடைந்துள்ளனர்.

புகைப்படங்கள் கசிந்தமைக்கு வெள்ளை மாளிகை காரணம் அல்ல, அமெரிக்க சட்ட அமுலாக்க அமைப்பே காரணம் என இங்கிலாந்து அதிகாரிகள் நம்புவதாக பி.பி.சி பாதுகாப்பு நிருபர் கோர்டன் கோரேரா தெரிவித்தார்.

அமெரிக்கா இரண்டாவது முறையாக இதுபோன்ற தகவலை கசிய விட்டிருப்பதாகவும், இந்த நடவடிக்கை அமெரிக்காவின் மீது ''அவநம்பிக்கையையும், அதிர்ச்சியையும்'' ஏற்படுத்தியுள்ளதாக பிரிட்டன் அரசுத்தரப்பு தெரிவிக்கிறது.

இது நம்பிக்கையை மீறி ''அங்கீகாரமற்ற வெளிப்படுத்தல்'' என்றும் ''பயங்கரவாதத்துக்கு எதிரான புலன் விசாரணையை'' சிதைத்துவிட்டதாகவும் பிரிட்டனின் தேசிய காவல் துறை தலைவர்கள் சபை கூறுகிறது.

சந்தேக நபர் பற்றிய தகவல்கள் வெளியானமையால், அவருடன் தொடர்புடையவர்களை கைது செய்ய 36 மணி நேரமானது என்றும், எந்தவித துப்பும் இன்றி, பயங்கரவாத எதிர்ப்புத் துறை புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்தனர்.

புகைப்படகசிவு தொடர்பாக கவலை வெளியிட்டுள்ள கிரேட்டர் மன்செஸ்டர் மேயர், இது குறித்து அமெரிக்க தூதரிடம் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

2005, ஜூலை 7 ஆம் திகதியன்று நடைபெற்ற லண்டன் வெடிகுண்டு தாக்குதல் சம்பவம் குறித்த புலனாய்வு தகவல்களை ஏற்கனவே அமெரிக்கா வெளியிட்டிருப்பதை குறிப்பிட்டு, தகவல்களைகசிய விடுகின்றமை அமெரிக்காவுக்கு புதிதல்ல என்றும், அந்த சமயத்தில் லண்டன் காவல்துறைத் தலைவராக இருந்த லோர்ட் பிளேர் கூறுகிறார்.



''அந்த சம்பவத்தின்போது குண்டுகள் தயாரிக்கப்பட்டிருந்ததைப் பற்றிய முழுமையான விவரங்களை அமெரிக்கா வெளியிட்டதற்கு பிறகான நிலையை தற்போதைய தகவல் கசிவு நினைவூட்டுகிறது'' என்று அவர் கூறினார்.

''விஷயங்களை வெளியிடும் விதத்தில் அமெரிக்காவித்தியாசமாகவே செயல்படுகிறது. இது மிகவும் கடுமையான விதிமீறல், எனவே நான் அச்சப்படுகிறேன்'' என்று லார்ட் பிளேர் கூறுகிறார்.

### தகவல்களை அமெரிக்காவுடன் மீண்டும் பகிர பிரிட்டன் ஒப்புதல்

மன்செஸ்டர் தற்கொலைக் குண்டு தாக்குதல் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவரும் ஐக்கிய ராஜ்யத்தின் காவல்துறை அதிகாரிகள் உளவுத்தகவல்களை அமெரிக்க அதிகாரிகளுடன் மீண்டும் பகிர்ந்து கொள்ள முடிவு செய்துள்ளனர்.

மன்செஸ்டர் சம்பவ விசாரணை விவரங்கள் அமெரிக்க ஊடகங்களுக்கு கசிந்தமையை அடுத்து, ஐக்கிய ராஜ்யத்துக்கும் அமெரிக்காவுக்கும் உளவு தகவல்களை பகிர்ந்து கொள்ளும் ஒத்துழைப்பு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது.

அமெரிக்காவிலிருந்து புதிய உத்தரவாதங்கள் அளிக்கப்பட்டதைதொடர்ந்து, புலனாய்வு பகிர்வு மீண்டும் தொடங்கியது என பிரிட்டனின் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை பிரிவின் மூத்த அதிகாரியான மார்க் ரோலே தெரிவித்தார்.

முன்னதாக, அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தகவல் கசிவிற்கு பொறுப்பான தனி நபர்கள் மீது வழக்கு பதியப்பட வேண்டும் என்றார். இந்த விவகாரத்தை நீதித்துறை மற்றும் பிற நிறுவனங்களின் பரிசீலனைக்கு உத்தரவிட்டுள்ளதாக அவர் கூறினார்.

### பிரிட்டனில் பயங்கரவாத அச்சுறுத்தல் நிலை உச்சபட்சமாக அதிகரிப்பு

பிரிட்டனின் பயங்கரவாத அச்சுறுத்தலுக்கான அளவு உச்சபட்சமாக நெருக்கடி நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளது என்றும், மேலும் உடனடி தாக்குதல் நடப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்றும் தெரேசா மே கூறியுள்ளார்.

மன்செஸ்டர் குண்டுவெடிப்பில் சந்தேகநபரான சல்மான் அபேடி தாக்குதல் சம்பவத்தில் தனியொருவராக இயங்கினாரா என்று விசாரணையாளர்கள் முடிவுக்கு வராததமையை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதமர் தெரேசா மே குறிப்பிட்டுள்ளார்.

முக்கிய பகுதிகளை பாதுகாக்க ராணுவப் படையினர் தற்போது அனுப்பப்பட உள்ளனர்.



கடந்த திங்கள் மாலை மன்செஸ்டர் அரங்கத்தில் தற்கொலை குண்டுதாரி ஒருவர் நடத்திய தாக்குதலில் 22 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 59 பேர் காயம் அடைந்தனர்.

### 'விவேகமான பதில் நடவடிக்கை'

பொதுமக்களைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஆயுதமேந்திய காவல்துறை அதிகாரிகளுக்குத் துணையாகப் பொதுமக்கள் அதிகம் கூடும் பொது இடங்களில் படையினர் நிலை நிறுத்தப்படுவார்கள் என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

இசைக்கச்சேரிகள் உட்பட வரவிருக்கும் வாரங்களில் நடைபெறும் பிற நிகழ்ச்சிகளிலும் இராணுவ படையினரை காணலாம் என்று கூறியுள்ள மே, காவல்துறை அதிகாரிகள் கட்டுப்பாட்டின் கீழ் படையினர் இயங்குவார்கள் என்று தெரிவித்துள்ளார்.

அளவுக்கதிகமாக பொதுமக்கள் அச்சமடைவதைதான் விரும்பவில்லை என்றும், ஆனால் அதே சமயம் சரியான தேவைக்கேற்ற மற்றும் விவேகமான எதிர்வினை நடவடிக்கைகள் இவை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உச்சபட்ச அச்சுறுத்தல் அளவு என்பது கூட்டு பயங்கரவாதம் பகுப்பாய்வு மையத்தால் தீர்மானிக்கப்படுகிறது.

இதுவரை இருமுறைதான் உச்சபட்ச அச்சுறுத்தல் நிலை விடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது

### எதிர்ப்புகளைக் கண்டுகொள்ளாத வடகொரியா: அதிபர் கிம் தலைமையில் மீண்டும் ஏவுகணை சோதனை

வடகொரியா மீண்டும் ஒரு ஏவுகணை சோதனையை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளது. வடகொரியா தலைவர் கிம் ஜோங் உன் முன்னிலையில் இந்தச் சோதனை நடைபெற்றது.

இந்தச் சோதனை வெற்றியை பியாங்யாங் அரசு ஊடகமும் உறுதிப்படுத்தியுள்ளது. ஏவுகணை சோதனை வெற்றியடைந்தது என்றும் உடனடியாக அந்த ரக ஏவுகணை இராணுவத்தில் இணைக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக கொரிய மத்திய செய்தி நிறுவனமான கே.சி.என்.ஏ. கூறும்போது, ''புக்குக்சோங்-2 என்ற ஏவுகணை வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது. இந்த ஏவுகணை 500 கி.மீ. தூரம் சென்று தாக்கக்கூடிய திறன் கொண்டது'' எனத் தெரிவித்துள்ளது.

வடகொரியா ஏவுகணை சோதனையை தென் கொரியாவும் உறுதி செய்துள்ளது.

ஒரு வாரத்துக்கு முன்னதாகத்தான் வடகொரியா ஹவாசாங் என்ற ஏவுகணையைச் சோதனை செய்தது. 800 கி.மீ. தூரம் சென்று தாக்கக்கூடிய இந்த ஏவுகணை அணுஆயுதங்களையும் தாங்கிச் செல்லும் திறன் கொண்டது. தற்போது, மீண்டும் ஒரு சோதனை செய்துள்ளது.

வடகொரியா, அடிக்கடி ஏவுகணை சோதனை செய்து உலக நாடுகளை அச்சுறுத்தி வருவதால் அந்நாட்டின் மீது ஐ.நா. பல்வேறு பொருளாதார தடைகளையும் விதித்திருக்கிறது. அமெரிக்காவும் அவ்வப்போது வடகொரியாவுக்கு எச்சரிக்கைகளை விடுத்து வருகிறது.

ஆனால், ஐ.நா., அமெரிக்கா, சீனா இன்னும் பிற நாடுகளின் எதிர்ப்பையும் தாண்டி வடகொரியா மீண்டும் ஏவுகணைச் சோதனை நடத்தியிருக்கிறது.

(கேள்வி தொடரும்...)



# யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணைகாட்டு
# ஸ்ரீஅம்பலவாண விக்னேஸ்
## புனராவர்த்தன ந
# மஹா கும்பாபிஷேக

## மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக...!



வண்ணார்பண்ணையில் காட்டுத்துறைப் பகுதியில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் அம்பலவாண விநாயகப் பெருமானுக்கு இன்று மகாகும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மகிழ்வடைகிறோம்.

விநாயகர் வழிபாடு நம் சமயத்தோடு ஏனைய சமயத்தவர்களுக்கு வழிபடும் தெய்வமாக விளங்கி எளிமையான வழிபாட்டை தன்னுடன் கொண்ட விநாயகர் வேண்டுவார் வேண்டுவதை கொடுக்கின்றனவராக வீற்றிருக்கின்றார். எல்லோரும் விநாயர் வழிபாடு செய்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக. என்றும் வேண்டும் இன்ப அன்பு.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
*ஆதீன குரு முதல்வர், இரண்டாவது குருமகா சந்நிதானம்,*
*நல்லை ஆதீனம், யாழ்ப்பாணம்.*

## விநாயகப் பெருமானின் ஆசி கிட்டட்டும்...!



வண்ணார்பண்ணை காட்டுத்துறை திருவருள்மிகு அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையார் ஆலயம் சிறந்த முறையில் திருப்பணிகள் நடைபெற்று மஹா கும்பாபிஷேகம் நடைபெறவிருக்கிறது. பலசாந்தி வைபவங்கள் பூர்வாங்கமாக நடைபெற்று சிவாச் சார்யார்களின் மந்திரம், கிரியை, பாவனைகள் மூலம் புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

இந்தப் பெரிய கைங்கரியத்துக்கு நிதி உதவி நல்கிய உள்நாட்டு, வெளிநாட்டு தர்மவள்ளல்கள், பக்தர்கள் அனைவருக்கும் இக் கும்பாபிஷேகத்தின் பயனாக சிறப்புற வாழ ஸ்ரீ வல்லவாம்பிகா சமேத அம்பலவாண விநாயகப் பெருமானின் பூரண ஆசி கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

**சிவஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள்**
*அதிபர், தர்ம சாஸ்தா குருகுலம் - காயத்ரீ பீடம், இணுவில், சுன்னாகம்.*

## பெரு மகிழ்ச்சி தருகிறது...!

எம் பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் புதிதாக அமைக்கப்பட்ட இராஜ கோபுரத்துக்கும் எம் பெருமானின் திருவருளால் புனராவர்த்தன நவ குண்டப மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவது எமக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

இந்தத் திருப்பணியில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்ட ஆலய உரிமையாளர்கள், பரிபாலகர்கள் ஆகியோருக்கும் திருப்பணிக்கு நிதியுதவி நல்கிய உபயகாரர்கள், விநாயக அடியார்கள் மற்றும் திருப்பணிச் சபையினர், ஆலயத்தை அழகுற அமைத்த சிற்பக் கலைஞர்கள் ஆகிய அனைவருக்கும் இந்தக் கும்பாபிஷேக நன்னாளில் எம் பெருமானின் பரிபூரணமான திருவருள் கிடைத்து, அனைவரும் சகல வளங்களுடன் நலத்துடனும் வாழ்வாங்கு வாழ எமது நல்லாசிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அனைவருக்கும் எம் பெருமானின் திருவருள் பொலிவதாகுக.

பிரம்மஸ்ரீ இ.சந்தனகோபால சர்மா,
பிரம்மஸ்ரீ இ.குமாரசாமி சர்மா,
பிரம்மஸ்ரீ இ.பகவதீஸ்வர சர்மா,
*ஆலய குருமார்கள்.*

## புண்ணிய கைங்கரியம்...!



பிரணவ வடிவினராகிய விநாயகப் பெருமான் ஊர் தோறும் அமைந்துள்ள ஆலயங்களில் எழுந்தருளி தன்னை நினைந்து வழிபடுவோரது துயர் தீர்ப்பவர். அத்தகைய பெருமைமிக்க விநாயகப் பெருமான் வண்ணார்பண்ணை காட்டுத்துறையில் ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையார் என்ற திருநாமத்துடன் அடியார்களுக்கு அருள்பாலிக்கின்றார். இவ்வூர் மக்கள் எம்பெருமான் மீது அளவற்ற பக்தி கொண்டு வழிபட்டு வருகின்றமையின் பயனாய் ஆலயத் திருப்பணிக்கு பக்தியுடன் மனமுவந்து நிதி வழங்கித் திருவருளுக்குப் பாத்திரராகியுள்ளனர். ஆலய உரிமையாளர், முகாமையாளர், ஆகியோரது முழு அர்ப்பணிப்புடனும் அனுசரணையுடனும் திருப்பணிச் சபை அமைத்து, ஊர் கூடி கோயில் அமைக்கும் கைங்கரியத்தை முன்னெடுத்தமை உன்னதமான சிவபுண்ணியச் செயலாகும். அதன் பயனாய் ஆலயம் பூலோகக் கைலாயம் போன்று புதுப் பொலிவுடன் திகழ்கின்றது.

திருப்பணி செய்வார்க்குச் சிவலோகம் [illegible] என்ற சைவசமயநெறி கூறும் பிரமாணத்திற்கேற்ப ஆலயத்தில் அழகிய மண்டபம், பரிவாரக் கோயில்கள், மணிக்கோபுரம், புதிதாக அமைக்கப்பட்ட இராஜகோபுரம் ஆகியவற்றால் ஆலயம் கலைக் கோயிலாகத் திகழ்கின்றது. எம் பெருமானுக்கு இன்று (29.05.2017) நடைபெறும் மஹா கும்பாபிஷேகத்தைக் காணும் பேறு எமக்குக் கிட்டியுள்ளமை நாம் செய்த தவப்பயனே. ஆலயத்தில் தெய்வீக சாந்நியத்தை ஏற்படுத்திய சிவாச்சாரியர்களது குருவருளும் அனைவருக்கும் கிட்டுவதாக.

கோபுர தரிசனம் கோடி புண்ணியம்
*பேராசிரியர் இலக்கிய கலாநிதி ப.கோபால கிருஷ்ண ஐயர்.*

## எம்மவர்க்கு அருள்பாலிக்கும் விநாயகன்!





விக்கினங்கள் தீர்ப்பவர், வெற்றிகள் தருபவர் விநாயகர். எங்கள் குல தெய்வமாக வண்ணை மாநகரில் காட்டுத்துறையம்பதியில் எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் விநாயகர், எம்மவர்க்கு வாரி வழங்கும் அருட்கடாட்சம் அளவிடற்கரியது. நீண்டகால இடைவெளியில் அடியார்களின் அபிலாஷையின் வெளிப்பாடாக ஏவிளம்பி வருடச் சித்திரைப் புனர்பூசத்தில் புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவது சொற்கள் கடந்த பெரு மகிழ்ச்சியான விடயம்.

இந்த வேளையில் தன உதவி, திரவிய உதவி, சரீர உதவி எனப் பல்வேறு உதவிகள் நல்கிய அத்தனை அன்புள்ளங்களுக்கும் விநாயகரின் பேரருள் கிட்ட வேண்டும் என்று பிரார்த்திக்கிறோம்.

கோபுர தரிசனம் கோடி புண்ணியம்
*த.யோகேஸ்வரன், செயலாளர்,*
*Dr.இ.தயாசிவம், பொருளாளர்.*

## நாம் செய்த பாக்கியம்...!



இன்று குடமுழுக்குக் கண்டு மகாகும்பாபிஷேகம் காணும் வண்ணார் பண்ணை காட்டுத்துறை ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையார் கோயில், ஈழ மணித் திருநாட்டின் வடபுலத்தில் அமைந்துள்ள கோயில்களுக்கு உண்டான அனைத்துச் சிறப்புக்களையும் பெற்ற ஓர் ஆலயமாக விளங்குகின்றது. ஆன்மாவை லயப்படுத்தும் ஆலய வழிபாட்டில், இறைவனுக்கான பல்வேறுபட்ட கிரியைகள் நடைபெறுகின்றமை வழமையான தொன்றே. அப்படியான நிலையிலே இந்த ஆலயமும் இன்று மகா கும்பாபிஷேகம் காண்பதும், அதன் நிறைவில் விநாயகப் பெருமானின் நல்லாசியைப் பெறவிருப்பதும் நாம் அனைவரும் செய்துகொண்ட பெரும் பாக்கியமே ஆகும்.

பொ.வாகீசன்,
*ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்.*

## எம்பெருமானின் திருவருளே துணை...!





யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை காட்டுத்துறையில் கோயில் கொண்டு எழுந்தருளி அருள்பாலிக்கும் ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையாரின் திருவருட்சக்தி மிகவும் உன்னதமானது. எமது மூதாதையர்கள் பக்திபூர்வமாக நிர்மாணித்து உள்ளன்புடன் பரிபாலித்து வந்த இவ்வாலயத்தில் - இந்த பிரதேசத்தில் - நீண்ட காலம் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாகத் திருப்பணிகள் தாமதமடைந்திருந்தன. எம்பெருமானின் திருவருளால் கடந்த வருடம் 06.07.2016 அன்று பாலஸ்தாபனம் நடைபெற்று மிகக் குறுகிய காலத்தில் திருப்பணிகள் இவ்வாலயத்தில நிறைவேற எம்பெருமானின் திருவருளே துணை செய்துள்ளது.

எமது பரிபூரணமான அனுசரணையில் திருப்பணிச்சபையொன்று அமைக்கப்பட்டு அதன் மூலம் ஆலய உபயகாரர்கள், விநாயக அடியார்கள் பக்தியுடன் மனமுவந்து வழங்கிய திருப்பணிகளுக்கான நிதியுதவி பெறப்பட்டு, இவ்வாலய புனருத்தாரணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு, இன்று இவ்வாலயம் புதுப்பொலிவு பெற்றுள்ளமை எமக்கு மகிழ்ச்சியளிக்கின்றது. திருப்பணி கைங்கரியத்தில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்ட அன்பர்களுக்கு விநாயகப் பெருமானின் திருவருள் கிட்டுவதாக.

எம்பெருமானுக்கு இன்று (29.05.2017) நிகழும் இம் மஹா கும்பாபிஷேகத்தைத் தரிசிக்கும் பேறு எமக்குக் கிட்டியுள்ளமை நாம் செய்த தவப்பேறே. திருப்பணிகளை அர்ப்பணிப்புடன் நிறைவேற்றிய திருப்பணிச்சபையினருக்கும், திருப்பணிக்கு நிதியுதவி நல்கிய உபயகாரர்கள், ஊர்மக்கள் ஆகியோருக்கும் ஆலயத்தை அழகுற அமைத்த சிற்பக்கலைஞர்களுக்கும், ஆலய குருமாருக்கும் மற்றும் பல்வேறு வகையில் உதவி நல்கிய அனைவருக்கும் இத் தருணத்தில் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். எம்பெருமானின் திருவருள் அனைவருக்கும் கிடைக்கப் பிராத்திக்கின்றோம்.

திருமதி சிவகுமாரி சோமலிங்ககுமார்,
திருமதி தவனேஸ்வரி ஸ்ரீநிவாசன்.
*ஆலய முகாமையாளரும் உரிமையாளரும்.*



அனுசரணை:
**ஆ.க.கனகசபை குடும்பத்தினர்**

**இன்று திங்கட்கிழ**
**காலை 8.30 - 10.**
**வரையரான சுபவேளை**




திருமூலரால் சிவபூமி எனப் [...] றப்பட்ட இலங்கைத் திருநா[...] வடபால் அமைந்துள்ள யாழ[...] ணத்தில் வண்ணார் பண்ணை[...] விநாயகப் பெருமானுக்குப் பல ஆலய[...] உள்ளன. இவ்வகையில் வண்ணார்[...] ணையில் வடமேற்குப் பகுதியில் அ[...] துள்ள காட்டுத்துறை ஸ்ரீ அம்பல[...] விக்னேஸ்வரப் பிள்ளையாரின் ஆல[...] ஒன்றாகும். இவ்வாலயம் ஏறக்கு[...] நூற்றைம்பது வருட காலத்துக்கு[...] பழைமை வாய்ந்ததாகும். காட்டுத்து[...] வழங்கப்படும் பெயர் இவ்வாலயம் எ[...] காலத்தில் இயற்கை வளத்தைக் கொண்[...] இப்பிரதேசம் அமைந்திருக்கலாம் [...] கருத முடிகின்றது. தெய்வங்களின் [...] விடம் அமைதியாகவும் இயற்கைச் [...] அமைந்ததாகவும் இருக்க வேண்டு[...] பது சாஸ்திர விதிமுறையாகும்.

விநாயகப் பெருமான் மீது ஆழ்ந்த[...] கொண்ட முன்னோர்களால் குல [...] மாக வைத்து வழிபடும் நோக்கில் எழு[...] இவ்வாலயமாகும். வண்ணை வடமே[...] ஓடை ஒழுங்கையில் அமைந்துள்ள[...] வாலயம், பொன்னிறப் பணிக்கனே[...] பிள்ளையார் கோயில் [...]ம், ஸ்ரீ[...] பலவாண விக்னேஸ்வரப் [...] கோயில் என்றும், காட்டுத்துறை அ[...] விநாயகக்கோயில் என்றும் பலபெயர[...] பெற்றுச் சிறப்படைந்தது. கி.பி.1892 [...] ஆண்டில் யாழ்ப்பாண அரசஅதிபரது [...] பற்றிய குறிப்பு உள்ளது. இங்கு க[...] துறைப் பிள்ளையார் கோயில் என்ற [...] டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கோ[...] ஆரம்பம்; கி.பி.1856 ஆம் வருட[...] குறிப்பிடப் பட்டுள்ளது. மூத்ததம்பி [...] நாதர் என்பவரால் ஓலைகள், கற்கள் [...] ஆரம்பத்தில் இந்தக் கோயில் அ[...] கட்டப்பட்டதாக அறிய முடிகின்றது. இவ்வ[...] தின் முகாமையாளராகச் சங்கரப்பி[...] சரவணமுத்து என்பவரது பெயர் [...] டுள்ளது. இரு நேரப் பூசைகள் நடை[...] ஆலயமாகப் பரிணமித்து இன்[...]

# ...ட்டுத்துறை அருள்மிகு
# ...னஸ்வரப் பிள்ளையார் ஆலய
## ...ன நவகுண்டபக்ஷ
## ...கப் பெருவிழா - 29.05.2017

...கட்கிழமை
...0 - 10.45
...பவேளையில்



...வபூமி எனப் போற்
...ங்கைத் திருநாட்டின்
...ந்துள்ள யாழ்ப்பா
...ணார் பண்ணையில்
...குப் பல ஆலயங்கள்
...ல் வண்ணார் பண்
... பகுதியில் அமைந்
...ஸ்ரீ அம்பலவாண
...யாரின் ஆலயமும்
...யம் ஏறக்குறைய
... காலத்துக்குமேல்
... காட்டுத்துறை என
...வ்வாலயம் எழுந்த
...த்தைக்கொண்டதாக
...திருக்கலாம் எனக்
...வங்களின் உறை
... இயற்கைச் சூழல்
...க்க வேண்டும் என்
...யாகும்.
... மீது ஆழ்ந்த பக்தி
...ளால் குல தெய்வ
...நோக்கில் எழுந்ததே
...ணை வடமேற்கில்
...அமைந்துள்ள இவ்
... பணிக்கனோடைப்
...ம், ஸ்ரீ அம்
...வரப் ...ளையார்
...டுத்துறை ஆனந்த
...ம் பலபெயர்க...
.... கி.பி.1892 ஆம்
...ரசஅதிபரதுகோயில்
...து. இங்கு காட்டுத்
...யில் என்ற தலைப்.
...து.இக்கோயிலின்
... ஆம் வருடமாகக்
... மூத்ததம்பி சோம
...ள், கற்கள் கொண்டு
... கோயில் அமைக்
...ன்றது. இவ்வாலயத்
...ச் சங்கரப்பிள்ளை
...து பெயர் தரப்பட்
...சகள் நடைபெறும்
...மித்து இன்றைய

### காட்டுத்துறை பிள்ளையார் காட்டும் கருணை

ஒட்டுத்துறை பிரிவிலுறை காட்டுத்துறை பிள்ளையார்
காட்டும் கருணையினால் கல்விமான்கள் கடைக்காரர்
நாட்டமிகு தொழிலாளர் நியாயவாதியரை உருவாக்கி
ஊட்டமுற அருளளித்து உயர்வுற வைக்கின்றார்

காட்டுத்துறை கணபதியை கரங்குவித்து வணங்குவோர்
விட்டுத் துயர் விலகும் வேதனைகள் வாடிவிடும்
நாட்டமுடன் நாயகனை நாளும் தொழுது நாம்
நாட்டிடுவோம் நல்லமைதி சட்டிடுவோம் நற்பேறு

வானுயர் கோபுரத்துள் விநாயகரை வரவழைக்க
தேனாக மனமுவந்து திரவியங்கள் தந்தோரும்
கோணாது கங்குல்பகல் கோவிலுக்காய் உழைத்தோரும்
தூணாக தலை நிமிர்ந்து துயரின்றி வாழ்ந்திடுவர்

உதித்த புதுப்பொலிவு மதியாய் ஒளிபரப்ப
முதியோரும் மற்றோரும் முன் வந்து உதவி தரப்
பதிவாகுமித் திருநாளில் பக்தி மல ரெடுத்து
துதிப்போம் கணபதியை தேறுதல் பெறுவதற்கு

*விநாயகர் அடியார்*

நிலையில் கொடியேற்றத்துடன் கூடிய மகோற்சம் நிகழும் ஆலயமாக இது வளர்ச்சி கண்டுள்ளது.

மூத்ததம்பி சோமலிங்கம் என்பவர் விநாயகப் பெருமான் மீது கொண்ட அளவற்ற பக்தியினாலும் இக்கோயிலின் வளர்ச்சியில் கொண்டிருந்த ஈடுபாட்டின் காரணமாகவும் ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப்பிள்ளையாருக்குரிய இந்தக் கோயிலைப் பெரிதாகக் கட்டிமுடித்து எம் பெருமானின் திருவருளுக்குப் பாத்திரரானார். இவரது இந்தத் திருக்கோயில் பணிபற்றி இக்கோயிலோடு தொடர்புடைய உறுதி மூலம் அறியலாம்.

ஆலய முகாமையாளராக இருந்த இவருக்குப் பின் இந்தக் கோயிலின் முகாமையாளராக இந்தக் கோயிலைப் பரிபாலித்தவர்கள் நாவற்குழியூர் சோமலிங்கம் என்பவரும் கொக்குவில் சின்னையா என்பவர்களுமாவர். தமது மூதாமையர்கள் போலவே விநாயகர் மீது கொண்ட அளவற்ற பக்தியால் இந்தக் கோயில் வளர்ச்சியில் அவர்களும் பெரும் ஆர்வம் காட்டினர்.

இம்மரபுக்கு அமைவாக சிறந்ததொரு திருக்கோயிற் திருத்தொண்டைக் கட்டிக் காக்கும் பெரும் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர்கள் நாவற்குழியூர் சோமலிங்கம் சடாச்சரம், சின்னையா ஆகியோராவர். இவர்களது திருப்பணி கைங்கரியத்தால் கோயில் பெருப்பிக்கப்பட்டு விமானம், ஸ்தூபி, வெளிமண்டபம் என்பன நிர்மாணிக்கப்பட்டு இந்தக் கோயிலின் மஹா கும்பாபிஷேகம் 1953 ஆம் ஆண்டு சிறப்பாக நடைபெற்றது. இந்து சாதனம் என்ற பத்திரிகை இந்நிகழ்வைச் செய்தியாக வெளியிட்டமை ஓர் அரிய வரலாற்றுப் பதிவாகும். 1953 ஆம் ஆண்டு இந்தக் கோயில் வளர்ச்சியில் ஒரு மைல் கல்லாகும். காலப் போக்கில் 1986 ஆம் ஆண்டு இந்தக் கோயில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. கர்ப்பக்கிரகம் புனரமைக்கப்பட்டு விமானம் வர்ணம் தீட்டப்பட்டது. வசந்த மண்டபம் புதிதாக அமைக்கப்பட்டது.

திருப்பணிகள் நடைபெறும் காலத்தில் ஆலய அறங் காவலர்களில் ஒருவராகிய சி.சரவணமுத்துவின் மறைவையடுத்து அவரது புதல்வர் ஸ்ரீவாஸன் தந்தையின் வழியில் அவர் விட்டுச் சென்ற திருப்பணிகளைத் தொடர்ந்தார். இந்தத் திருப்பணிகள் நிறைவேறியமையையடுத்து இந்த ஆலயத்தில் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் 24.08.1986 அன்று சிறப்பாக நடைபெற்றது.

மஹா கும்பாபிஷேகம் நிறைவுற்றதைத் தொடர்ந்து சடாச்சரம் அவர்கள் துவஜாரோகணாதி மகோற்சவம் நிகழ வேண்டுமென்ற பெருவிருப்பால் அதற்கான திருப்பணிகளைத் தமது தள்ளாத வயதிலும் அயராது ஆற்றி எம் பெருமானது திருவருளுக்குப் பாத்திரமானார். ஆரம்பத்தில் கட்டுத் தேர் ஒன்றை அமைக்கும் வேலை ஆரம்பமானது.

சடாச்சரத்தின் புதல்வர் சோமலிங்கக் குமாரும் தந்தையின் வழியில் திருக்கோயிற் திருப்பணிகளைக் கவனித்து வந்தார்.

(16 ஆம் பக்கம் பார்க்க...)

### தெய்வீக அருள் பொலிவது மனம் மகிழ்வு தருகிறது!



யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை காட்டுத்துறை பதியில் வீற்றிருந்து அருளபுரியும் அம்பலவாண விக்னேஸ்வரப் பெருமான் ஆலயம் அழகிய ராஜகோபுரத்துடன் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு மஹா கும்பாபிஷேகம் இன்று நடைபெறுவதையிட்டு மக்கள் மனங்களில் தெய்வீக அருள் பொலிவதைக் கண்டு மனம் மகிழ்கின்றேன். ஆலய நித்திய பூஜாதுரந்தரர்கள், தர்ம கர்த்தாக்கள், திருப்பணிச் சபையினர் உள்ளிட்ட அனைவருமே மனம் சலிக்காமல் உற்சாகத்துடன் இந்தப் பணியைக் குறுகிய கால இடைவெளியில் நிறைவு செய்தமை விநாயகருடைய திருவருளாகும்.

என் குருநாதர் சிவஸ்ரீ நாலு மகாதேவக் குருக்களின் ஆசிகள் கிடைப்பதன் மூலமே பிரதிஷ்டா பிரதம குருவாக இருந்து செய்கின்ற பாக்கியம் கிட்டியுள்ளமை எனக்கு மகிழ்ச்சியாக அமைகின்றது. அனைத்து சிவாச் சாரியார்கள் உள்ளிட்ட அனைவருக்கும் விநாயகப் பெருமான் திருவருள் கிடைக்கும் எனப் பிரார்த்தித்து நல் ஆசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்பமே சூழ்க! வாழ்க வளமுடன்!

*சிவஸ்ரீ பரமேஸ்வர மனோகரக் குருக்கள்*
*கும்பாபிஷேக பிரதம குரு, வல்வை சிவன் கோயில்.*

### தாழ் பணிந்து பிரார்த்திப்போம்!

எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருள் உருவத்திருமேனி தாங்கி ஆன்மாக்களை ஆட்கொண்டு அருள் வழங்கும் இடம் கோயில். அந்தவகையில் வண்ணைக் காட்டுத்துறை பதியில் விநாயகப் பெருமான் அம்பலவாண விக்னேஸ்வரர் எனும் நாமம் தாங்கி பன்னெடும் காலமாக அருளாட்சி புரிந்து வருகின்றான். அந்த விநாயகரின் ஆலயத்தின் பேரழகும் குடமுழுக்கும் கண்டு மனம் நிறைவடைகின்றது.

எல்லாவற்றுக்கும் மேலாகத் திருப்பணி சிறக்க, மனம், வாக்கு, காயத்தால் ஆதரவு நல்கி, பொருள் பல வழங்கி, அருள் பல பெற்ற அடியவர்கள் பாராட்டுக்குரியவர்கள். இதற்கெல்லாம் தோன்றாத் துணையாய் உடனிருந்து அருள் வழங்கி ஆட்சி புரியும் அம்பலவாண விக்னேஸ்வரப் பெருமான் தாழ பணிந்து எல்லோருக்கும் அவனருள் கிடைக்கப் பிரார்த்திப்போமாக.

வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்

*சிவஸ்ரீ பி.கிருபாகரக் குருக்கள், மஹோற்சவக் குருக்கள், கோப்பாய்.*

### கும்பாபிஷேகம் சிறப்புறட்டும்!



வினை தீர்க்கும் விநாயகப் பெருமான், என் சிந்தையிலே எப்போதும் கோயில் கொண்ட வகையிலேயே, இறையவனை போற்றித் துதிக்க நான் பேறுபெற்றுள்ளேன். இவ்வாறான அருள் கொண்ட இறையவனின் கும்பாபிஷேக வைபவம், வையகம் போற்றும் வண்ணம் சிறப்புற நடைபெற எனது மனமார்ந்த வாழ்த்துக்களை முதற்கண் தெரிவித்துக் கொள்கின்றேன்.

விக்கினங்கள் தீர்க்கும் இந்த விக்னேஸ்வரப் பிள்ளையாரின் கடைக்கண்பார்வையிலே, சுற்றும் சூழ்ந்த மக்கள், சகல சௌபாக்கியங்களும் கிடைக்கப் பெற்று, சகல சித்திகளையும் பெற்று மன நிறைவுடனும், நல வாழ்வுடனும், சுற்றம் சூழ வாழ எல்லாம் வல்ல காட்டுத்துறை அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையாரின் ஆசி வேண்டி வணங்குகின்றேன்.

*திருமதி. ச. மோகநாதன்*
*பிரதிப் பிரதம செயலாளர்- நிர்வாகம்.*

### விழாச் சிறப்புறப் பிரார்த்திக்கிறோம்!



யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை காட்டுத்துறை அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையார் ஆலயத்தின் கும்பாபிஷேகப் பெருவிழா இன்று திங்களன்று நடைபெறவுள்ளதையிட்டு விழா சிறப்புடன் அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். ஆலயங்களின் வரலாற்றிலும் விருத்தியிலும் அப்பிரதேச மக்களின் பங்களிப்பு விருத்தி வரலாறு என்பனவற்றைப் பிரதிபலிக்கும் ஊடகமாக ஆலயங்கள் விளங்குகின்றன. இந்நிலையில் இந்த ஆலயத்தில் குறுகிய காலத்தில் கோபுரம் ஒன்றை நிறுவி நிறைவுறப் புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் நடத்தி மக்களின் வாழ்வியலை மேம்படுத்த எமது மக்கள் மேற்கொண்டுள்ள அரும் பணிகளுக்கு அனைவர் சார்பிலும் எனது சார்பிலும் எனது பாராட்டுக்களையும் நல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆலயத்தின் கும்பாபிஷேகம் நடைபெற்று ஆலயத்துக்கும் மக்களுக்கும் புனிதத்தை ஏற்படுத்தி மக்களது ஆன்மீக வாழ்வு மேம்பட வேண்டும் எனவாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

*பொன்னம்பலம் தயானந்தன்,*
*பிரதேச செயலர், யாழ்ப்பாணம்.*

### எம் பெருமானின் அருள் பெற்றுய்வோம்!



நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் வண்ணார் பண்ணையில் எழுந்தருளியிருந்து அருள்பாலிக்கும் காட்டுத்துறை அருள் மிகு ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையார் ஆலயம் முழுமையாகப் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் செய்ய எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் அருள் கிடைத்தமையையிட்டு பிரதேச செயலர் என்றரீதியில் பெருமகிழ்வு அடைகின்றேன். 2017 வைகாசி மாதம் 29 ஆம் திகதி கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றுப் பக்தர்கள் வருகை தந்து கும்பாபிஷேக தரிசனம் செய்து பிள்ளையாரின் திருவருட் கடாட்சத்துக்கு ஆளாகி சகல சௌபாக்கியங்களையும் பெற்று இன்புற்று வாழ எல்லாம் வல்ல விக்னேஸ்வரப் பெருமான் அருள்பாலிக்க வாழ்த்தி வணங்குகிறேன்.

*ஆழ்வாப்பிள்ளை ...சிறி,*
*பிரதேச செயலாளர் நல்லூர்*

# தமிழ்த் தேசிய எழுச்சி



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




160

## புலிகளின் போரியல் வளர்ச்சியும் நோர்வேயின் சமாதான முயற்சியும்

### உயர் பாதுகாப்பு வலயம் பற்றிய சர்ச்சை

போர் நெருக்கடியைத் தணித்து, இயல்புநிலையைத் தோற்றுவிப்பதற்கான உப - குழுவின் இரண்டாவது சந்திப்பு, 2002 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 14 ஆம் நாளன்று யாழ். குடாநாட்டின் தென்பிராந்திய எல்லைப் பட்டினமாகிய முகமாலையில் நடைபெற்றது. மிகவும் சர்ச்சைக்குரிய பிரச்சினையாக உயர் பாதுகாப்பு வலயம் சம்பந்தமாக விடுதலைப் புலிகளும் அரச பிரதிநிதிகளும் ஏழு மணிநேரம் வரை நீண்டதொரு கலந்துரையாடலை நிகழ்த்தினர். குறிப்பாக, மோசமடைந்து வரும் யாழ்ப்பாண நிலைவரம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

உயர் பாதுகாப்பு வலயங்கள் எனச் சிறிலங்கா இராணுவம் பிரகடனம் செய்துள்ள பகுதிகளில் இடம்பெயர்ந்துள்ள எமது மக்களை மீள்குடியேற்றம் செய்யும் அவசியத்தை விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் வற்புறுத்தினர். உயர் பாதுகாப்பு வலயங்கள் அமைந்திருக்கும் பகுதிகளில் குடிமக்களை மீள்குடியமர்த்தும் திட்டம் ஒன்றை டிசெம்பர் மாதம் 21 ஆம் நாளுக்கு முன்னர், தான் சமர்ப்பிக்க இருக்கிறார் என யாழ்ப்பாணத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்தார். மீள்குடியேற்றப் பிரச்சினையில் இராணுவத் தரப்பு இறுக்கமான கடும்போக்கைக் கடைப்பிடிப்பதாகவும் தமிழ் மண்ணில் தனது ஆக்கிரமிப்புப் பிடியை இராணுவம் தளர்த்தப் போவதில்லை என்றும் புலிகள் தரப்பில் இந்த உப - குழுவுக்குத் தலைமை வகித்த வடபிராந்திய கட்டளைத்தளபதி கேணல் தீபன், தலைவர் பிரபாகரனிடம் தெரிவித்திருந்தார்.

ஜெனரல் பொன்சேகா, தான் வாக்குறுதி அளித்தமை போல 2002 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 20 ஆம் நாளன்று, உயர் பாதுகாப்பு வலயம் சம்பந்தமான தமது திட்டத்தை விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பித்தார். போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு மூலமாக விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட இந்தத் திட்டம், எமது இயக்கத்துக்கு கடும் சினத்தை ஏற்படுத்தியதுடன் பெரும் சர்ச்சையையும் தோற்றுவித்தது. இடம்பெயர்ந்த மக்கள் தமது வீடுகளுக்கும் கிராமங்களுக்கும் சென்று குடியமர்வதானால் 'விடுதலைப் புலிகள் தமது போராளிகளிடமிருந்து ஆயுதங்களைக் களைவதோடு தமது நீள்தூர சுடுகலன்களையும் கையளிக்க வேண்டும்.' - என்ற நிபந்தனையைச் சாரமாகக் கொண்டு பொன்சேகாவின் திட்டம் அமைகிறது. பகை உணர்வுடன் மிகவும் காரமான வார்த்தைப் பிரயோகத்துடன் வரையப்பட்ட அந்தக் கடிதத்தில் விடுதலைப் புலிகளைப் 'பயங்கரவாதிகள்' - எனப் பொன்சேகா குறிப்பிட்டிருந்தார். இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவிட்டால் புலிகள் இயக்கத்துக்கு நற்பெயர் ஏற்பட்டுவிடும் எனவும் அவர் ஆதங்கம் தெரிவித்திருந்தார். 'உயர்பாதுகாப்பு வலயப் பகுதிகளில் இடம்பெயர்ந்தோரைக் குடியமர்த்தினால் அது விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குப் பெரும் அரசியல் வெற்றியாக முடியும். அது யாழ்ப்பாணத்தின் அரசியல் சூழ்நிலையை விடுதலைப் புலிகளுக்குச் சாதகமாக்கிவிடும்.' - எனவும் அவர் குறிப்பிட்டார். உயர்பாதுகாப்பு வலயங்களைப் பலவீனப்படுத்தும் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கக் கூடாதெனவும் ஜெனரல் பொன்சேகா அரசை எச்சரித்தும் இருந்தார்.

யாழ்ப்பாண இராணுவத் தளபதி முன்வைத்த திட்டத்தை விடுதலைப் புலிகள் இயக்கம் உடனடியாகவே நிராகரித்தது. டிசெம்பர் மாதம் 26 ஆம் நாளன்று, எமது அமைப்பு விடுத்த காரசாரமான அறிக்கையில், இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றும் ஒரு மனிதாபிமானப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஏற்றுக்கொள்ள முடியாத கடும் நிபந்தனைகளை விதிக்க முனைவதாக இராணுவத் தலைமை மீது குற்றம் சுமத்தியது.

*''ஜெனரல் பொன்சேகாவின் திட்டத்தை ஆழமாகப் பரிசீலித்துப் பார்த்த பொழுது, யாழ்ப்பாண மக்களின் அவசர வாழ்க்கைப் பிரச்சினைகளை நகர்த்துவதற்கு சிறிலங்கா இராணுவம் தயாராக இல்லை என்பது தெட்டத்தெளிவாகத் தெரிகிறது. எமது மக்களின் ஜீவாதாரப் பிரச்சினைகளை இரண்டாம் தரமாக சிறுமைப்படுத்தித் தனது பாதுகாப்புக்கும், வசதியான வாழ்வுக்குமே இராணுவம் முதன்மை கொடுக்கிறது. கடும்போக்கும் பகையுணர்வும் தொனிக்கும் மொழியில் வரையப்பட்ட இந்தத் திட்டத்தில், தமிழ் மக்களின் அவலமான பிரச்சினைகளை அசட்டை செய்து, விடுதலைப் புலிகளுக்கு அரசியல் அனுகூலம் கிட்டுவதை அனுமதிப்பதா, இல்லையா என்ற விடயத்துக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது...''*

*''சிறிலங்கா இராணுவம் சமாதான முயற்சிக்கு எதிரானது என்பது இப்பொழுது தெளிவாகிறது. இனநெருக்கடியைத் தீர்க்கும் சமரச முயற்களுக்குத் தனது கடும்போக்குப் பாரதூரமான எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தும் என்பது இராணுவத்துக்கு நன்கு தெரியும். போர்நிறுத்த உடன்பாட்டுக்குக் கடப்பாடுகளையும் மற்றும் சிறிலங்கா அரசு வழங்கிய உறுதிமொழிகளையும் நிறைவு செய்ய மறுத்துவரும் இராணுவம், யாழ்ப்பாண மக்களின் துயர்களைத் துடைப்பதற்கு ஏற்றுக் கொள்ள முடியாத நிபந்தனைகளை முன்வைக்கிறது.''*

என விடுதலைப் புலிகளின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

உயர்பாதுகாப்பு வலயம் சம்பந்தமாக ஜெனரல் பொன்சேகா முன்வைத்த திட்டம் குறித்து ஒரு சர்ச்சை நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை, போர்நிறுத்த உடன்பாட்டின் ஓராண்டு நிறைவை முன்னிட்டுக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் பூரகோவ்டே, டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி ஓர் அறிக்கையை வெளியிட்டார். இந்த அறிக்கையில், பொன்சேகாவின் திட்டத்துக்குச் சார்பான முறையில் அவர் தெரிவித்த கருத்துக்கள் விடுதலைப் புலிகளுக்குச் சினத்தை மூட்டின. உயர் பாதுகாப்பு வலயம்பற்றிக்கருத்துத்தெரிவிக்கையில் அவர் கீழ்க்கண்டவாறு கூறினார்:-

*''சமாதானத்தைக் கட்டி எழுப்புவதானால் இரு தரப்புப் படைகளும் உறுதியானநிலையில் வைத்திருக்கப்பட வேண்டும். யாழ்ப்பாணத்தில், உயர் பாதுகாப்பு வலயங்களைக் கலைத்து, நிலங்களை மீள்குடியேற்றத்துக்கும் வேளாண்மைக்கும் கையளித்தால் அரச படைகளின் பாதுகாப்பும் அவர்களது போராடும் வலுவும் குறையும். படைச் சமவலு, போர்நிறுத்த உடன்பாட்டுக்கு அடிப்படையானது. அந்த சமவலுவைக் குழப்பினால் போர்நிறுத்தம் குழம்பும்.''*

இந்த அறிக்கையால் ஆத்திரமடைந்த பிரபாகரன், ஜெனரல் பூரகோவ்டேயின் நிலைப்பாட்டைக்கண்டித்து ஓர் அறிக்கை வெளியிடுமாறு என்னைப் பணித்தார். ஜெனரல் பொன்சேகாவின் கடும்போக்கைக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஆதரித்தமையைத் தொடர்ந்து, நெருக்கடியைத் தணித்து, இயர்புநிலையை ஏற்படுத்தும் உப - குழுவைச் செயற்படுத்துவதில் அர்த்தமில்லை என்றும் தெரிவித்தார். இந்த உப - குழுவைக் கலைத்து விடுவது என்ற தனது முடிவை அடுத்த கட்டப் பேச்சின் போது அரச தரப்புக்கு அறிவித்து விடுமாறும் பிரபாகரன் என்னைக் கேட்டுக்கொண்டார். தமிழீழ விடுதலைப் புலிகளின் பேச்சுக்குழுத் தலைவர் என்ற முறையில் ஜெனரல் பூரகோவ்டேவுக்கு நான் கீழ்க்கண்டவாறு எழுதினேன்.

*''உயர் பாதுகாப்பு வலயங்கள், மீள்குடியேற்றம், போர்நெருக்கடியைத் தணித்தல், இயல்புநிலையைத் தோற்றுவித்தல் போன்ற பிரச்சினைகள் குறித்து நேற்றையதினம் (26 டிசெம்பர் 2002) நீங்கள் விடுத்த அறிக்கையைக் கவனமாகப் பரிசீலனை செய்தோம். போர்நிறுத்த உடன்பாட்டின்கீழ் ஓராண்டு அமைதிக்காலம் பற்றிய உங்களது மதிப்பீட்டில் சில ஆக்கபூர்வமான அம்சங்கள் இருந்த போதும் யாழ்ப்பாணத்தின் பாதுகாப்பு நிலைவரம் பற்றி நீங்கள் கூறிய கருத்துக்கள் எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாதவை.*

*யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ளீடாக இடம்பெயர்ந்த நூறாயிரக்கணக்கான மக்களை மீள்குடியேற்றும் பிரச்சினை, இப்பொழுது ஒரு பெரிய மனிதாபிமானப் பிரச்சினையாக விஸ்வரூபம் எடுத்திருப்பதோடு, பேச்சுகளில் மையப் பிரச்சினையாகவும், வெகுசனப் போராட்டத்தை வெடிக்கச் செய்யும் விடயமாகவும் இருந்து வருகிறது. யாழ்ப்பாணக்குடாநாட்டின் 30 விகிதமான நிலப்பரப்பைப் பலவந்தமாக விழுங்கிக் கொண்ட சிறிலங்கா இராணுவம், அந்தப் பகுதிகளை 'உயர் பாதுகாப்பு வலயங்கள்' என உரிமை கொண்டாடுகிறது. இடம்பெயர்ந்த மக்கள் தமது சொத்துக்களை மீளப் பெறுவதற்கு சிறிலங்கா இராணுவம் கடும் எதிர்ப்புத் தெரிவிப்பது பாரதூரமான மனித உரிமை மீறல் என்பதை நீங்கள் நன்கறிவீர்கள். அத்தோடு, பொதுக் கட்டடங்களிலிருந்து விலகாமலும், மீன்பிடித் தடைகளை நீக்காமலும், அரச படைகள் போர் நிறுத்த உடன்பாட்டுக் கட்டுப்பாடுகளை நிறைவு செய்யத் தவறியுள்ளன. இந்தச் சூழ்நிலையில், போர் நெருக்கடியைத் தணிக்கும் விவகாரத்துடன் எமது போராளிகளின் ஆயுதக் களைவைத் தொடர்புபடுத்தி யாழ்ப்பாண இராணுவத் தளபதி ஜெனரல் பொன்சேகா விடுத்த ஆத்திரமூட்டும் அறிக்கை சமாதான வழிமுறையில் எமக்கு இருந்த நம்பிக்கையை ஆழமாகப் பாதித்ததுடன், பொதுமக்களையும் விரக்தியடையச் செய்தது.*

*எமக்கு ஆழமான ஏமாற்றத்தையும் கொடுத்த விடயம் என்னவென்றால், பாதுகாப்புக் காரணங்களுக்காக உயர்பாதுகாப்பு வலயங்கள் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதைக் கண்காணிப்புக் குழுவின் சார்பில், நீங்கள் நியாயப்படுத்தியமைதான். உயர் பாதுகாப்பு வலயங்களைக் குழப்பினால் அரச படைகளின் பாதுகாப்பும், அவர்களது போராடும் வலுவும் குறைந்து விடும் என நீங்கள் மேற்கொண்ட மதிப்பீட்டை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. சட்டவிரோதமான முறையில், பொது சனத்தின் சொத்துக்களை ஆக்கிரமித்து நிற்கும் ஆயுதப் படைகளின் அராஜகத்தை உங்களது நிலைப்பாடு நியாயப்படுத்துவதாக அமைகிறது. படைச்சமவலு என்ற உங்களது இராணுவவாதம், இடம்பெயர்ந்துள்ள சமூகத்தின் மாபெரும் மனிதாபிமானப் பிரச்சினையை சிறுமைப்படுத்தி அலட்சியம் செய்வதாக இருக்கிறது.*


*யாழ்ப்பாணத்தில் இருந்து துருப்புகளை விலகும்படியோ அல்லது சகல இராணுவ முகாம்களையும் மூடிவிடுமாறோ விடுதலைப் புலிகள் கோரவில்லை. மக்கள் நெருக்கமான பகுதிகளில் இருந்தும், குடியிருப்புகளில் இருந்தும் இராணுவத்தினர் விலக்கப்பட்டு வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டமையால் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றம் செய்வது வசதியாக இருக்கும் என்பது தான் எமது நிலைப்பாடு. யாழ்ப்பாணத்திலுள்ள இராணுவக் கட்டப்பாட்டுப் பகுதிகளில் இயங்கும் எமது போராளிகள் ஆயுதம் தரிக்கவில்லை என்பதால், அவர்களால் இராணுவத்துக்கு அச்சுறுத்தல் எழப்போவதில்லை. அத்துடன் படைச் சமவலு குழம்பப் போவதும் இல்லை.*

*எம்மைப் பொறுத்தவரை நெருக்கடியைத் தணித்தல் என்பதும், இயல்புநிலையைத் தோற்றுவிப்பது என்பதும் ஒன்றோடு ஒன்று இணைந்த விடயங்கள். நெருக்கடியின் தீவிரத்தைக் குறைத்து, பொதுமக்களின் சாதாரண வாழ்வில் இயல்புநிலையை ஏற்படுத்துவதையே இவை குறிக்கின்றன. எமது மக்கள் தமது சொந்த வீடுகளில், அமைதியாகக் கௌரவமாக வாழும் உரிமையை மறுத்து, தீவிரமான இராணுவ ஆக்கிரமிப்பை ஆதரித்து, நீங்கள் எடுத்துள்ள நிலைப்பாடு, உங்களது அறிக்கையில் கூறப்படும் அரசியல், தத்துவார்த்தக் கருத்துகளுக்கு முற்றிலும் முரணானவையாகும். அப்பாவிப் பொதுமக்களைப் பாதுகாப்புக்கேடயமாகப் பாவிக்கும் கபட நோக்குடனேயே இராணுவம் இந்தப் பாதுகாப்பு வலயங்களைச் சன நெரிசலான பகுதிகளில் உருவாக்கியது. இந்த நாசகாரத் திட்டத்தைச் சமவலுக் கோட்பாட்டின் அடிப்படையில் நியாயப்படுத்த முடியாது.*

*உயர் பாதுகாப்பு வலயம் சம்பந்தமாக யாழ்ப்பாண இராணுவத்தளபதி எடுத்த கடும்போக்கும் அதனை நியாயப்படுத்தி நீங்கள் வெளியிட்ட அறிக்கையும், போர் நெருக்கடியைத் தணித்து, இயல்புநிலையைத் தோற்றுவிக்கும் உப - குழுவை அர்த்தமற்றதாக்வும், அவசியமற்றதாகவும் செய்துவிட்டது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.''*

(தொடரும்...)

# யாழ். நீராவியடி வீரகத்தி விநாயகருக்கு நாளை கொடியேற்றம்



கொடியேற்றம் : நாளை
செவ்வாய்க்கிழமை முற்பகல் : 10.30
சப்பற உற்சவம் : 7ஆம் திகதி
புதன்கிழமை : மாலை 6 மணி
இரதோற்சவம் : 8 ஆம் திகதி
வியாழக்கிழமை : காலை 8.30
தீர்த்தோற்சவம் : 9 ஆம் திகதி
வெள்ளிக்கிழமை முற்பகல் : 10 மணி

கர்ணபரம்பரைச் செய்திகளின்படி ஸ்ரீ ஜெய நீராவியடி வீரகத்தி விநாயகர் ஆலயம் இந்தியா காரைக்காலில் இருந்து வேதாரணியம் வழியாக நீராவிப் பதியில் குடியேறிய பெரும் நிலக்கிழாரும் வணிகருமான பூதர் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டது.

அவர் வரும்போது நமது குல தெய்வமான திருமறைக்காடு இராவணனைக் கொன்றமையால் ஸ்ரீ இராமபிரானைப் பீடித்த பிரமகத்தியை உதைத்து நீக்கிய வீரகத்தி விநாயகரையும் தம்முடன் கொணர்ந்த தமது இல்லத்துக்குப் பக்கத்தில் மண் குடிசையில் ஸ்தாபித்தார்.

ஒல்லாந்தர் அரசில் திறைசேரி தலைவராக இருந்த பூதரின் மகன் பூலோக முதலியார், தனதும் தனது பிற்சந்ததியினரதும் ஊர்ப் பொது மக்களினதும் ஆன்ம லாபம் கருதி தனது குலகுருமார்களான வேதாரண்யக் குருக்களை வேதாரண்யத்தில் இருந்து வரவழைத்து தமது வீட்டின் பக்கத்தில் அவர்கள் வசிக்க காணி கொடுத்து அவர்களையும் நன்கு பராமரித்து வந்தார்.

அவருக்குப் பின் அவர் பௌத்திரன் சிவகுருநாத முதலியாராலும், அவருக்குப் பின் ஆங்கில அரசில் கக்சேரியில் சிறப்பாகக் கடமை ஆற்றிய GATE MUDALIAR (இராச வாசல்) இரகுநாத முதலியாராலும் இவ் ஆலயம் பராமரிக்கப்பட்டது. இவர் காலத்தில் ஓலையால் வேயப்பட்ட ஆலயம் தீக்கிரையாக, அவர் செங்கட்டிகளாலும் சுண்ணாம்பாலும் இவ் ஆலயத்தைக் கட்டுவித்தார்.

அவருக்குப் பின் அவர் மகன் சம்பந்தநாத முதலியாராலும் அவருக்குப் பின் அவர் மக்களாலும் இவ் ஆலயம் பராமரிக்கப்பட்டது. அம் மக்கள் காலத்தில் இவ் ஆலயத் தின் கருவறை, அர்த்த மண்ட பம், சண்டேஸ்வரர் சந்நிதி என்பன வெள்ளைக் கற்களால் கட்டப்பட்டன.

கடைசி மகன் இராமநாத முதலியார் மகள் சம்பந்தநாதர் ஆலயத்துக்கு மணிக்கோபுரம் அமைப்பித்தார்.

இரண்டாவது மகள் இரகுநாதமுதலியார் மகள் (சம்பந்தநாதருடைய ஒன்று விட்ட சகோதரி) செல்லம்மா வைத்திலிங்கம் ஆலயப் பொறுப்பை ஏற்றதும் தமது காணி சுமார் ஐம்பது பரப்பை ஆலயத்துக்கே கொடுத்துவிட்டார். அவர் விருப்பநிறைவேற்ற அக்காணிகளை விற்று நீராவிப் பிள்ளையாருக்கு அழகிய சொக்கட்டான் மண்டபம், திருவாசி மண்டபம், வசந்த மண்டபம், ஐந்து நிலை இராஜகோபுரம், சுற்று மண்டபங்கள் என்பன கட்டப்பட்டன.

செல்லம்மாவின் தம்பியார் சம்பந்தரால் ஆரம்பிக்கப்பட்ட அலங்காரத் திருவிழா இன்று அவர் மருமகள் இரகுநாத முதலியார் காலத்தில் கொடிமரம் தேர் என்பன அமைக்கப்பட்டு மகோற்சவமாக வளர்ந்துள்ளது.

## ஒரு கோடி 50 லட்சம் ரூபாவை வழங்க முன்வந்தது அமெரிக்கா!

கொழும்பு, மே 29

இலங்கையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர நிவாரண உதவியாக ஒரு கோடியே 50 லட்சம் ரூபாவை வழங்கவுள்ளது என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

வெள்ளம் மற்றும் நிலச்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர மீட்பு, உதவிகளை வழங்குமாறு இலங்கை அரசு உலக நாடுகளிடம் கோரியிருந்தது.

இதற்கமைய இந்தியா மூன்று கப்பல்களில் மீட்புக் குழுக்களையும், உதவிப் பொருள்களையும் அனுப்பிவைத்துள்ளது.

இந்தநிலையில், அமெரிக்கா ஒரு கோடியே 50 லட்சம் ரூபா பெறுமதியான உடனடி உதவியை வழங்கும் என்று அமெரிக்க தூதுவர் அதுல் கெசாப் அறிவித்துள்ளார்.

யு. எஸ். எய்ட் மற்றும் அமெரிக்காவின் வெளிவிவகார அனர்த்த உதவி மையம் ஆகியவற்றின் மூலம் இந்த உதவி வழங்கப்படவுள்ளது என்றும் அமெரிக்கத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

(ஐ)

## வெளிக்கள நிலைய பரீட்சை ஜூன் 9 முதல்

யாழ்ப்பாணம், மே 29

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் இவ்வாண்டின் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான தவணைப் பரீட்சையை நடத்தவுள்ளது.

பரீட்சை எதிர்வரும் ஜூன் மாதம் 9 ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து இடம்பெறவுள்ளது.

பரீட்சை குறித்த மேலதிக விவரங்களை சம்பந்தப்பட்ட மாணவர்கள் தத்தமது பாடசாலைகளைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

## இலங்கைக்கு உதவத் தயார்; அறிவித்தது பாகிஸ்தான்!

கொழும்பு, மே 29

இலங்கை மக்களுடன் தோளோடுதோள் நின்று செயற்படத் தமது நாடு தயாராக இருக்கிறது என்று பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

பாகிஸ்தானின் பதில் உயர்ஸ்தானிகர் கலாநிதி சாப்ராஸ் அஹமட்கான் சிப்ரா இதனை அறிவித்துள்ளார்.

இயற்கை அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்கள் தொடர்பில், பாகிஸ்தான் அரசும் அந்த நாட்டுமக்களும் துயரம் கொண்டுள்ளனர்.

இந்நிலையில், இலங்கை அதிகாரிகளுடன் பாகிஸ்தான் அரசு தொடர்புகளை கொண்டுள்ளது.

இலங்கை அரசு கோரும் பட்சத்தில் நிவாரணப் பொருள்களை உடனடியாக அனுப்புவதற்கு தமது அரசு தயாராக உள்ளது என்று சிப்ரா குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே இலங்கையில் ஏற்பட்டிருந்த வறட்சியின்போது பாகிஸ்தான் அரசு சுமார் 10 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசியை வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## உலக சுகாதார தாபனமும் ஒன்றரை லட்சம் டொலர் நிதி

கொழும்பு, மே 29

சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு ஒரு லட்சத்து ஐம்பது ஆயிரம் அமெரிக்க டொலர் நிதியுதவி வழங்க உலக சுகாதார தாபனம் உறுதியளித்துள்ளது என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் இதனைக் கூறினார்.

இத்தேபான, கல்பான, தெனியாய மொரவக்க மற்றும் கம்புறுபிட்டிய ஆகிய பிரதேசங்களில் உள்ள வைத்திய சாலைகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன என்றும் அமைச்சர் கூறினார்.

அங்கு இருக்கும் நோயாளர்களை அங்கிருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தேவையான வைத்தியர்கள் மற்றும் தாதியர்களும் அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார். (ஐ)

## உடைப்பெடுத்தது நில்வளா கங்கை: மூழ்கின கிராமங்கள்!

கொழும்பு, மே 29

மாத்தறை மாவட்டத்தை ஊடறுத்து ஓடும் நில்வளா கங்கை உடைப்பெடுத்துள்ள நிலையில் ஆற்று நீர் கிராமங்களுக்குள் புகுந்து பரவியுள்ளது.

அத்துடன் நில்வளா கங்கை கடலில் சங்கமிக்கும் முகத்துவாரம் பகுதியிலும் பெரிய வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக கொடகம, ஹித்தட்டிய, துடாவ, மாலிம்பட, சிரிபானாகொட, மாதுருதூவ, பரஹத்கொட, கத்தூவ ஆகிய கிராமங்கள் வெள்ளத்தில் முற்றாக மூழ்கும் நிலையை எதிர்கொண்டுள்ளன. இந்த நிலையில் இந்தக் கிராமங்களில் வசிக்கும் பொது மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## வெள்ள அனர்த்தத்துக்கு உதவ இணக்கம் தெரிவித்துள்ளது ஐ.நா.

கொழும்பு, மே 29

இலங்கையில் ஏற்பட்டுள்ள வெள்ளம் மற்றும் இயற்கை அனர்த்த நிலைமையில் இருந்து பொது மக்களை மீட்டெடுப்பதற்கான நிவாரணப் பணிகளுக்கு உதவிகளை வழங்க ஐ.நா. சபை இணக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் இயற்கை அனர்த்த நிலைமையை சமாளிக்க உதவிகளை வழங்குமாறு அரசின் சார்பில் ஐ.நா. சபை மற்றும் சர்வதேச நாடுகளுக்கு கடந்த வெள்ளிக்கிழமை மாலை அவசர வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது.

இதனைபடுத்து மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்கத் தயாராக இருக்கிறது என்று ஐ.நா. சபையின் கொழும்பு அலுவலகம் அறிவித்துள்ளது.

இதன் பிரகாரம் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு நீர்த்தாங்கிகள், நீரைச் சுத்திகரிப்பதற்கான மாத்திரைகள், இடைத்தங்கல் குடிசைகளை அமைப்பதற்கான தறப்பாள்கள் என்பவற்றை அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்துக்கு வழங்க ஐ.நாவின் துணை அமைப்பான யுனிசெப் நடவடிக்கை எடுத்துள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களின் சுகாதாரத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு உலக சுகாதார அமைப்பு இலங்கையின் சுகாதார அமைச்சுடன் ஒருங்கிணைந்து செயற்படவுள்ளது என்று அறிவித்துள்ளது.

உலக உணவுத்திட்டம் மற்றும் அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகள் துணை அமைப்பு என்பன அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் வேண்டுகோளுக்கு ஏற்ப தேவையான உலருணவு மற்றும் உதவிகளை வழங்கத் தயார் நிலையில் உள்ளன.


அத்துடன், ஐ.நாவின் மனிதாபிமான உதவிகளுக்கான அலுவலகம், மீட்புப்பணிகளுக்கான உபகரணங்கள் மற்றும் ஆளணி வளம் என்பவற்றை வழங்கி அரசு மற்றும் தனியார் குழுக்களுடன் இணைந்து மீட்பு, நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளது என்று அறிவித்துள்ளது.

இவற்றுக்கு மேலதிகமாக தேவையேற்படுமிடத்து அயல் நாடுகளில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை அலுவலகங்களிலிருந்து ஆளணி வளம் உள்ளிட்ட அனைத்து உதவிகளையும் பெற்றுக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், பாதிப்புகளை எதிர்நோக்கும் பகுதிகளில் இருந்து பாதுகாப்பாக வெளியேறி சேதங்களைக் குறைத்துக் கொள்வதில் ஒத்துழைக்குமாறு பொது மக்களுக்கு ஐ.நா. கொழும்பு அலுவலகம் சார்பில் வேண்டுகோள் ஒன்றும் விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# மொரிஷியஸுக்கு ரூ.3,200 கோடி கடனாக வழங்க இந்தியா ஒப்புதல்!

## கடல்சார் பாதுகாப்பு உட்பட 4 ஒப்பந்தங்கள் கைச்சாத்து



மொரிஷியஸ் நாட்டுக்கு 3 ஆயிரத்து 200 கோடி ரூபாவை இந்தியா கடனாக வழங்க உள்ளதாக அறிவித்துள்ளது. மேலும் இரு நாடுகளுக்கு இடையே கடல்சார் பாதுகாப்பு உட்பட 4 ஒப்பந்தங்கள் நேற்று முன்தினம் கைச்சாத்தாகின.

இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மொரிஷியஸ் பிரதமர் பிரவிந்த் மோர் ஜெகநாத், பிரதமர் நரேந்திரமோடியை டில்லியில் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார். இருதரப்பு உறவை பலப் படுத்துவது மற்றும் பிராந்திய, சர்வதேச அரசியல் நிலைவரம் தொடர்பில் இருதலைவர்களும் ஆலோசனை நடத்தினர்.

பின்னர், இரு நாடுகளுக் கிடையே கடல்சார் பாதுகாப்பு உட்பட 4 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. மேலும் மொரிஷியஸ் நாட்டுக்கு 3 ஆயிரத்து 200 கோடி ரூபா கடன் வழங்க இந்தியா ஒப்புக் கொண்டது.

இந்தச் சந்திப்புக்குப் பின்னர் இரு தலைவர்களும் செய்தியாளர்களுக்கு கூட்டாகப் பேட்டி அளித்தனர். அப்போது பிரதமர் மோடி கூறியவை வருமாறு:

''இந்தியப் பெருங்கடல் பகுதியில் வர்த்தகம் மற்றும் சுற்றுலாவை வெகுவாக பாதிக்கும் கடற்கொள்ளை, போதைப் பொருள் மற்றும் ஆட்கடத்தல், சட்டவிரோத மீன்பிடிப்பு மற்றும் இதர சட்டவிரோத நடவடிக்கைகளைக் கண்காணித்து, அதைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க ஒப்புக் கொண்டுள்ளோம். கடல்சார் பாதுகாப்பு ஒப்பந்தம் இரு நாடுகளுக்கு இடையிலான உறவை மேலும் பலப்படுத்தும்.

''மேலும், வர்த்தகம், முதலீடு உட்பட பல்வேறு முக்கிய துறைகளில் இரு நாடுகளுக்கிடையே உள்ள உறவை மேலும் பலப்படுத்த முடிவு செய்யப்பட்டது. மொரிஷியஸ் நாட்டில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சிப் பணிகளில் பங்கேற்பதில் இந்தியா பெருமை கொள்கிறது.'' என்றார்.

இதேவேளை, பிரதமர் ஜெகநாத் கருத்து வெளியிடுகையில்:-

''இந்தியாவின் நிதியுதவியுடன் (கியூர்பாயின்ட் முதல் போர்ட் லூயிஸ் வரை) செயற்படுத்தப்படும் மெட்ரோ எக்ஸ்பிரஸ் ரயில் திட்டம் பொருளாதார வளர்ச்சிக்கு மிக முக்கிய பங்கு வகிக்கும். ஐ.நா. பாதுகாப்பு சபையில் இந்தியா நிரந்தர உறுப்பினராக ஆதரவு அளிப்போம். மேலும் சகோஸ் தீவுக் கூட்டங்களுக்கு உரிமை கொண்டாடும் எங்களது நிலைப்பாட்டுக்கு இந்தியா ஆதரவு அளித்து இருப்பதை வரவேற்கிறோம்.'' - என்றார். (எ)

## கார் தீப்பிடித்ததில் மூவர் கருகிப் பலி

காஞ்சிபுரம் மாவட்டம் மகாபலிபுரம் அருகே நேற்று முன்தினம் இரவு கார் திடீரென தீப்பிடித்து எரிந்ததில் ஒரு பெண் உட்பட 3 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

மகாபலிபுரத்தை அடுத்த கல்பாக்கம் அருகே உள்ள மணமை கிராமத்தில் நின்று கொண்டிருந்த கார் திடீரென தீப்பிடித்து எரிந்தது. இதில் காரில் இருந்த பெண் உட்பட மூன்று பேர் உடல் கருகி உயிரிழந்தனர்.

காரில் ஏற்பட்ட தீயை அணைத்த தீயணைப்பு வீரர்கள் மூன்று பேரின் உடல்களை கருகிய நிலையில் மீட்டனர். இது தொடர்பில் பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இருப்பினும் விபத்துக்கான காரணம் என்ன என்று தெரியவில்லை.

## தடை நீக்கப்பட்ட இணையத்தள சேவை மீண்டும் முடக்கப்பட்டது

### ஜம்முகாஷ்மீரில் வன்முறையால்

ஜம்மு காஷ்மீரில் ஹிஸ்புல் முஜாகிதீன் தீவிரவாத இயக்கத் தளபதி சுட்டுக்கொல்லப்பட்டதை அடுத்து அங்கு வன்முறைப் போராட்டங்கள் தீவிரமடைந்துள்ளன. இதனால் தடை நீக்கப்பட்ட இணையத்தள சேவை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

ஹிஸ்புல் முஜாகிதீன் தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த சப்சார் அகமது பட் உள்ளிட்ட 2 தீவிரவாதிகள் நேற்று முன்தினம் சுட்டுக்கொல்லப்பட்டனர். அதையடுத்து ஜம்மு காஷ்மீரின் பல்வேறு பகுதிகளில் பாதுகாப்புப் படையினருக்கு எதிராக இளைஞர்கள் தீவிர போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன், பெல்லட் குண்டுகளைப் பயன்படுத்தி போராட்டக்காரர்கள் மீது பாதுகாப்புப் படையினர் தாக்குதல் நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

50 இற்கும் மேற்பட்ட பகுதிகளில் ஏற்பட்டுள்ள இந்த மோதல்களில் 19 பேர் காயமடைந்து மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தகவல் வெளியாகி உள்ளது.

இந்தநிலையில், சமூக வலைத் தளங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நேற்று முன்தினம் நீக்கப்பட்ட நிலையில், வன்முறை மீண்டும் பரவத் தொடங்கியதால் இணையத்தள சேவைகளுக்கு அரசு மீண்டும் தடை விதித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## டில்லி பல்கலைக்கழகத்தில் ஐ.எஸ்.ஆதரவு வாசகங்கள்!



புதுடில்லி பல்கலைக்கழகத்தின் சுற்றுச்சுவர்களில் ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்துக்கு ஆதரவான வாசகங்கள் எழுதப்பட்டுள்ளன. இது தொடர்பில் பகுதியில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அந்தப் பல்கலைக்கழக மாணவர் சங்கத் தலைவர் நேற்றுமுன்தினம் பொலிஸ் நிலையத்தில் அளித்துள்ள முறைப்பாட்டில், 'பல்கலைக் கழகத்தின் சில மாணவர்களே இந்தச் செயலில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளார். இதனையடுத்து, பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மேலும், டில்லி பல்கலைக் கழகத்தின் வணிக கல்லூரி வளாகத்தில் இருக்கும் சமூக சேவை துறையின் சுவர்களில் நக்சல், சிறப்பு ஆயுத சட்டம் மற்றும் ஓரினச் சேர்க்கையாளர்களின் திருமணம் ஆகிய வற்றுக்கு ஆதரவாகவும் வாசகங்கள் எழுதப்பட்டுள்ளன. இது தொடர்பாகவும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (எ)

## தமிழகத்தில் தீவிர கண்காணிப்பில் இலங்கை அகதிகள் முகாம்கள்!

### தீவிரவாதிகள், நக்சல்கள் ஊடுருவலைத் தடுப்பதற்காக

தமிழகம் முழுவதும் இலங்கை அகதிகள் முகாம்கள் வழியாக தீவிரவாதிகள், நக்சல்கள் ஊடுருவுகின்றமையைத் தடுப்பதற்காக கண்காணிப்புப் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக பொலிஸார் உஷார்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்நாட்டுப் போர் மூண்ட நேரத்தில் அங்கிருந்து சுமார் ஒரு லட்சத்து 25 ஆயிரம் அகதிகள் தமிழகத்துக்குச் சென்றனர்.

இதற்காக தமிழகத்தில் 95 இடங்களில் அகதி முகாம்கள் அமைக்கப்பட்டன. இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தவுடன், தமிழகத்தில் இருந்த 30 ஆயிரம் அகதிகள் கடந்த நான்கு ஆண்டுகளில் இலங்கைக்கு திரும்பிச் சென்றனர்.

மீதமுள்ள 95 ஆயிரம் இலங்கை அகதிகள் அந்தந்த முகாம்களில் வசித்து வருகின்றனர். இலங்கை அகதிகள், அரசின் அனுமதி பெறாமல் உறவினர்களை தங்களுடன் தங்கவைத்தனர்.

அகதிகள் போர்வையில் தீவிரவாதிகள் தங்கி நாசகார செயல்களில் ஈடுபட வாய்ப்புள்ளதாக இந்திய மத்திய புலனாய்வுப் பிரிவுக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது.

அதனைத் தொடர்ந்து, இந்திய மத்திய அரசின் அறிவுறுத்தலின் பேரில் தமிழக அரசு, இலங்கை அகதிகள் முகாம்களைக் கண்காணிக்க இரகசியமாக உத்தரவிட்டது.

அனைத்து மாவட்ட பொலிஸ் அலுவலகத்திலும் இதற்கென ஒரு பிரிவு உருவாக்கப்பட்டது.

அவர்கள் முகாம்களிலுள்ள இலங்கை அகதிகள் தொடர்பான விவரங்களை வாரம் தோறும் சேகரித்து மாவட்ட பொலிஸ் மற்றும் சென்னை தலைமையிட பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு அறிக்கை அனுப்பி வருகின்றனர்.

பொலிஸ் அலுவலகத்தில் உள்ள அந்தப் பிரிவில் அந்தந்த மாவட்டங்களிலுள்ள அகதிகள் முகாமைச் சேர்ந்தவர்கள் ஞாயிறு மற்றும் அரசு விடுமுறைநாட்களைத் தவிர்த்து தினமும் அல்லது அவர்கள் விரும்பும் நாட்களில் தங்களது அடையாள அட்டையை நேரில் காண்பித்து, நகல் ஒன்றை அளித்து கையெழுத்து அல்லது விரல் ரேகை பதிவு செய்து தங்களது குடும்பத்தினர் பற்றிய விவரங்களைத் தெரிவிக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. (எ)

## பிரதமர் மோடியுடனான சந்திப்பில் எந்த அரசியல் நோக்கமும் இல்லை

டில்லி, மே 29

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அளித்த விருந்துபசார நிகழ்வில் பங்கேற்ற பீகார் முதலமைச்சர் நிதிஷ்குமார், இது அரசியல் ரீதியான சந்திப்பு இல்லை என்று விளக்கமளித்துள்ளார்.




மொரிஷியஸ் பிரதமர் பிரவீன்குமார் ஜக்நாத்தின் விஜயத்தைக் கௌரவிக்கும் வகையில் பிரதமர் மோடி ஏற்பாடு செய்த விருந்துபசார நிகழ்வில் பீகார் முதலமைச்சர் நிதிஷ்குமார் கலந்துகொண்டார். இந்தச் சந்திப்பு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் என்று பரபரப்பாகப் பேசப்பட்ட நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்தவை வருமாறு:-

ஐக்கிய ஜனதா தளத்தின் தலைவர் என்ற நிலையில் பிரதமரைச் சந்திக்கவில்லை. மாநில முதலமைச்சராகவே சந்தித்தேன். இது அரசியல் ரீதியான சந்திப்பு இல்லை.

மொரிஷியஸ் தீவிலுள்ள அநேகமானோர் பீகாரை பூர்வீகமாகக் கொண்டவர்கள். எனவே, பீகாருக்கும் மொரிஷியஸுக்கும் உணர்வுபூர்வமான இணைப்பு உள்ளது. மாநில முதல்வர் என்ற முறையில் எனக்கு பிரதமர் அழைப்பு விடுத்தமையால் நானும் அதனை ஏற்றுக்கொண்டேன் - என்றார். (எ)

## ஆப்கானிஸ்தானில் தற்கொலைத் தாக்கு; 18 பேர் உயிரிழப்பு

ஆப்கானிஸ்தானின் கிழக்கு பகுதியில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தற்கொலைக் கார்க்குண்டுத் தாக்குதலில் 18 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அந் நாட்டு உள்துறை அமைச்சக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் கோஸ்ட் மாநிலத்தில் அமெரிக்க இராணுவத்தினருக்கு பாதுகாப்பு வழங்கும் மாநில பாதுகாப்புப் படையினரின் வாகன தொடரணியை இலக்கு வைத்து இந்தத் தாக்குதல் முன்னெடுக்கப் பட்டுள்ளது.

எனினும், தாக்குதலில் பொதுமக்களே பெருமளவில் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கோஸ்ட் மாநிலத்தின் பிரதான பஸ் தரிப்பிடத்துக்கு அருகில் இந்தத் தாக்குதல் இடம் பெற்றது. இதில் 18 பேர் உயிரிழந்தனர். சிறுவர்கள் உட்பட ஆறுபேர் காயமடைந்தனர். இதுவரை இந்தத் தாக்குதலுக்கு எந்தவொரு அமைப்பும் உரிமை கோரவில்லை. (எ)

# எகிப்தில் பஸ் மீது சூடு; கிறிஸ்தவர் 28 பேர் சாவு!

## மேலும் 25 பேர் படுகாயம்!!





கெய்ரோ, மே 29

எகிப்தில் பயணித்துக் கொண்டிருந்த பஸ் ஒன்றின் மீது மர்ம நபர்கள் சிலர் சரமாரியாக துப்பாக்கிச் சூடு நடத்திய சம்பவத்தில் கிறிஸ்தவர்கள் 28பேர்கொல்லப்பட்டுள்ளனர்.

தலைநகரமான கெய்ரோவில் இருந்து 250 கி.மீ. தூரத்தில் உள்ள மனியா என்ற நகரிலேயே மேற்படி தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அன்பா சாமுவேல் என்ற கிறிஸ்தவ மடாலயத்திற்கு பஸ்ஸில் பயணம் செய்து கொண்டிருந்தபோதே சில மர்ம நபர்கள் பஸ் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். இதில் 28 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 25 பேர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில், இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் எகிப்து இராணுவம் ஐ.எஸ். இயக்கம் மீது தாக்குதல்களை நடத்தத் தொடங்கியது.

அதன்படி, லிபியாவில் உள்ள ஐ.எஸ். இயக்கத்தினரின் மறைவிடங்களை குறிவைத்து வான் தாக்குதல் நடத்துவதற்காக எகிப்து போர் விமானங்கள் புறப்பட்டுச் சென்றன. இந்த தகவல்களை காணொலியாக எகிப்து இராணுவ செய்தி தொடர்பாளர் தாமர் எல்-ராபே தனது பேஸ்புக் மற்றும் டுவிட்டர் பக்கத்தில் பதிவு செய்துள்ளார்.

முன்னதாக கோப்டிக் கிறிஸ்தவர்கள் மீதான தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்திருந்த எகிப்து ஜனாதிபதி அப்டெல் பதா, 'எல்-சிசி தீவிரவாதிகளின் முகாம்கள் அனைத்தையும் அழிக்க வேண்டும்' என்று இராணுவத்தினருக்கு தான் உத்தரவிட்டிருக்கின்றேன்என்று தெரிவித்திருந்தார்.

அத்துடன், இந்தத் தாக்குதலை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட்ட்ரம்ப் 'இரக்கமற்ற படுகொலை" என்று விமர்சித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## அமெ. விமானத்தை வானிலேயே சுட்டுவீழ்த்த வடகொரியா திட்டம்!



வடகொரியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே பனிப்போர் இடம்பெற்றுவரும்நிலையில், அமெரிக்காவின் விமானத்தை வானிலே சுட்டு வீழ்த்த வடகொரியா அதிரடித் திட்டத்தை வகுத்துள்ளது.

தென்கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு அச்சுறுத்தல் விடுத்துவரும் வடகொரியாவை அச்சமூட்டுவதற்கு, அவ்வப்போது அமெரிக்காதனது வலிமை பொருந்திய போர் விமானங்களை தீபகற்பத்தின் வான் பரப்பில் வட்டமிடச் செய்கின்றது.

இதனால், அதிருப்தியடைந்துள்ள வடகொரியா, அமெரிக்க விமானத்தை சமாளிக்க ஒரு திட்டத்தை வகுத்துள்ளது. வடகொரிய தேசிய பாதுகாப்பு விஞ்ஞான பயிற்சி நிலையம், இதற்காக ஒரு புதிய வகை விமான எதிர்ப்பு ஆயுத சோதனையை முன்னெடுத்துள்ளது.

இதனைப் பார்வையிட்ட வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன், இந்தத்திட்டத்தால் உற்சாகமடைந்துள்ளார் என்றும், இதனால் குறித்த ஆயுதத்தை அதிகளவில் தயாரித்து நாடு முழுவதும் குவிக்க உத்தரவிட்டுள்ளார் என்றும் தெரியவந்துள்ளது. (எ)

## ஐ.எஸ்ஸுடன் இணைந்து கொண்டது அல் ஷாரியா தீவிரவாத அமைப்பும்!



லிபியாவில் கடந்த பல ஆண்டுகளாகச் செயற்பட்டு வந்த அன்சார் அல் ஷாரியா தீவிரவாத அமைப்டின் ஆதரவாளர்கள் ஐ.எஸ். அமைப்புக்கு மாறியமையால் அந்த இயக்கம் கலைக்கப்படுவதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப் பட்டுள்ளது.

உலக நாடுகளின் அமைதியை சீர்குலைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வரும் ஐ.எஸ்.தீவிர வாத அமைப்புடன் அன் சார் அல் ஷாரியா தீவி ரவாத அமைப்பு தற்போது இணைந்துள்ளமைஐ.எஸ். அமைப்பின் தாக்குதல் விஸ்தரிப்புக்கு கூடுதல் பலமாக அமைந்துள்ளது என்று கூறப்படுகிறது.

2014 ஆம் ஆண்டில் லிபிய அரச படையினருக்கு எதிரான சண்டையின்போது அன்சார் அல்ஷாரியா தீவிரவாத அமைப்பின்தலைவர் மொஹமட் அஸஹாவி கொல்லப்பட்டார். அதன் பின்னர் சரிவைச் சந்தித்த அந்த அமைப்பு தற்போது ஐ.எஸ். அமைப்புடன்கைகோர்த்துள்ளது.

லிபியாவின் முக்கிய நகரமான பென்காஸியில் செயற்பட்டு வந்த அன்சார் அல் ஷாரியா தீவிரவாத அமைப்பு, 2012 ஆம்ஆண்டுநடைபெற்ற அமெரிக்க தூதரக அதிகாரிகளை கொன்றது உள்ளிட்ட பலதாக்குதல்களை நிகழ்த்தியுள்ளது. இதனால், அமெரிக்கா மற்றும் ஐ.நா. ஆகியன இந்த இயக்கத்தை தடை செய்யப்பட்ட தீவிரவாத இயக்கமாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

## பிரிட்டன் தாக்குதல்; கிடைக்கப்பெற்றன சீ.சீ.ரி.வி.காட்சிகள்!

பிரிட்டன் மன்செஸ்டரில் இடம்பெற்ற தாக்குதல் தொடர்பான சீ.சீ ரி.வி காணொலிகள் கிடைக்கப் பெற்றுள்ளன. தாக்குதல் இடம்பெற்ற தினம் இரவு இடம்பெற்ற பதிவுகளே இவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

தாக்குதல் இடம்பெறுவதற்கு முன்னதான 14 கோணங்களில் காட்சிகள் பெறப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தாக்குதல் சம்பவத்தில் 22 பேர் கொல்லப்பட்டனர்: 59பேர் காயமடைந்திருந்தனர்.

தாக்குதல் சம்பவம் தொடர்பில்இதுவரையில் பல சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ)

## நிறைவேறியது 5 வயதுச் சிறுமியின் ஒரு நாள் பிரதமராகும் கனவு





கனடாவில் ஒருநாள் பிரதமராவதற்காக குழந்தைகளுக்கு நடத்திய கட்டுரைப் போட்டியில்வெற்றி பெற்ற 5 வயது மாணவி, தான்கோட்டை கட்ட வேண்டும் என்று உத்தரவிட்டார்.

கனடாவில் ஒருநாள் பிரதமராவதற்காக குழந்தைகளுக்கு கட்டுரைப் போட்டி ஒன்று நடத்தப்பட்டது. அதில் பெல்லா மூஸ் என்ற 5 வயது சிறுமி வெற்றி பெற்றாள்.

அதைத் தொடர்ந்து அவள் ஒட்டாவாவில் உள்ள பிரதமர் ஜஸ்டின் டிருயூ அலுவலகத்துக்குச் சென்றாள். அவளை



பிரதமர் வரவேற்று அழைத்துச் சென்று இருக்கையில் அமரவைத்தார்.

அங்கு அவள் ஒரு நாள் பிரதமர் ஆனாள். அதைத் தொடர்ந்து அவள்தான் ஒரு கோட்டை கட்ட வேண்டும் என்று உத்தரவிட்டாள்.

அதை ஏற்றுக் கொண்ட ஜஸ்டின் டிருடியோ தலையணைகள், நாற்காலிகள், மேசை மற்றும் பலவித ஓவியங்களுடன் கூடிய போர்வையால் கோட்டை கட்டி ஒரு நாள் பிரதமரான சிறுமி பெல்லா மூசிடம் வழங்கினார். அதைப் பார்த்து அவள் மகிழ்ச்சி அடைந்தாள். (எ)

## சீனா சர்வதேச சட்டங்களை மீறி செயற்படுவதாக அமெ.குற்றச்சாட்டு

வொஷிங்டன், மே 29

தென்சீனக் கடல் பகுதியில் பறந்த அமெரிக்க உளவு விமானத்தை சீன போர் விமானங்கள் இடைமறித்து திருப்பி அனுப்பியதன் மூலம் சர்வதேச சட் டங்களை மீறி சீனா செயற்படுவதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.


சில தினங்களுக்கு முன்பு ஹொங் கொங்கின் தென் கிழக்கே 240 கி.மீ. தொலைவில் தென்சீனக் கடலில் பறந்த அமெரிக்க கடற்படையின் உளவு விமானத்தை சீன விமானப் படையின் 2 போர் விமானங்கள் வழிமறித்தன.


இதனால் கடும் அதிருப்தியடைந்துள்ள அமெரிக்கா, இது தொடர்பில் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அதில், சர்வதேச சட்டங் களை மீறி சீனா செயற்படுகிறது. எங்களது விமானம் சர்வதேச எல்லையிலேயே பறந்தது. அதனை சீன போர் விமானங்கள் இடை மறித்துள்ளன. இதுதொடர்பாக எங்களது கண்டனத்தை சீன தரப்பிடம் பதிவு செய்துள்ளோம்' என்று தெரிவித்துள்ளது.

தென்சீனக் கடலில் சீனா உருவாக்கியுள்ள செயற்கை தீவுக்கு மிக அருகில் கடந்த 24ஆம் திகதி அமெரிக்க கடற்படையின் யு.எஸ். எஸ். டெவ்வி என்ற போர்க்கப்பல் ரோந்து பணியில் ஈடுபட்டதற்கு சீன அரசு கடும் கண்டனம் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (எ)







மன்னார் மாவட்டத்தில் பேசாலை பத்திமா கழகத்தின் 45 ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டு பிரதேச வைத்திய சாலை பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி இம்மனுவேல் ஈற்றன் பீரீஸ் தலைமையில் பேசாலை வைத்தியசாலையில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது. இந்த நிகழ்வில் மதகுரு, கடற்படையினர் மற்றும் பொதுமக்கள் இரத்ததானம் வழங்கினர். (ஐ-112)

# மாகாண சபை உருவாகக் காரணம் நடந்து முடிந்த ஆயுதப் போராட்டம்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, மே 29

ஆயுதப் போராட்டத்தால் தான் மாகாணசபை உருவாகியது என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

வவுனியா, ஓமந்தை, நாவற்குளத்தில் வாழ்ந்த கனகசபை நல்லதம்பியின் நூற்றாண்டு விழாவும் ஞாபகார்த்த மண்டப திறப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றன. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எங்களது கிராமங்களை - பிரதேசங்களை கட்டியெழுப்ப பல ஆயிரம் கோடி நிதி தேவையாகவுள்ளது. ஒரு பக்கம் நாங்கள் அரசுடன் மோத வேண்டியுள்ளது. மறுபக்கம் எங்களது கட்சிக்குள்ளே தனிநபர் ஆதிக்கம் காரணமாக எடுக்கப்படும் முடிவுகளால் கட்சிக்குள்ளும் சில விடயங்களைக் கையாள வேண்டியுள்ளது.

இன்று எங்களுக்குள்ளே ஒரு மாகாணசபை உருவாகியுள்ளது என்றால் அது ஓர் ஆயுதப் போராட்டத்தால்தான் உருவாக்கப்பட்டது. ஆயுதப் போராட்டம் கசப்பான அனுபவங்களைஎங்களுக்குதந்தாலும் கூட அந்த ஆயுத போராட்டம் தான் உலகத்தை தமிழ் மக்கள் பக்கம் திரும்பி பார்க்க வைத்துள்ளது.

வடக்கு கிழக்கு இணைந்த மாகாண சபை இருந்தது என்றால் எங்களது ஆயுத போராட்டக் காலத்தில்தான்.

போரில் பாதிக்கப்பட்ட - அவயவங்களை இழந்த, கணவனை இழந்து பலர் வாழ்ந்து கொண்டிருக்கும் கால கட்டத்தில்தான் நாங்களும் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஆகவே, எங்களுக்கு கீழ் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கானவர்கள் இருக்கின்றனர். அவர்களுக்கும் நாங்கள் உதவி செய்ய வேண்டும்.- என்றார். (ஐ-100)

## ஆசிரியர்களுக்கு செயலமர்வு

யாழ்ப்பாணம், மே 29

தரம் 6 தொடக்கம் 9 ஆம் ஆண்டுவரை இரண்டாம் மொழி (சிங்களம்) கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர் வரும் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலையில் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உரியவர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கூறியுள்ளனர். (ஐ)

## வண்ணார்பண்ணை காட்டுத்துறை...

(10-11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதன் பயனாய் சண்டேஸ்வரர், வைரவர் ஆகிய மூர்த்திகளுக்குரிய பிரதிஷ்டை 01.07.1988 ஆம் ஆண்டு நடைபெற்றது. இந்த ஆலயத்தில் முதன்முதலாகக் கொடியேற்றம் 03.07.1988 ஆம் ஆண்டுநிகழ்ந்தது. தேர்த்திருவிழா 11.07.1988 ஆம் ஆண்டு நடைபெற்றது. இந்த அரிய நிகழ்வைக் குறிக்குமுகமாக இந்த ஆலயத்துக்குரிய திருத்தல வரலாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறைத் தலைவர் கலாநிதி ப.கோபாலகிருஸ்ணன் சடாச்சரத்தின் வேண்டுகோளை ஏற்று இந்த வரலாற்றுநூலைஉருவாக்கிவெளியிட்டமை ஆலய வர லாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும். இந்த ஆலயத்தில் எழுந்தருளியுள்ள மூலமூர்த்தியாகிய விநாயகரது விக்கிரகம் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டதாகும். தெய்வீகப் பொலிவும் சிற்பக் கலை நுட்பமும் இந்த விக்கிரகத்தில் சிறந்து விளங் குகின்றன. மகோற்சவத்துக்கான பஞ்சமுக விநாயகர் விக்கிரகமும் இந்த ஆலயத்தில் எழுந்தருளச் செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்த ஆலயத்தில் விநாயகப் பெருமானுக்குரிய புதிய சித்திரத் தேரும் உருவாக்கப்பட்டு அதற்கான தேர் நிலையமும் அமைக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த ஆலயத்தில் தமது முன்னோரைத் தொடர்ந்து நீண்ட காலமாகக் குருத்துவப் பணியாற்றி ஆலயத்தை வளர்ச்சிப்பாதையில் இட்டுச் சென்ற குருமணி பிரம்மஸ்ரீ தி.இரத்தினசபாபதிக் குருக்களின் பங்கும் பணியும் இந்த ஆலய வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுவதாகும். அவரது இறை பணி யைக் கௌரவிக்கும் வகையில் அவரது குடும்பத்தாரின் சார்பில் சித்திரத்தேர் உருவாக்கப்பட்டு எம்பெருமானுக்கு பக்தி பூர்வமாக அர்ப்பணிக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். அதற்கேற்ப ஒரு தேர் நிலையமும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆலயத்தில் அறங்காவலர் ஸ்ரீநிவாஸனின் முயற்சியால் திருப் பணிகள் நிறைவேறி 2001 ஆம் ஆண்டு அஷ்டபந்தனமஹாகும்பாபிஷேகம்நடைபெற்றது. அமரர் பிரம்மஸ்ரீ இரத்தின சபாபதிக் குருக்களைத் தொடர்ந்து அவரது புதல்வர் பிரம்மஸ்ரீ இ.சந்தானகோபால சர்மா ஆலயத்தின் குருத்துவப் பணியை ஏற்று நீண்ட காலமாக ஆலயவளர்ச்சிக்கு அரியபணியாற்றியவர். அவருக்கு அனுசரணையாக அவரது இரு சகோதரர்களும் ஆலயகுருத்துவப்பணியில் இணைந்து செயற்பட்டனர். இந்த ஆலய இறைபணியில் பிரம்ம ஸ்ரீ ந.ஸ்ரீதரசர்மா வும் இணைந்துள்ளார்.

இந்த ஆலயத்தில் முகாமையாளராக விளங்கி இறை பணியாற்றிய சோமலிங்க குமார் மற்றும் ஸ்ரீ நிவாஸன் ஆகியோரது மறைவை யடுத்து அவர்களது குடும்பத்தினராகிய திருமதி சிவகுமாரி சோமலிங்ககுமார், திருமதி தவனேஸ்வரி ஸ்ரீநிவாஸன் ஆகியோர் இந்தக் கோயிலில் முகாமையாளராகச் செயற்பட்டு வருகின்றனர். இந்தப் பிரதேசத்தில் நிலவிய நீண்ட கால அசாதாரண சூழ்நிலையால் எம் பெருமானது ஆலயத் திருப்பணி வேலைகள் தாமதமடைந்திருந்தன. இந்தச் சந்தர்ப்பத்தில் திருமதி சிவகுமாரி எடுத்த ஆக்கபூர்வமான தீர்மானம் அனைவரினதும் பாராட்டுக்குரியதாகும். ஆலய முகாமையாளராகிய திருமதி சிவகுமாரியின் அனுசரணையில் திருப் பணி சபையொன்று அமைக்கப்பட்டு ஆலயத்தின் புனருத்தாரண பணிகளைத் தொடரத் தீர்மானம் மேற் கொள்ளப்பட்டது. ஆலய முகா மையாளரது பிரதான அனுசரணை யோடு ஆலய உபயகாரரர்கள், ஊர் மக்கள் ஆகியோரது நிதியுதவி மூலம் திருப்பணிகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கேற்ப 06.07.2016 ஆம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்டு மிகக் குறுகிய காலத்தில் திருப்பணிகள் திருப்பணிச் சபையினரது அர்ப்பணிப்புடன் கூடிய செயற்பாட்டால் நிறைவேறியிருப்பது விநாயகப் பெருமானின் திருவருளேயன்றி வேறில்லை. விநாயகப் பெருமானின் ஆலயம் புதுப்பொலிவு பெற வேண்டுமென்பதில் கொண்ட பேரார்வத்தால் அவர்கள் வழங்கிய நிதி திருப்பணி தொடர திருப்பணிச் சபைக்குப் பெரிதும் உதவியது. இதன் வழி அவர்கள் எம்பெருமானின் திருவருளுக்குப் பாத்திரராகியுள்ளனர். திருமதி சிவகுமாரியின் சிறந்த வழிகாட்டலாலும் திருப்பணி சபையினரது அரப்பணிப்புமிக்க செயற்பாட்டினாலும் ஆலயம் புதுப்பொலிவு பெற்றுத் திகழ்கின்றது. ஆலய மண்டபப் புனருத்தாரணம், பரிவாரத் தெய்வங்களாகிய மகாலட்சுமி, சந்தான கோபாலர், முருகன் ஆகியோருக்குப்பரிவாரக்கோயில்கள், சூரியன் சந்திரன் ஆகி யோருக்கன பரிவாரக் கோயில்கள், இரண்டு மணிக் கோபுரங்கள் புதிதாக கலையெழிலுடன் அமைக்கப்பட்ட மூன்று தளங்களைக் கொண்ட இராஜகோபுரம் ஆகியன அந்தத் திருப்பணிக் கைங்கரியத்தின் பெறுபேறாகும். இந்த ஆலயத்தின் திருப்பணியை முன்னெடுப்பதிலும் ஆலயத்தை சிற்ப நுட்பத்துடன் கூடிய கலைக் கோயிலாக உருவாக்கு வதிலும் புதிய இராஜகோபுரம் நிர்மாணிப்பதிலும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டவராகிய அராலியைச் சேர்ந்த சிற்பக் கலைஞர் தவவீரசிங்கம் அனைவரினதும் பாராட்டுக்குரிய வராவார்.

ஆலய முகாமையாளர் திருமதி சிவகுமாரி சோமலிங்ககுமார், திருமதி தவனேஸ்வரி ஸ்ரீநிவாஸன் ஆகிய ஆலய குருமணிகளினதும் சபையினரினதும் ஊர் மக்களினதும் உளமார்ந்த பக்திபூர்வமான வேண்டுதல்களின் பிரகாரம் எம் பெருமானின் திருவருளால் திருப்பணிகள் சிறப்பாக நிறைவேறி இன்று (29.05.2017) எம்பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் புதிய இராஜ கோபுரத்துக்கும் புனராவர்த்தன நவகுண்ட பக்ஷ மஹா கும்பாபி ஷேகம் வல்லை சிவன் தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ பரமேஸ்வரமனோகரக் குருக்களின் தலைமையில் ஏனைய குருமணிகளின் அனுசரணையுடன் பக்திபூர்வமாக நடை பெறுகின்றது.

இந்தக் கும்பாபிஷேக வைபவத்தைக் காண்பதும் புதிய ராஜகோபுரத்தைத் தரிசிக்கும் பேறு கிட்டியமையும் எம்பெருமான் விநாயகரின் திருவருளேயன்றி வேறில்லை. நாம் செய்த தவப்பயனால் இவை எமது வாழ்வில் கிட்டிய அரிய வாய்ப்பாகும். ஸ்ரீ அம்பலவாண விக்கினேஸ்வரப்பிள்ளையாரின் மஹா கும்பாபிஷேக திருவருட் பேறு அனைவருக்கும் கிடைப்பதாக.

# கோவிற்குடியிருப்பில் கௌரவிப்பு





தென்மராட்சி, மே 29

சாவகச்சேரி கோவிற்குடியிருப்பு ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும், கல்வி மற்றும் விளையாட்டில் சாதனை பிரதேச மாணவர்கள் கௌரவிப்பு விழாவும் நேற்றுமுன் தினம் சனிக்கிழமை சனசமூக நிலைய முன்றிலில் இடம் பெற்றன.

சனசமூக நிலைய தலைவர் க.தர்ஷன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலக சனசமூக நிலைய உத்தியோகத்தர் செல்வி செ.ஷாலினி கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி கோவிற்குடியிருப்பு ஸ்ரீ முருகன் ஆலய தலைவர் நாகராசா கலந்து கொண்டார்.

நிகழ்வில்தேசியமட்டத்தில் பளுதூக்கும் போட்டியில் சாதனை படைத்த மாணவன் ஒருவருக்கும், க.பொ.த உயர்தரத்தில் கணித பிரிவில் தோன்றி பல்கலைக்கழக அனுமதி கிடைக்கப்பெற்ற மாணவன் ஒருவருக்கும் சனசமூக நிலையத்தினர் பதக்கம் சூட்டி கௌரவித்தனர்.


நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சனசமூக நிலைய உத்தியோகத்தர் கருத்துத் தெரிவிக்கையில்- ஒரு நாட்டின் அபிவிருத்தியின் அடித்தளம் சனசமூக நிலையங்களின்கைகளிலேயே தங்கியுள்ளது. சனசமூக நிலையங்கள் வெறும் பத்திரிகைகளை மாத்திரம் காட்சிப்படுத்துவதாக இருக்கக் கூடாது. இன்றுநாட்டில்வேலைஇன்மை பிரச்சினை வெகுவாக தலைதூக்கி யுள்ளது. ஆகவே புதிதாக வரும் வெற்றிடங்களின் விண்ணப்ப படிவங்களை சனசமூக நிலை யத்தில் காட்சிப்படுத்த வேண்டும்.-என்றார். (ஐ-21)

# டோனிக்கு வழங்கப்படும் தனிச் சிறப்பு தமக்கு இல்லை என ஹர்பஜன் ஆதங்கம்

டோனிக்கு கிடைக்கும் தனிச் சிறப்பு தனக்கு கிடைக்கவில்லை என்று சம்பியன்ஸ் கிண்ணத்துக்கான இந்திய அணியில் இடம்பெறாத ஹர்பஜன் சிங் கூறியுள்ளார்.

டோனிக்கு கிடைக்கும் தனிச் சிறப்பு மற்ற வீரர்களுக்குக் கிடைக்கவில்லை என்றும் ஹர்பஜன் சிங் ஆதங்கம் தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் முன்னணி சுழற் பந்து வீச்சாளராக திகழ்ந்தவர் ஹர்பஜன்



சிங். இவருக்கு தற்போது இந்திய சிரேஷ்ட அணியில் இடம் கிடைப்பதில்லை.

தற்போது நடந்து முடிந்த ஐ.பி.எல். தொடரில் மும்பை அணிக்காக விளையாடினார். மும்பை இந்தியன்ஸ் அணி 3 ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்று அசத்தியுள்ளது.

ஜூன் முதலாம் திகதி இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் சம்பியன்ஸ் கிண்ண 50 ஓவர் கிரிக்கெட் தொடர் தொடங்குகிறது. இந்த தொடருக்கான இந்திய அணியில் இடம் கிடைக்கும் என்று ஹர்பஜன் சிங் எதிர்பார்த்தார். ஆனால், அதிலும் இடம் கிடைக்கவில்லை.

அதேவேளை, விக்கெட் காப்பாளர் டோனி தெரிவு செய்யப்பட்டார். ரிஷப் பந்த் சிறப்பாக விளையாடிய போது அவரை எடுக்காமல் டோனியைத் தேர்வு செய்தமைக்கு விமர்சனம் எழுந்தது. இந்த விமர்சனம் குறித்து இந்திய அணியின் தெரிவுக் குழு தலைவர் எம்.எஸ்.கே. பிரசாத் கூறுகையில்–

"டோனியின் பங்களிப்பை அவரது துடுப்பாட்டம் மற்றும் உலகத்தரம் வாய்ந்த விக்கெட் காப்பாளர் பணியுடன் மட்டுமே வைத்து வரையறுக்கக்கூடாது. அவரது சிறப்பு வாய்ந்த போட்டி யுக்தியும் முதன்மையானது'' என்று கூறியிருந்தார்.

இந்த நிலையில் டோனி போன்ற வீரர்களுக்கு கிடைக்கும் தனிச் சிறப்பு தனக்குக் கிடைக்கவில்லை என்று ஹர்பஜன் சிங் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், "டோனி தன்னுடைய துடுப்பாடும் திறமையை வைத்து மட்டுமே சிறந்த வீரராக வலம் வரவில்லை. உண்மையிலேயே அவர் தற்போது அதிரடி வீரராக விளையாடவில்லை. அதை நாம் பார்க்கிறோம்.

"ஆனால், அவர் ஒரு கப்டன், போட்டியை சிறப்பாக உணர்ந்து இருக்கிறார். அவர் களத்தில் நிற்கும் போது இளைஞர்களுக்கும், இனிமேல் போட்டியில் என்ன இருக்கிறது என்று வீரர்கள் ஒரு கட்டத்தில் விரக்தியில் இருக்கும்போதும் மிகப்பெரிய அளவில் உதவியாக இருக்கும். ஆகவே, அவர் தனிச்சிறப்பு பெறுகிறார்.

"ஆனால் என்னைப் பொறுத்தவரையில், நமக்கும் இது போன்ற தனிச்

சிறப்பு கிடைக்கவில்லையே என்ற உணர்வு இருக்கிறது.

"நான் இந்தியாவுக்காக 19 ஆண்டுகளாக விளையாடி வருகின்றேன். ஏராளமான போட்டிகளை இந்தியாவுக்காக வென்று கொடுத்துள்ளேன். இரண்டு உலகக் கோப்பையை வென்றவர்களில் நானும் ஒருவன். ஆகவே, இது போன்ற தனிச்சிறப்பு சில வீரர்களுக்கு கிடைக்கிறது. சில வீரர்களுக்கு கிடைக்கவில்லை. கிடைக்காதவர்கள் பட்டியலில் நானும் ஒருவன். எதற்காக எனக்கு கிடைக்கவில்லை என்பது எனக்குத் தெரியவில்லை''- என்றார்.



## ஒரு நாள் தொடர்: தென்னாபிரிக்காவை வீழ்த்தியது இங்கிலாந்து

தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒரு நாள் தொடரின் 2 ஆவது ஆட்டத்தில் இங்கிலாந்து மிகப் பரபரப்பான போட்டி முடிவில் 2 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த இரு அணிகளுக்கும் இடையே சனிக்கிழமை இங்கிலாந்தின் சவுதாம்டனில் நடைபெற்ற ஆட்டத்தில், முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 50 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 330 ஓட்டங்களை எடுத்தது.

331 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு அடுத்து ஆடிய தென்னாபிரிக்கா, 50 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 328 ஓட்டங்களை எடுத்தது.

முன்னதாக, இங்கிலாந்து தரப்பில் பென் ஸ்டோக்ஸ் அபாரமாக ஆடி 79 பந்துகளுக்கு 11 பவுண்டரிகள், 3 சிக்ஸருடன் 101 ஓட்டங்கள் எடுத்தார்.

331 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு அடுத்து ஆடிய தென்னாபிரிக்கா, 50 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 328 ஓட்டங்களையே எடுத்தது.

தென்னாபிரிக்கத் தரப்பில் ரபாடா அதிகபட்சமாக 2 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

பின்னர் ஆடிய தென்னாபிரிக்கத் தரப்பில், டி கொக் அதிகபட்சமாக 103 பந்துகளில் 11 பவுண்டரிகளுடன் 98 ஓட்டங்கள் எடுத்தார். இங்கிலாந்து தரப்பில் லியாம் பிளங்கெட் அதிகபட்சமாக 3 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

மூன்று ஆட்டங்களைக் கொண்ட இந்தத் தொடரை இங்கிலாந்து இப்போதே 2-0 என்ற கணக்கில் வெற்றி கொண்டுள்ளது.

## சச்சின் ரசிகருக்கு சோதனை

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரைப் பார்க்க இங்கிலாந்து செல்ல முடியாமல் தவிக்கிறார் சச்சின் ரசிகர் சுதிர்.


சுதிர் குமார் சவுத்ரி, 36. பீகாரின் முஜாபர்பூரை சேர்ந்தவர். இவரது பெயர் அவ்வளவு ஒன்றும் பிரபலம் இல்லை தான். ஆனால், தலைமுடியை இந்தியா வடிவத்தில் 'கட்' செய்து, உடல் முழுவதும் மூவர்ணத்தை பூசி, நடுவில் பெரியதாக 'டெண்டுல்கர்' என எழுதி கையில் தேசியக் கொடியை அசைத்துக் கொண்டு, சங்கை எடுத்து ஊதிக் கொண்டிருக்கும் ஒரு தீவிரமான சச்சின் ரசிகர்.




கடந்த 2003 முதல் இந்திய அணி எந்த இடத்தில் விளையாடினாலும் சரி, களத்தில் இவர் இருப்பார். 2006 இல் பாகிஸ்தான், 2007 இல் வங்கதேசத்துக்கு சைக்கிளில் சென்று போட்டியை பார்த்து, அணி வீரர்களை உற்சாகப் படுத்துவார்.

இவருக்குத் தேவையான 'டிக்கெட்' கிடைக்க சச்சின் ஏற்பாடு செய்வார். சச்சினின் ஓய்வுக்குப் பின்பும் 'மிஸ் யு டெண்டுல்கர்' என, எழுதிக் கொண்டு, இந்திய அணி வீரர்களை ஊக்கப்படுத்தி வருகிறார். தற்போது சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் வரும் ஜூன் முதலாம் திகதி இங்கிலாந்தில் தொடங்குகிறது. உள்நாடு என்றால், சைக்கிள், ரயில்களில் சென்று விடுவார். தொடர் இங்கிலாந்தில் நடப்பதால், விமானத்தில் செல்ல வேண்டும். இதற்குத் தேவையான நிதி வசதி இவருக்கு இல்லை. வேலையில்லாமல் இருப்பதால் குடும்பத்தினரும் பணம் தர மறுத்து விட்டனர். இதனால், எப்படி இங்கிலாந்துக்கு பறக்க முடியாமல் தவிக்கிறார் சுதிர். இவருக்கு சச்சின் தான் உதவி செய்ய வேண்டும்.

## சம்பியன்ஸ் கிண்ணப் பயிற்சி ஆட்டம்: வங்கத்தை வீழ்த்தி வென்றது பாகிஸ்தான்



சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கு முன்னோட்டமாக சனிக்கிழமை நடைபெற்ற பயிற்சி ஆட்டத்தில் வங்கதேசத்தை 2 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தியது பாகிஸ்தான்.

இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய வங்கதேசம், 50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 341 ஓட்டங்கள் எடுத்தது.

அடுத்து ஆடிய பாகிஸ்தான் 49.3 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 342 ஓட்டங்கள் எடுத்து வென்றது.

முன்னதாக வங்கதேச தரப்பில் தமீம் இக்பால் அதிகபட்சமாக 93 பந்துகளுக்கு 9 பவுண்டரிகள் 4 சிக்ஸர்களுடன் 102 ஓட்டங்கள் விளாசினார். பாகிஸ்தான் தரப்பில் ஜுனைத் கான் அதிகபட்சமாக 4 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

அடுத்து ஆடிய பாகிஸ்தான் அணியில் ஷோயிப் மாலிக் அதிகபட்சமாக 66 பந்துகளில் 6 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் 72 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். வங்கதேச தரப்பில் மெஹதி ஹசன் மிராஸ் அதிகபட்சமாக 2 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

## தமிழ்த்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மகனின் சேவையை நினைவு கூரும்படி தமிழ் மக்களைக் கேட்டுள்ளது.

இது தொடர்பாகக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் அனுப்பிவைத்துள்ள அஞ்சலிக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு :-

தமது நீண்ட கால அரசியல் வாழ்வில் தமிழ் மக்களுக்கான அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர் அமரர் விநாயகமூர்த்தி. தமது மண்ணையும், மக்களையும் நேசித்தவர் அவர். தம் இனத்துக்காகஅச்சமின்றி, துணிச்சலுடன் குரல் கொடுத்த ஒரு ஜனநாயகவாதி.

சட்டத்துறையில் தமிழ் மக்களுக்கு அவர் ஆற்றிய பணி ஈண்டு குறிப்பிடப்படவேண்டியது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு இம்சிக்கப்பட்ட பல நூற்றுக் கணக்கான தமிழ் இளைஞர்களுக்காகத் தமது மோசமான உடல்நிலையையும்கவனியாது இராணுவ முகாம்கள், நீதிமன்றங்கள் எல்லாம் ஏறி இறங்கி, கண் துஞ்சாது சட்ட வாதம் செய்த பெருந்தகை அவர். பிரதியுபகாரம் பார்க்காமல் பணியாற்றியவர். அவரது மறைவு முழுத் தமிழினத்துக்குமே பெரும் பாதிப்பு.

அன்னாரின் அளப்பரும் சேவையை மதிக்கும் விதத்தில் நாளை நடைபெறும் இறுதி நிகழ்வுகளில் தமிழ் மக்கள் பங்குபற்றித் தமது அஞ்சலியை அவருக்குச் செலுத்தவேண்டும். - என்று உள்ளது.

இதனிடையே-

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்டக் கிளை நேற்றுப் பிற்பகல் அதன் யாழ். அலுவலகத்தில் கூடி அமரர் விநாயகமூர்த்திக்கு அஞ்சலி செலுத்தும் சிறிய நிகழ்வை நடத்தியது. (உ)

## கிணற்றுக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை வெடிக்கவைக்க படைத்தரப்பு முயற்சிகளை எடுத்து வருகின்றது எனக் கூறப்படுகின்றது.

படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டு உயர் பாதுகாப்பு வலயமாக மாற்றப்பட்டிருந்த மேற்படி தையிட்டி பிரதேசம் அண்மையில் மக்களின் மீள்குடியேற்றத்திற்காக விடுவிக்கப்பட்டது.

அங்குள்ள கிணறு ஒன்றை மக்கள் துப்புரவு செய்தபோது பெருமளவு ஆயுதங்கள் இனங்காணப்பட்டன. அந்தக் கிணற்றில் இருந்து கடந்த சில தினங்களாக பெருமளவு வெடிபொருள்கள் மீட்கப்பட்டன.

குறிப்பாக, 60 இற்கும் மேற்பட்ட மோட்டார்க் குண்டுகள், 8 பரா ரக குண்டுகள், 21 கைக் குண்டுகள் என ஏராளமான வெடிபொருள்கள் மீட்கப்பட்டன.

அந்தக் கிணற்றுக்குள் அதிக குண்டுகள் உள்ளன எனத் தெரிவிக்கப்படும் நிலையில், குண்டுகளை மீட்டு எடுத்து வெடிக்க வைத்துச் செயலிழக்கச் செய்வதற்குப் பதிலாக கிணற்றுக்குள் வைத்தே வெடிக்க வைப்பதற்கு படைத்தரப்பு முயற்சிப்பதாக தெரியவருகின்றது.

எவ்வாறெனினும், நீதிமன்ற உத்தரவைப் பெற்றே வெடிபொருள்களை வெடிக்க வைத்துச் செயலிழக்கச் செய்ய முடியும்என்பது குறிப்பிடத்தக்கது.(ம)

## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளுப்பிட்டி பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆட்சியின்போது அரசுப் பக்கம் பாய்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.பியசேனவுக்கு, பொருளாதார அமைச்சின் கீழ் வழங்கப்பட்டிருந்த பிராடோ ஜீப் கொள்ளுப்பிட்டி பொலிஸாரால் நேற்று முன்தினம் கைப்பற்றப்பட்டிருந்தது.

அரசுக்குச் சொந்தமான இந்த வாகனத்தை பியசேனவிடம் இருந்து மீண்டும் அரசு பெறுவதற்கு கடந்த வருடங்களில் எடுத்த முயற்சிகள் அனைத்தும் பலனளிக்கவில்லை என்று கூறப்பட்டது.

எனினும், அந்த வாகனம் சாரதியுடன் கொள்ளுப்பிட்டிப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. சாரதியும் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சாரதி நேற்று முன்தினமே சாரதியாக இணைந்து கொண்டவர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸ் நிலையத்துக்கு விசாரணைகளுக்கு அழைக்கப்பட்டிருந்த பியசேன, கொள்ளுபிட்டி பொலிஸாரால் நேற்றுக்கைதுசெய்யப்பட்டார் என்று கூறப்பட்டது. (உ)

## மூன்றரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலைமை வழமைக்குத் திரும்பும் இடங்களில் மின் விநியோகம் மீள வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## புயல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக வானிலை அவதான நிலையத்தின் பணிப்பாளர் எஸ்.ஆர். ஜயசேகர தெரிவித்தார்.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்று கையிலேயே அவர் தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வங்காள விரிகுடாவின் மத்திய பகுதியில் உள்ள அமுக்தின் காரணமாகக் காற்று வலுவடைந்து சூறாவளியாக உருவெடுத்து வடக்குத் திசையை ஊடறுத்து பங்களாதேஷ் வரையில் பயணிக்கலாம் என்று தற்போதைக்கு வானிலை அவதான மையத்தின் அறிக்கைகள் கூறுகின்றன.

அதனால் நாட்டில் காற்றின் வேகம் அதிகரித்து காணப்படும். மத்திய மாகாணம், சப்ரகமுவ மாகாணம் மற்றும் காலி மாத்தறை உள்ளிட்ட கடற்பகுதியை அண்டிய பிரதேசங்களில் காற்றின் வேகம் சடுதியாக அதிகரிக்கும் சாத்தியம் காணப்படுகின்றது. 25 ஆம் திகதி போன்ற பாரதூரமான நிலைமை தற்போதைக்கு இல்லாவிடினும் காற்றின் வேகம் அதிகரிப்பதை பொறுத்தே நிலைமையை தீர்மானிக்க வேண்டும்.

மேற்படி நிலைமை குறித்து ஆராய புதிய இயந்திரங்கள் பொருத்தப் பட்டிருந்தாலும் 24 மணித்தியாலய தொடர் மழையின் போது அளவீட்டு பணிகளை மேற்கொள்வது கடினமாக உள்ளது. - என்றார்.

## ஒரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளுங்கள் - அது எனக்குத் தேவை என்றால் மாத்திரமே. என்றாலும் கலவரம், மோதல் மற்றும் இரத்தத்தைச் சிந்தி இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது."

-இவ்வாறு பொது பலசேனாவின் பொதுச் செயலாளர் வண. கலகொடஅத்த ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

பொதுபல சேனாவுக்கு ஆதரவான இணையத்தளம் ஒன்றுக்கு வழங்கியுள்ள நேர்காணல் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பொலிஸாரால் தேடப்பட்டு வரும் நிலையிலேயே, இந்த இணையத்தள ஊடகவியலாளரான ஸ்ரீ சமந்த ரத்னா சேகர என்ற ஊடகவியலாளர் வண. ஞானசார தேரரை நேரில் சந்தித்து இந்த நேர்காணலை மேற்கொண்டுள்ளார்.

இந்த நேர்காணலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு :-

கைதாகவோ, சிறைக்குச் செல்லவோ அல்லது மரணிக்கவோ பயம் உள்ள ஒரு தேரர் அல்லன் நான். எல்லாவற்றுக்கும் ஓர் ஒழுங்கு உள்ளது. அடிப்படைவாதிகளைத் திருப்திபடுத்த நாய் போல் என்னைக் கைது செய்ய இடமளிக்க முடியாது.

அதேவேளை, இந்த முறை சிறைக்கு செல்லும் போது நான் தனியாக போகமாட்டேன்.விக்னேஸ்வரன், அஸாத் சாலி, முஜீபுர் ரஹ்மான், ரிஷாத் பதியுதீன் அல்லது ரவூப் ஹக்கீம் ஆகியவர்களின் ஒருவருடன்தான் இம்முறை சிறைக்குச் செல்வேன்.

சிங்களவர்களுக்காக வேலை செய்து ஒரு போதும் எமக்கு நல்லவர்களாக மரணிக்க முடியாது. தர்மபால தேரருக்கும் அதே நடந்தது. எம்மை எங்காவது கொலை செய்து போட்டால், ஒரு கொடியாவது போடமாட்டார்கள். அதுதான் பெரும்பான்மையான சிங்களவர்களின் நிலை. என்றாலும், எம் மீது அன்பு செலுத்தும் ஒரு பிரிவினர் உள்ளனர். அவர்களையாவது ஓர் இலக்கை நோக்கிப் பயணிக்க நாம் பாடுபட வேண்டும் - அது எமது நாட்டின் எதிர்கால நலன் கருதி. - என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (உ)

## 8 மாவட்டங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தறை அம்பாந்தோட்டை, கண்டி நுவரெலியா ஆகிய மாவட்டங்களிலேயே மழை குறைந்துள்ள போதிலும் மண்சரிவு ஆபத்துத் தொடர்ந்தும் நீடிப்பதாகவும் கூறப்பட்டது. (உ)

## அமெ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புக் குழுக்களையும், உதவிப் பொருள்களையும் அனுப்பி வைத்துள்ளது. இரண்டாவது நிவாரணக் கப்பலும் நேற்று வந்தடைந்தது.

இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாகிஸ்தானும் அவசர உதவியை அனுப்பிவைக்கும் என்று பாகிஸ்தான் தூதுவர் அறிவித்துள்ளார்.

சீனாவும் தன் பங்குக்கு 22 லட்சம் அமெரிக்க டொலர் (சுமார் 33 கோடி ரூபா) உதவியை வழங்குவதாக அறிவித்துள்ளது. (உ)

## விநாயகமூர்த்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகல் கொழும்பு வைத்திய சாலை ஒன்றில் காலமானார்.

நீண்ட காலம் சுகவீனத்தால் பாதிக்கப்பட்டிருந்த அவர், அண்மைக் காலமாக வைத்திய சாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்தார். பல வருடங்களாக நீரிழிவினால் பாதிக்கப்பட்டிருந்த அவர், அதனால் சிறுநீரகச் செலிழப்பு ஆபத்தையும் எதிர்கொண்டிருந்தார்.

இளம் வயது முதலேயே அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியுடன் தமது வாழ்வைப் பிணைத்துக் கொண்ட அவர், 2000 ஆம் ஆண்டில் அக்கட்சியின் தலைவர் குமார் பொன்னம்பலம் சுட்டுக்கொல்லப்பட்டமையை அடுத்து அந்தக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றார்.

அதன் பின்னர், அதே ஆண்டில் வந்த நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி சார்பில் யாழ். மாவட்டத்தில் போட்டியிட்டு எம்.பியானார்.

குறுகிய காலத்தில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு 2001 இல் திரும்பவும் தேர்தல் நடத்தப்பட்டபோது தமிழர் விடுதலைக் கூட்டணிப் பட்டியலில் போட்டியிட்டு அவர் நாடாளுமன்றத்துக்குத் தொடர்ந்தும் தெரிவானார்.

எனினும், 2004 தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் வன்னி மாவட்டத்தில் போட்டியிட்ட அவரால் அங்கு வெற்றியீட்ட முடியவில்லை.

2010 தேர்தல் சமயத்தில் அவரது அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியது. எனினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ். மாவட்டத்தில் தனது வேட்பாளர் பட்டியலில் விநாயகமூர்த்திக்கு இடமளிக்க முன்வந்தது. அதை ஏற்றுக் கொண்டதன் மூலம், தமது நீண்ட அரசியல் கட்சியான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸுக்கு எதிராகத் தேர்தல் களத்தில் நேரடியாகப் போட்டியில் இறங்கினார். அதில் வென்றார். 2015 வரை அவர் எம்.பியாக இருந்தார்.

சுகவீனம் காரணமாக கடந்த பொதுத் தேர்தலின் போது தீவிர அரசியலில் இருந்து அவர் ஒதுங்கிக் கொண்டார்.

அவரது பூதவுடல் இன்று பகல் கொழும்பு, பொரளை ஜெயரட்ணம் மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

மாலையில் பூதவுடல் தரை வழியாக யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டு, யாழ்ப்பாணம் கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும் .

நாளை முற்பகல் 11 மணியளவில் இறுதிக் கிரியைகள் ஆரம்பமாகும். பிற்பகல் 2 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்குப் பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு தகனக் கிரியைகள் இடம்பெறும். (உ)

## வெள்ளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதிக்கப்பட்ட 15 மாவட்டங்களையும் சேர்ந்த அரச ஊழியர்கள் மற்றும் முப்படையினர், பொலிஸார் ஆகியோர் பம்பரமாகச் சுழன்று பணியாற்றி வருகின்றனர் என்று கூறப்பட்டது.

பல நூற்றுக் கணக்கான தொண்டர்களும், சமூக சேவைகள் அமைப்புக்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் களத்தில் நிவாரணப் பணிகளில் இறங்கியிருக்கின்றனர். (உ)

## வேலையில்லா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுத்திருந்தது திருகோணமலை நீதிவான் நீதிமன்றம். கடந்த 23 ஆம் திகதி இவர்கள் திருகோணமலை நீதிவான் நீதிமன்றத்தில் பிரசன்னமாகினர். எனினும், அவர்களுக்காகத் திருகோணமலை சட்டத்தரணிகள் எவரும் முன்னிலையாகவில்லை.

மேற்படி வேலையில்லாப் பட்டதாரிகள், அவர்களின் போராட்டத்துக்கு எதிராக நீதிமன்றம் விடுத்த தடை உத்தரவைக் கிழித்தெறிந்தமையால், அப்படி நீதிமன்றத்தை அவமதித்தவர்களைச் சட்டத்தின் மூலம் தண்டிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனக் கோரி திருகோணமலை சட்டத்தரணிகள் சங்கத்தால் ஒரு கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டமும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்தப் பின்புலத்திலேயே மேற்படி பட்டதாரிகள் நால்வரும் நீதிமன்றத்தில் பிரசன்னமான சமயம், அவர்கள் சார்பில் எந்தச் சட்டத்தரணியும் முன்னிலையாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அந்த நிலையில் அவர்கள் நால்வரையும் எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிவான் உத்தரவிட்டார்.

அந்த உத்தரவு சட்ட ரீதியாக முற்றிலும் தவறானது என்று குறிப்பிட்டு, அந்த விளக்க மறியல் உத்தரவை உடனடியாக நடைமுறைக்கு வரத்தக்கதாக ரத்துச் செய்யுமாறு கட்டளையிடக் கோரும் நகர்த்தல் மனு ஒன்றையே ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் இன்று திருகோணமலை நீதிவான் நீதிமன்றத்தில் சமர்ப்பித்து வாதாடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சாதாரணமாக நீதிவான் நீதிமன்றம் போன்றவற்றுக்கு நீதிமன்றக் கட்டடத்துக்குள், நீதிமன்றத்தை அவமதிக்கும் செயல்கள் பற்றியே தலையிட்டு விசாரித்து உத்தரவிடும் அதிகாரம் உள்ளது என்பது சுட்டிக் காட்டப்படுகின்றது. சம்பந்தப்பட்ட நீதிமன்றத்துக்கு வெளியே, அந்த நீதிமன்றத்தை அவமதிக்கும் செயல் இடம்பெற்றதாகக் கருதப்பட்டால் அதனை விசாரித்து, தீர்ப்பளிக்கும் நியாயாதிக்கம் மேன் முறையீட்டு நீதிமன்றத்துக்கு மட்டுமே உண்டு. பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் வண. ஞானசார தேரருக்கு எதிரான நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டும் கூட இதனடிப்படையிலேயே மேன்முயைீட்டு நீதிமன்றத்திலேயே நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

திருகோணமலையில் வேலையில்லாப் பட்டதாரிகள் நீதிமன்றத்தின் தீர்ப்பைக் கிழித்தெறிந்து நீதிமன்றத்தை அவமதித்தனர் என்று கூறப்படும் செயல் நீதிமன்றத்துக்கு அப்பால் வேறிடத்தில் நடைபெற்றது. எனவே, அது பற்றி விசாரிக்கவோ, பரிசீலிக்கவோ, விளக்கமறியலில் வைக்கும் உத்தரவைப் பிறப்பிக்கவோ சம்பந்தப்பட்ட நீதிவான் நீதிமன்றத்துக்கு நியாயாதிக்கமே கிடையாது. கடந்த வழக்குத் தவணையின் போது இதனை நீதிமன்றத்துக்குச் சுட்டிக் காட்டுவதற்கு வேலையில்லாப் பட்டதாரிகள் சார்பில் சட்டத்தரணிகள் சார்பில் எவரும் முன்னிலையாகாதமையே காரணம் என்ற அடிப்படையில் சட்டத்தரணி சுமந்திரன் தமது வாதத்தை இன்று நீதிமன்றத்தில் முன்வைப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போது கைதாகி விளக்கமறியலில் இருக்கும் நான்கு வேலையில்லாப் பட்டதாரிகளில் ஒருவர் பௌத்த பிக்கு. மற்றொருவர் முஸ்லிம், மற்றிருவரும் தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# கடல் வழி பாதுகாப்புத் தொடர்பில் கவனம் செலுத்தவுள்ளது இலங்கை!



**ஆஸியிடம் உறுதியளித்தார் ஜனாதிபதி**

கொழும்பு, மே 29

கடல் வழி ஆள்கடத்தல் மற்றும் கடல் கொள்ளைக்கு எதிராகச் செயற்படுவதில் இலங்கை அரசு உறுதி பூண்டுள்ளது என்று, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆஸ்திரேலியாவிடம் உறுதியளித்துள்ளார்.

சிட்னியில் ஆஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சர் மரிசே பேனேயைச் சந்தித்துப் பேச்சு நடத்திய போதே இந்த வாக்குறுதியை ஜனாதிபதி அளித்திருந்தார்.

கடல்சார் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கு இலங்கை முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என்றும் ஆஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சரிடம் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இதன்போது, கடல்சார் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கு இலங்கைக்கு ஆஸ்திரேலியா நெருக்கமான ஒத்துழைப்பை வழங்கும் என்றும் இலங்கை கடற்படை மற்றும் கடலோரக் காவல் படைக்குத் தேவையான உதவிகளை வழங்கும் என்றும் ஆஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

அதேவேளை, இலங்கை இராணுவ கடற்படை அதிகாரிகளுக்கு ஆஸ்திரேலியா தற்போது பயிற்சிகளை அளித்து வருகிறது. இந்த நிலையில், இலங்கை இராணுவத்தின் நடுத்தரநிலை மற்றும் மூத்த அதிகாரிகளுக்கும் பயிற்சிகளை விரிவாக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி கேட்டுக் கொண்டார். இந்தக் கோரிக்கைக்கும், ஆஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சர் இணக்கம் தெரிவித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# இலங்கை அனர்த்தத்துக்கு ரஷ்ய ஜனாதிபதி இரங்கல்!

கொழும்பு, மே 29

இலங்கையில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களுக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் இரங்கல் வெளியிட்டுள்ளார்.

மழை வெள்ளம் மற்றும் மண்சரிவு உள்ளிட்ட இயற்கை சீற்றத்தால் இலங்கையில் ஏற்பட்டுள்ள அழிவுகள் கவலையளிக்கும் வகையில் அமைந்துள்ளன என்று அவர் தெரிவித்துள்ளார்.

சீரற்ற காலநிலை காரணமாக இலங்கையில் நூற்றுக்கணக்கில் இறப்புகள் ஏற்பட்டுள்ளன. சொத்துக்களுக்கு பெரியளவில் சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், இயற்கை அனர்த்தம் காரணமாக உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும் பாதிக்கப்பட்டோருக்கும் ஆழ்ந்த இரங்கல்களை வெளியிட்டுக் கொள்கிறார் என்றும் பாதிக்கப்பட்டோருக்காகப் பிரார்த்தனை செய்கிறார் என்றும் ஜனாதிபதி புடின் உத்தியோகபூர்வமாக இலங்கை அரசுக்கு அறிவித்துள்ளார். (ஐ)

# நாளை மின் தடை

யாழ்ப்பாணம், மே29

நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணி வரை மன்னார் பிரதேசத்தில் பள்ளமடுவிலிருந்து வெள்ளாங்குளம், விடத்தற் தீவு கிராமம், கள்ளியடி, இலுப்பைக்கடவை, மூன்றாம்பிட்டி, தேவன்பிட்டி, கணேசபுரம், விடத்தற்தீவு வைத்தியசாலை ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)



# விசேட தேவையுடைய மாணவர்கள் நால்வர் போட்டிகளில் முதலிடங்கள்

வவுனியா, மே 29

விசேட தேவைக்குட்பட்ட மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் வவுனியா அல்- இக்பால் மகாவித்தியாலய மாணவர்கள் நால்வர் முதலிடங்களைப் பெற்றுள்ளனர்.

வவுனியா தெற்கு வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்கும் விசேட தேவைக்கு உட்பட்ட மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் அல் - இக்பால் மகா வித்தியாலய மாணவர்கள் நால்வர் முதலாமிடம் பெற்றுள்ளனர்.

வவுனியா தெற்கு வலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட தேவைக்குட்பட்ட மாணவர்களுக்கான 100 மீற்றர் ஓட்டம், 60 மீற்றர் ஓட்டம், நீர் நிரப்புதல், நிறம் தீட்டுதல் ஆகியவற்றிலேயே இந்தப் பாடசாலை மாணவர்கள் நால்வர் முதலாமிடத்தைப் பெற்றுள்ளனர். (ஐ-100)

# புதிய வெளிவிவகார அமைச்சருடன் பேச்சு நடத்தினார் இந்தியத் தூதுவர்

கொழும்பு, மே 29

இலங்கையின் புதிய வெளிவிவகார அமைச்சராகப் பொறுப்பேற்ற ரவி கருணாநாயக்கவுக்கு, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து முதன் முதலில் நேரில் வாழ்த்துக்களைத் தெரிவித்து, பேச்சு நடத்தியுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை இலங்கையின் புதிய நிதியமைச்சராக நியமிக்கப்பட்ட ரவி கருணாநாயக்க கடந்த வெள்ளிக்கிழமை, வெளி விவகார அமைச்சில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றிருந்தார்.

இதையடுத்து, அவரை இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து, மலர்க்கொத்துக் கொடுத்து வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

அத்துடன், இருதரப்பு விவகாரங்கள் தொடர்பாக ரவி கருணாநாயக்கவுடன், இந்தியத் தூதுவர் பேச்சு நடத்தியுள்ளார்.

புதிய வெளிவிவகார அமைச்சருக்கு முதன் முதலில் இந்தியத் தூதுவரே வாழ்த்துத் தெரிவித்து, அவருடன் முறைப்படியான பேச்சுகளையும் நடத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



# இலங்கையுடன் தொடர்பு வைத்துள்ள சர்வதேச சிறுநீரக மோசடி குழுவினர்!

**குற்றஞ்சுமத்தும் இந்தியா விசாரணைக் குழு அனுப்பவும் முடிவு**

கொழும்பு, மே 29

சர்வதேச சிறுநீரக மோசடிக் குழுவினருக்கும் இலங்கைக்கும் இடையில் தொடர்புகள் இருக்கின்றன என்று இந்திய பொலிஸார் குற்றம் சுமத்தியுள்ளனர்.

சிறுநீரக மோசடியில் ஈடுபட்ட நால்வரை இந்திய பொலிஸார் கடந்த வியாழக்கிழமை கைது செய்துள்ளனர்.

சிறுநீரக மோசடியில் ஈடுபட்ட அந்த நால்வரிடம் இடம்பெற்ற விசாரணைகளை தொடர்ந்தே, சம்பவம் தொடர்பில் இலங்கைக்கும் தொடர்பு இருப்பது தெரியவந்துள்ளது என்று இந்திய பொலிஸார் குற்றம் சுமத்தியுள்ளனர்.


எனவே, இது குறித்து விசாரணை செய்வதற்காக விசேட பொலிஸ் குழுவொன்றை இலங்கைக்கு அனுப்பவுள்ளதாக என்று இந்திய சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் கூறியுள்ளார்.

சிறுநீரகங்களை தானம் செய்தவர்கள், கொழும்புக்குச் சென்று அங்குள்ள வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை செய்துள்ளனர் என்றும், விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது என்று இந்திய பொலிஸார் கூறியுள்ளனர்.

இதேவேளை, கடந்த வருடம் மார்ச் மாதம் விசா சட்டங்களை மீறி இலங்கையில் தங்கியிருந்த 8 இந்திய பிரஜைகள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

சந்தேகநபர்களின் சந்தேகத்துக்கிடமான செயற்பாடுகள் காரணமாக அவர்கள் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். எட்டு பேரில் ஆறு பேரின் சிறுநீரகங்கள் தலா ஒன்று வீதம் அகற்றப்பட்டுள்ளது என்று சட்ட மருத்துவ அதிகாரி தெரிவித்திருந்தார்.

பின்னர், கொழும்பில் உள்ள வைத்தியசாலையில் அவர்கள் சிறுநீரக சத்திரசிகிச்சை மேற்கொண்டமை பின்னர் தெரியவந்துள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)



இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய தேர்த்திருவிழா நேற்று இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.




# ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் செயற்குழுக் கூட்டம் நேற்று வவுனியாவில்

## சமகால விடயங்கள் ஆராயப்பட்டன



வவுனியா, மே 29

புளொட்டின் அரசியல் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் செயற்குழுக் கூட்டம் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தலைமையில் நேற்று முற்பகல் 10.30 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரையில் கட்சியின் வவுனியா மாவட்டத் தலைமையகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இன்றைய அரசியல் நிலைமைகள் தொடர்பாகவும், அரசமைப்பை மாற்றும் முயற்சிகள், அவ்விடயத்தில் எதிர்நோக்குகின்ற சவால்கள் ஆகிய பற்றியும் கட்சியின் தலைவர் சித்தார்த்தன் விளக்கிக் கூறினார்.

அத்துடன் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம், இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள காணிப் பிரச்சினைகள், சிறைச்சாலைகளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, வேலைவாய்ப்புப் பிரச்சினை என்பன குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

மேற்படி விடயங்கள் தொடர்பாக கட்சி அங்கத்தவர்கள் காரசாரமாக தமது கருத்துக்களை முன்வைத்தனர் எனவும், இப்பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வைக் காண்பதற்கான முயற்சிகளைத் தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டுமெனச் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது எனவும் கட்சி விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# சமூகசேவையாளர் பாலராமன் காலமானார்



யாழ்ப்பாணம், மே 29

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் கொழும்புக் கிளையின் ஸ்தாபகத் தலைவரும் சமூக சேவையாளரும் இலங்கை வங்கி வெள்ளவத்தை கிளையின் முன்னாள் முகாமையாளருமான என். பாலராமன் காலமானார்.

சுகவீனமுற்றிருந்த நிலையில் சிகிச்சை பெற்றுவந்த அவர், சிகிச்சை பலனின்றி தனது 71 ஆவது வயதில் காலமாகியுள்ளார்.

பல்வேறு சமய, சமூகப் பணிகளில் ஈடுபட்டு வந்த இவர், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் பல்வேறு உதவிகளை வழங்கிவந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்னாரது பூதவுடல் வெள்ளவத்தை, ஈ.ஏ.கூரே மாவத்தையிலுள்ள அவரது வீட்டில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும் என்று உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

# மீட்புப் பணிக்காக களுத்துறைக்கு ஹெலியில் காவிச் செல்லப்பட்ட படகு



கொழும்பு, மே 29

களுத்துறை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கில் சிக்கிய மக்களை மீட்பதற்காக விமானப் படையின் ஹெலிக்கொப்டர் மூலம் நேற்று அங்கு பிளாஸ்ரிக் படகு ஒன்று கொண்டு செல்லப் பட்டது.

நாட்டின் தென்பகுதியில் கடந்த சில தினங்களாகப் பெய்த பேய் மழை, அதனால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்குக் காரணமாகப் பல லட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். சில கிராமங்களை வெள்ளம் சூழ்ந்து கொண்டதால் அங்குள்ள மக்களை மீட்பதற்கு விமானப் படையினர் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

களுத்துறை மாவட்டத்தில் பல கிராமங்கள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளன. அங்கு ஆபத்தான நிலையில் உள்ள மக்களை மீட்பதற்காக நேற்று கட்டுகுருந்த விமானப்படை முகாமில் இருந்து ஹெலிக்கொப்டர் மூலமாக சிறிய படகொன்று கொண்டு செல்லப்பட்டது.

வீதியால் பயணிக்கும் போது ஏற்படும் தடை மற்றும் தாமதத்தைத் தவிர்ப்பதற்காகவே இவ்வாறு விமானம் மூலம் படகு கொண்டு செல்லப்பட்டுள்ளது. ஹெலிக்கொப்டர் மூலம் படகு கொண்டு செல்லப்பட்ட புகைப் படங்கள் வெளியாகியுள்ளன.

அனர்த்தம் ஒன்றில் சிக்கிய மக்களை மீட்பதற்காக இலங்கை விமானப்படை ஹெலிக்கொப்டர் மூலம் படகு ஒன்றைக் கொண்டு சென்றது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# காலியில் பாதிப்புற்றோருக்கு கைதிகள் உணவு தயாரிப்பு




காலி மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ அங்குள்ள சிறைச்சாலைக் கைதிகளும் களமிறங்கியுள்ளனர்.

இயற்கை அனர்த்தம் காரணமாக காலியில் பலர் உயிரிழந்ததுடன் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறைக் கைதிகள் உணவு சமைத்து பார்சல்களாகத் தயாரித்து அனுப்பி வருகின்றனர்.

காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மனுஸ நாணயக்காரவும் கைதிகள் உணவு தயாரிக்கும் செயற்பாட்டில் கலந்துகொண்டார் எனத் தெரியவருகின்றது. (ம)

CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



CNR World Wide Express
021 5674145
077 2931362

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல. 30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சௌராப் பப்ளிகேசன் (ஜேர்வேர்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில், தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.05.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.